தரம்

# 9

# இஸ்லாம்

## ஆசிரியர் வழிகாட்டி

(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்தப்படும்)




சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம, இலங்கை

Web| www.nie.lk Email| info@nie.lk

# இஸ்லாம்

## தரம் - 09

## ஆசிரியர் வழிகாட்டி

**(2018 ஆம் ஆண்டிலிருந்து நடைமுறைப்படுத்துவதற்கானது)**

**Islam - Teachers' Guide - Grade 09**

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

www.nie.lk

இஸ்லாம்

தரம் 9
ஆசிரியர் வழிகாட்டி

முதலாம் பதிப்பு **2017**

© தேசிய கல்வி நிறுவகம்

ISBN :

சமயங்கள் மற்றும் விழுமியங்கள் கல்வித் துறை

தேசிய கல்வி நிறுவகம்

ஸ்ரீலங்கா

இணையத் தளம் : www.nie.lk
மின்னஞ்சல் info@nie.lk

பதிப்பு :
தேசிய கல்வி நிறுவகம்

## பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

2007 ஆம் ஆண்டு நடைமுறையிலிருந்த உள்ளடக்கத்தை அடிப்படையாகக் கொண்ட பாடவிதானத்தை நவீனப்படுத்தி, தேசிய கல்வி நிறுவகம், ஆரம்ப, இடைநிலை கல்விப் பரப்புகளின் எட்டு வருட சுழற்சி முறையான, புதிய தேசியமட்ட பாடவிதானத்தின் முதல் பாகத்தினை அறிமுகப்படுத்தியது. தேசிய கல்வி ஆணைக்குழுவினால் முன்மொழியப்பட்ட தேசிய கல்வி இலக்குகளை அடிப்படை நோக்காகக் கொண்டு, இது செயற்படுத்தப்பட்டதுடன் பொதுத் தேர்ச்சிகளை விருத்தி செய்து வந்தது.

பல்வேறுபட்ட கல்வியாளர்களால் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளினதும், கருத்துக் களினதும் பொருத்தப்பாட்டுடன் பகுத்தறிவு வாதத்தினை அடிப்படையாகக் கொண்டு பாடவிதானம் நடைமுறைப்படுத்தப்பட்டது. அதன் தொடர்ச்சியாகப் பாடவிதானச் சுழற்சியின் இரண்டாம்பாகம் 2015 ஆம் ஆண்டில் இருந்து கல்வி முறையில் அறிமுகப்படுத்தப்பட்டு வருகின்றது.

இந்தப் பகுத்தறிவுவாத நடைமுறையின் கடை நிலையில் இருந்து உயர்நிலை வரை அனைத்துப் பாடங்களிலும் ஒழுங்குபடுத்தப்பட்ட முறையில் தேர்ச்சிகளை வளர்த்தெடுப்பதற்காக, கீழிருந்து மேல்நோக்கிய நடைமுறைப்படுத்தப்படும் அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது. ஒரே பாடத்தின் உள்ளடக்கத்தினை ஏனைய பாடங்களிலும் மீண்டும் பாவிப்பதனைக் குறைப்பதற்காகவும், பாடத்தின் நோக்கங்களை மட்டுப்படுத்துவதற்காகவும், செயற்படுத்தக்கூடியதான மாணவர் மையப் பாடவிதானம் ஒன்றை உருவாக்கும் நோக்கிலும் கிடையான ஒருங்கிணைப்பானது செயற்பட்டு வருகின்றது.

ஆசிரியர்களிற்கு, அவர்களது வகுப்பறைக் கற்பித்தல்களை வழிப்படுத்துவதற்கு அவசியமான வழிகாட்டுதல்களை வழங்குவதற்காகவும், தங்களைக் கற்றல் - கற்பித்தல் செயற்பாடுகளில் பொருத்தப்பாட்டுடன் ஈடுபடுத்திக்கொள்வதற்காகவும், வகுப்பறை அளவீடு களையும் மதிப்பீடுகளையும் பொருத்தமாகப் பயன்படுத்திக் கொள்வதனை நோக்கமாகக் கொண்டு புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் அறிமுகப்படுத்தப்படுகிறது. இந்த வழிகாட்டி. நூல்கள், ஆசிரியரை ஒரு பொருத்தப்பாடுடைய ஆசிரியராக வகுப்பறையில் செயற்பட வைக்கின்றது. இந்த வழிகாட்டி நூல்களினூடாக, ஆசிரியர்கள் தங்கள் மாணவர்களின் தேர்ச்சிகளை வளர்த்தெடுக்கத் தேவையான தர உள்ளீடுகளையும், செயற்பாடுகளையும் தாங்களாகவே தெரிந்தெடுக்கும் சுதந்திரத்தினையும் பெற்றுக்கொள்கின்றனர். விதந்துரைக் கப்பட்ட பாடப்பரப்புக்களின் பாரிய சுமைகள் இல்லாதொழிக்கப்படுகிறது. ஆதலால், இப்புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள் முழுப்பயன்பாடு உடையவையாவதற்கு, கல்வி வெளியீட்டாளர்களினால் வெளியிடப்படும் விதந்துரைக்கப்பட்ட பாட நூல்களின் உச்சப்பயன் பாட்டினைப் பெற்றுக்கொள்வது அவசியமாகின்றது.

இப்புதிய பகுத்தறிவுவாத பாடவிதானத்தினதும், புதிய ஆசிரிய வழிகாட்டி நூல்கள்,

புதிய பாடநூல்களினதும் அடிப்படைக் குறிக்கோள், மாணவர்களை ஆசிரிய மையக் கல்வியிலிருந்து விடுவித்து, செயற்பாடுகளுடன் கூடிய மாணவர் மையக்கல்வியினை நடைமுறைப்படுத்தக்கூடிய கல்வி முறைமையினால், பூகோள தொழில் சந்தைகளுக்கு தேவையான தேர்ச்சிகளும் திறன்களும் மிக்க மனித வளத்தினை வழங்கக்கூடிய மாணவர் களின் எண்ணிக்கையினை விருத்தி செய்யக்கூடியதாயிருத்தலேயாகும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் இந்நிறுவகப் பேரவையின் அங்கத்தவர்களுக்கும், கல்வி அலுவல்கள் சபையின் அங்கத்தவர்களுக்கும், இவ்வாசிரியர் வழிகாட்டி நூல்களின் உருவாக்கத்திற்குப் பங்களிப்புச் செய்த வளவாளர்களுக்கும் மற்றும் இவ்வுயரிய நோக்கத்திற்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றிய அனைவருக்கும் எனது நன்றிகளையும், வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கலாநிதி. திருமதி. ஜெயந்தி குணசேகர
பணிப்பாளர் நாயகம்
தேசிய கல்வி நிறுவகம்
மகரகம.

## பிரதிப் பணிப்பாளர் நாயகம் அவர்களின் செய்தி

கற்றல் என்பது பரந்து விரிந்து செல்வதொன்றாகும். அது வாழ்க்கையை மேம்படுத்தவும் எளிமைப்படுத்தவும் வல்லது. மனிதன் கற்கும் ஆற்றலில் உச்ச நிலையில் உள்ளான். மனித, சமூக அபிவிருத்தியை மையமாகக் கொண்ட ஒரு நாடும் அதன் சமூகமும் அறிவாற்றலினால் இனங்கண்ட, நியமமற்றவற்றைக் களைவதற்கும். நல்லவற்றைப் பண்படுத்திப் புத்துலகைப் படைப்பதற்கான கருவியாய் அமைவது கல்வியாகும்.

கற்றலுக்காகப் பெறுமதிமிக்கவை எவையோ அவையும், கற்றல் முறையியல்களும் வசதிகளும் கல்வியைச் சூழ உருவாதல் வேண்டும். கலைத்திட்டம், பாடத்திட்டம், வழிகாட்டிகள், வசதி செய்வோர் போன்றவையெல்லாம் இவ்வகையிலேயே கல்வித்துறையிற் சேர்ந்து கொள்கின்றன.

இலங்கை, நவீன செல்நெறிகளையும் பண்டைய அருஞ்செல்வங்களையும் கலக்கச் செய்து தமது கல்விக்கோலத்தை உருவாக்கிக்கொண்டுள்ளது. சமகாலத் தேவைகளுக்கமைய மறுசீரமைப்புகளினூடாக எட்டு ஆண்டுகளுக்கொருதடவை இற்றைப்படுத்தப்படும் கலைத்திட்டத்துக்குரிய ஒரு கற்றல் வளமாக இவ்வாசிரியர் வழிகாட்டிகள் தயாரிக்கப்படுகின்றன.

பாடக் குறிக்கோள்களின் ஒத்ததன்மையை தேசிய மட்டத்தில் பேணுவது அவசியமாகும். எனினும், ஆசிரியர் வழிகாட்டியிற் தரப்பட்டுள்ள கற்றல் முறையியல்கள் சற்றேனும் பிசகாது அச்சொட்டாகப் பயன்படுத்துவதற்குரிவையன்று. பாடத்திட்டத்தின் தேர்ச்சிகள், தேர்ச்சி மட்டங்களை அடைவதற்காகப் பாடவிடயங்களின் மூலம் கற்றற் பேறுகளை அண்மிப்பதற்காகக் கற்றல் முறையியல்களை ஆக்கபூர்வமானதாக மாற்றியமைத்துக் கொள்வதற்கான சுதந்திரம் வசதி செய்து கொடுப்போருக்கு உண்டு என்பதில் ஐயமில்லை. மாணவரது அடைவுச் சதவீதத்தை உயரிய மட்டத்திற்கு இட்டுச் செல்ல உதவும் மற்றும் அதற்கான வசதிகளைச் செய்து கொடுக்கும் ஆசிரியரது வகிபாகத்திற்கு உந்துதலளிப்பதற்காகத் தயாரிக்கப்பட்டுள்ள ஆசிரியர் வழிகாட்டியை ஆசிரியர்கள் மட்டுமன்றி மாணவரும் பெற்றோரும் கூடப் பயன்படுத்தலாம். குறித்த பாடத்தின் பாடநூலுக்குத் துணையாக அமையும் ஒரு சாதனமான இவ்வாசிரியர் வழிகாட்டி, மற்றுமொரு பாடநூல் அன்று என்பதை அறிந்து பாடநூல், ஆசிரியர் வழிகாட்டி ஆகிய இரண்டையும் ஆசிரியர்கள் பயன்படுத்த வேண்டும்.

அந்தந்தப் பாடத்தின் அடைவு தொடர்பில், தேசிய நிலைப் பரீட்சகர்களால் எதிர்பார்க்கப்பெறும் அடைவுகளை, மாணவர்கள் அடைந்துள்ளனரா என்பது பற்றிப் பாடநிறைவில் வகுப்பறையில் வசதி செய்து கொடுப்பவர்களால் மதிப்பிடப் பெறுதல் வேண்டும். களிப்பூட்டத்தக்க செழுமையான பண்பாட்டைக் கட்டியெழுப்புவதற்கான ஒரு கருவியாக இவ்வாசிரியர் வழிகாட்டி அமைய வேண்டுமெனப் பிரார்த்திக்கின்றேன்.

சங்கைக்குரிய கலாநிதி மாபுல்கொட சுமனரத்ன தேரர்

பீடாதிபதி, பிரதிப் பணிப்பாளர் நாயகம்
மொழிகள், மானுடவியல் மற்றும் சமூக விஞ்ஞான பீடம்
தேசிய கல்வி நிறுவகம்

## வளப்பங்களிப்பு / கலைத்திட்டக் குழு

**வழிகாட்டலும் அனுமதியும்**

**கல்வி சார் அலுவல்கள் சபை**
**தேசிய கல்வி நிறுவகம்**

**இணைப்பாக்கம்**

**அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
விரிவுரையாளர்
சமயங்கள் மற்றும் விழுமியக் கல்வித் துறை

**விடய ஆலோசனை**

**கலாநிதி எம்.ஏ.எம்.சுக்ரி**
பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**அஷ்ஷெய்க் ஏ.ஸீ. அகார் முஹம்மத்**
பிரதிப் பணிப்பாளர்
நளீமிய்யா இஸ்லாமிய கலாபீடம், பேருவளை

**மௌலவி ஏ.எல்.எம். அலியார்**
பிரதிநிதி, கல்விக் குழு,
அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா
பீடாதிபதி,
அறபு மற்றும் இஸ்லாமிய கற்கைகளுக்கான பீடம்,
தென்கிழக்குப் பல்கலைக்கழகம்

**மௌலவி எம்.ரீ. இக்பால்**
ஆசிரிய ஆலோசகர் - இஸ்லாம்
கொழும்பு கல்வி வலயம்

**எழுத்தாளர் குழு**

**உள்ளக** **அஷ்ஷெய்க் ஜே.எம்.ஜெஸார்**
தேசிய கல்வி நிறுவகம்

**வெளியக** **அஷ்ஷேய்க் எம்.எச்.எம். புஹாரி**,
ஆசிரிய ஆலோசகர், மினுவங்கொட கல்வி வலயம்

**எம்.எச்.எம். நாளிர்**
ஓய்வுபெற்ற ஆசிரியர்.

**எம்.எஸ்.எம். அனஸ்**
ஓய்வு பெற்ற ஆசிரியர்

**அஷ்ஷேய்க்எம்.எம்.பஸ்லுர் ரஹ்மான்**
ஆசிரியர், பாபுஸ்ஸலாம் மு. வி, நாம்புளுவ.

**எம்.எம்.முகர்ரம்**
எல்லலமுள்ள ஸாஹிரா மு.வி, பஸ்யால

**மௌலவி எம்.எஸ்.ஏ. நாளிம்**
பிரதிநிதி, அகில இலங்கை ஜம்இய்யதுல் உலமா

**அஷ்ஷேய்க் எஸ்.ஏ.எம். றிஸ்வி**
ஆசிரியர், அல்ஹிக்மா கல்லூரி, கொழும்பு.

**எம்.எப்.எம்.பாஹிம்**
ஆசிரிய ஆலோசகர், மினுவன்கொட கல்வி வலயம்.

## ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள்

ஆசிரியர் வழிகாட்டி, பாடத்திட்டத்தை உரிய முறையில் அமுல்படுத்தும் செயன்முறையை உறுதிப்படுத்துவதை இலக்காகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளது. மறு சீரமைக்கப்பட்ட பாடத்திட்டம் மாணவர்களிடம் எதிர்பார்க்கும் அடைவு மட்டங்களையும் அதனை அடைந்து கொள்ளுவதற்குப் பயன்படுத்தக்கூடிய செயன்முறையையும் இது விளக்குகிறது. மேலும் எதிர்பார்க்கப்பட்ட அடைவுகள் குறித்து மதிப்பிடுவதற்கும் ஆசிரியருக்கு இது உதவுகிறது.

இந்த ஆசிரியர் வழிகாட்டி கற்றல் கற்பித்தல் செயற்பாட்டைத் திட்டமிடும் பொறுப்பை முழுமையாக ஆசிரியரிடம் ஒப்படைக்கிறது. எனவே குறிக்கப்பட்ட கற்றல் பேறுகளை அடைந்து கொள்வதற்காக ஆசிரியர் பொருத்தமான கற்பித்தல் முறையொன்றைப் பயன்படுத்திக்கொள்ளுவதற்கான சுதந்திரத்தை இது வழங்குகின்றது.

இஸ்லாம் பாட கற்றல் கற்பித்தல் செயன்முறையைத் திட்டமிடும்போது அறிவு, திறன் மாத்திரமன்றி மனவெழுச்சி சார் கூறுகளில் மாற்றங்களை ஏற்படுத்துவதை இலக்காகக் கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கப்படும் அதேவேளை இவ்வாசிரியர் வழிகாட்டி அதற்குத் தேவையான அடிப்படை அம்சங்கள் குறித்து வழிகாட்டுகின்றது.

அத்தோடு உரிய தேர்ச்சி மட்டத்தை அடைந்து கொள்ளுவதற்காக விடய உள்ளடக்கத்தை வழங்குவதற்குத் தேவையான காலப்பகுதியைச் சுயாதீனமாகத் தீர்மானித்துக்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியருக்கு வழங்கப்பட்டுள்ளது. ஆனால் தேர்ச்சி மட்டம் மற்றும் கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு பாடத்தின் எல்லையை வரையறுத்துக்கொள்வது பாடத்தைத் திட்டமிட இலகுவாக அமையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கற்றல் - கற்பித்தலின் போது மாணவர்களின் தேடலை மேம்படுத்துவதற்காகக் குழு ரீதியான செயற்பாடுகள் உதவுகின்றன. இக்குழுச் செயற்பாடுகளுக்குத் தேவையான நூல்கள் மற்றும் ஏனைய வளங்களைப் பாடசாலைச் சூழலில் பெற்றுக்கொள்ளக் கூடிய நிலையினை ஏற்படுத்துவதனூடாகத் திட்டமிடப்பட்ட இலக்கை அடைவதை உறுதிப்படுத்த முடியும்.

இவ்வழிகாட்டி ஆசிரியருக்கான வழிகாட்டல் குறிப்புக்களை கொண்டுள்ளதே தவிர மாணவர்களுக்கான மேலதிக வாசிப்புக்கானதல்ல என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். மாணவர் - ஆசிரியர் - பெற்றோர் என்ற தொடர்பை வலுப்படுத்தி மாணவர் செயற்பாட்டை வீட்டுச் சூழலுடன் இணைக்கும் வகையில் பாடத்தைத் திட்டமிடுவதற்கான வழிகாட்டலின் இறுதிப் பகுதியில் வீட்டுச் சூழலில் பின்தொடர் செயற்பாடு என்ற பகுதி இணைக்கப்பட்டுள்ளது. இது ஒரு பரீட்சார்த்த முயற்சியாகும். கற்றல் கற்பித்தல் நடவடிக்கைகளில் பெற்றோரின் பரஸ்பர ஈடுபாடும் அனுபவப் பகிர்வும் பிள்ளைகளின் கற்றலை மேலும் வளப்படுத்தும் என நாம் நாம்புகிறோம். ஆனால் இப்பகுதி பிள்ளைகளுக்கு மேலதிக சுமையாக அமையாத வகையில் அமுல்படுத்தப்பட வேண்டும் என வலியுறுத்துகிறோம். அத்தோடு பிரதேசத்தின் தன்மை, மாணவரின் அனுபவம், பெற்றோரின் ஈடுபாடு முதலான காரணிகளை முன்வைத்து இச்செயற்பாடுகளில் பொருத்தமான மாற்றங்களை மேற்கொள்ளும் சுதந்திரம் ஆசிரியர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கல்வி மறுசீரமைப்பின் ஊடாக எதிர்பார்க்கப்படும் மற்றங்களை அடைந்து கொள்ளும் வகையில் மாணவரின் சிந்திக்கும் ஆற்றல், சமூகத் திறன்கள், தனியாள் திறன்கள் என்பவற்றை விருத்தி செய்து கொள்ளும் வகையில் பயன்மிக்க கற்பித்தலின் ஊடாக சிறந்ததொரு எதிர்காலச் சந்ததியை உருவாக்குவதே எமது எதிர்பார்ப்பாகும்.

செயற்றிட்டத் தலைவர்

**தரவிருத்தி உள்ளீடுள்**

- டிமை கடதாசி
- ஃபெலற் பேனாக்கள்
- எழுது கடதாசி
- பென்சில்கள்
- அடிமட்டம்
- றெஜிபோம்
- பிறிஸ்டல் போர்ட்
- ஒலி / ஒளி நாடாக்கள்
- இறுவட்டுக்கள்
- பசை நாடாக்கள்
- இணையத்தளங்கள்

**நூல்கள்**

- தர்ஜமதுல் குர்ஆன் - அப்துல் ஹமீத் பாகவி
- றியாழுஸ் ஸாலிஹீன்- இமாம் நவவி (ரஹ்) தமிழ் மொழி பெயர்ப்பு
- நபி மொழி திரட்டிய நல்லவர்கள் - முஹம்மது முஸ்தபா
- முன்மாதிரி முஸ்லிம் - முஹம்மத் அலி அல் ஹாஷிமி
- அமல்களின் சிறப்பு - மௌலானா ஸகரிய்யா ஸாஹிப் (ரஹ்)
- ஒழுக்க மாண்புகள் - ஷெய்க் முகம்மத் அல் கஸ்ஸாலி
- வாழ்க்கைக் கலை - மௌலானா முஹம்மத் யூசுப் இஸ்லாஹி
- அர்ரஹீக் - எஸ். முபாரக் பூரி
- நபிகளாரின் துணைவியர் முஃமின்களின் அன்னையர் - மௌலவி முகம்மத் யூசுப்
- இஸ்லாத்தில் இறை நம்பிக்கை - ஹஸன் ஐயூப்
- குத்பாக்களின் தொகுப்பு - வாமி வெளியீடு
- நாற்பது நபிமொழிகள் - இமாம் நவவி
- நபித் தோழியர் வரலாறு - மௌலவி மஸ்தான் அலி பாகவி
- அல்குர்ஆன் ஓர் அறிமுகம் - ஏ.எல்.பீர் முஹம்மது
- மறுவிலா முழுமதி நபிகள் நாயம் (ஸல்) அவர்கள் - ஜமால்
- முதல் இறைத் தூதர் நூஹ் (அலை) - மௌலவி அப்துர் ரஹ்மான் உமரி
- நபிமார்கள் வரலாறு - வாமி வெளியீடு

# உள்ளடக்கம்


பக்கம்

- பணிப்பாளர் நாயகத்தின் செய்தி iii-vi
- பிரதிப் பணிப்பாளர் நாயகத்தின் செய்தி v
- கலைத்திட்டக் குழு vi
- ஆசிரியர் வழிகாட்டியைப் பயன்படுத்துவதற்கான ஆலோசனைகள் vii

அறிமுகம் x
தேசிய இலக்குகள் xi
அடிப்படைத் தேர்ச்சிகள் xii-xiii
பாடத்திட்டத்தின் நோக்கங்கள் xiv
பாடத்திட்டம் xvi-xxvi
கற்றல் கற்பித்தல் முறை xxv-xxvi
பாடசாலைக் கொள்கையும் வேலைத்திட்டமும் xxvi-xxviii
கணிப்பீடும் மதிப்பீடும் xxix

- கற்றல் கற்பித்தல் செயற்பாட்டுக்கான வழிகாட்டல்கள் 1-77

## 1.0 அறிமுகம்

மனிதன் உடல், அறிவு, ஆன்மா ஆகிய மூன்றையும் உள்ளடக்கியவன். இவற்றுக்கிடையில் சமநிலை பேணப்படும்போதுதான், முழுமையான ஆளுமை விருத்தியடைய முடியும். இந்த நிலைப்பாட்டிலேயே இஸ்லாம் மனிதனின் ஆன்மீக, தார்மீக வாழ்வுக்கான வழிகாட்டல்களையும் போதனைகளையும் வழங்கியிருக்கின்றது.

இன்றைய உலகம், விஞ்ஞான தொழிநுட்ப சாதனங்களுக்கூடாகப் பெருவாரியான மாற்றங்களைக் கண்டு வருகின்றது. விஞ்ஞானத்தின் வளர்ச்சி உடல், அறிவு என்பவற்றைப் போஷிக்கும் அதேவேளை ஆன்மீகத்தைப் புறக்கணிக்கின்றது. ஆன்மீக வாழ்வு புறக்கணிக்கப்பட்டதன் காரணமாக மனித வாழ்வு அமைதியையும் மகிழ்வையும் இழந்து நிற்கின்றது.

கவலை, மன இறுக்கம், விரக்தி முதலான உளநோய்கள் மனிதனில் வேரூன்றி வருகின்றன. மனித விழுமியங்கள் புறக்கணிக்கப்பட்டதன் விளைவாக வாழ்வதற்கான உரிமைகூட கேள்விக்குட்படுத்தப்பட்டுள்ளது. சிந்தனைக்கன்றி உணர்வுகளுக்கு மாத்திரம் முன்னுரிமை வழங்கியதன் காரணமாக வன்முறை, கட்டற்ற நுகர்வு, சுரண்டல், மோசடி முதலானவை இறைவனைப் புறக்கணித்த வாழ்வுமுறைக்கு மனிதனைத் தள்ளிவிட்டுள்ளன.

இந்நிலையை அவதானித்து வரும் சிந்தனையாளர்களும் கல்வியியலாளர்களும் ஆன்மீகத்தினதும் விழுமியங்களினதும் அவசியத்தை வலியுறுத்தி வருகின்றனர். ஆன்மீக வறுமைக்குட்பட்டிருக்கும் மனித சமுதாயத்தை விடுவிக்கின்ற பயிற்சியை வழங்கும் பெரும் பணியை, சமய பாடத்திடமும் அதனை நடைமுறைப்படுத்தும் ஆசிரியர்களிடமும் எதிர்பார்க்கின்றனர்.

இந்தப் பின்னணியில் மனிதனின் தனிப்பட்ட, குடும்ப, சமூக, தேசிய வாழ்வு முறைகளில் சமயமும் அது சார்ந்த விழுமியங்களும் முக்கியத்துவம் பெற வேண்டிய தேவை எமது நாட்டிலும் உணரப்பட்டு வருகின்றது. நலிவுற்றிருக்கும் தார்மீக, ஆன்மீகப் பண்புகள், ஒழுக்க விழுமியங்கள் மீண்டும் வலுப்பெறுவதற்கான செயற்றிட்டங்களை வகுத்து முன்னெடுக்க வேண்டியதன் அவசியத்தைச் சமயத் தலைவர்கள் மட்டுமன்றி, கல்வியியலாளர்களும் உணர்த்தி வருகிறார்கள்.

வேகமாக மாறிவரும் உலகில் மானிடப் பெறுமானங்கள் தளர்ந்து விடாமல் பாதுகாப்பதற்கு கவர்ச்சிகரமான சமயப் போதனையும், ஆன்மீகப் பயிற்சியும் அவசர நடவடிக்கைகளாக விதந்துரைக்கப்படுகின்றன. எனவே, இஸ்லாம் பாடத்திற்கூடாகவும் மாணவரின் அறிவு, திறன், மனப்பாங்கு, தேர்ச்சி என்பன விருத்தி செய்யப்பட்டு அவை நடைமுறை வாழ்வில் பிணைந்து கொள்ளும் அளவிற்கு இஸ்லாம் பாடக் கற்றல் கற்பித்தல் செயன்முறை இடம்பெற வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இஸ்லாம் நிலையானதும், காலத்தால் மாறாததுமாகும். இருப்பினும் காலத்துக்குப் பொருத்தமான வகையில் ஷரீஆவைக் கற்பதற்கான உத்திகளையும் அணுகுமுறைகளையும் கையாள்வதனை அது தடுக்கவில்லை. எதிர்காலச் சந்ததியினர் இஸ்லாத்தினது தூதின் ஒளியில் பயணிப்பதற்கான பயிற்சியையும் அனுபவத்தையும் வழங்கும் வகையில் இஸ்லாம் பாடத்திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இந்த உயர்ந்த இலட்சியத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ள பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதில் எமது ஆசிரியர்களே பிரதான பங்குதாரர்களாவர். எனவே ஆசிரியர்கள் தமது பணியையும் பங்களிப்பையும் விருத்திசெய்துகொள்வதற்காகத் தம்மைத் தயார்படுத்திச் செயற்படுவார்கள் என நம்புகிறோம்.

## 2.0 கல்விக் குறிக்கோள்களும் தேர்ச்சிகளும்

### 2.1 தேசிய இலக்குகள்

தேசிய கல்வி முறைமையானது தனிநபர்க்கும் சமூகத்திற்கும் பொருத்தமான பெரும்பாலான தேசிய இலக்குகளை அடைவதற்குத் தனிநபர்களுக்கும் குழுவினருக்கும் உதவி செய்தல் வேண்டும்.

கடந்த காலங்களில் இலங்கையின் பெரும்பாலான கல்வி அறிக்கைகளும் ஆவணங்களும் தனிநபர் தேவைகளையும் தேசிய தேவைகளையும் நிறைவு செய்வதற்காக இலக்குகளை நிர்ணயித்துள்ளன. சமகாலக் கல்வி அமைப்புகளிலும் செயன்முறைகளிலும் வெளிப்படையாகக் காணப்படும் பலவீனங்கள் காரணமாக நிலைபேறுடைய மனித விருத்தியின் எண்ணக்கருத் திட்ட வரம்பினுள் கல்வியினூடாக அடையக் கூடிய பின்வரும் இலக்குத் தொகுதியினைத் தேசிய கல்வி ஆணைக்குழு இனங்கண்டுள்ளது.

1. மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் எனும் எண்ணக்கருவிற்குள் தேசிய பிணைப்பு, தேசிய முழுமை, தேசிய ஒற்றுமை, இணக்கம், சமாதானம் என்பவற்றை மேம்படுத்தல் மூலமும் இலங்கைப் பன்மைச் சமூகத்தின் கலாசார வேறுபாட்டினை அங்கீகரித்தல் மூலமும் தேசத்தைக் கட்டியெழுப்புதலும் இலங்கையர் எனும் அடையாளத்தை ஏற்படுத்தலும்.
2. மாற்றமுறும் உலகத்தின் சவால்களுக்குத் தக்கவாறு முகங்கொடுத்தலோடு தேசிய பாரம்பரியத்தின் அதிசிறந்த அம்சங்களை அங்கீகரித்தலும் பேணுதலும்.
3. மனித உரிமைகளுக்கு மதிப்பளித்தல், கடமைகள், கடப்பாடுகள் பற்றிய விழிப்புணர்வு, ஒருவர் மீது ஒருவர் கொண்டுள்ள ஆழ்ந்த, இடையறாத அக்கறையுணர்வு என்பவற்றை மேம்படுத்தும் சமூக நீதியும், ஜனநாயக வாழ்க்கை முறை நியமங்களும் உள்ளடங்கிய சுற்றாடலை உருவாக்குதலும் ஆதரித்தலும்.
4. ஒருவரது உள, உடல் நலனையும் மனித விழுமியங்களுக்கு மதிப்பளிப்பதை அடிப்படையாகக் கொண்ட நிலைபேறுடைய வாழ்க்கைக் கோலத்தையும் மேம்படுத்தல்.
5. நன்கு ஒன்றிணைக்கப்பட்ட சமநிலை ஆளுமைக்குரிய ஆக்கசிந்தனை, தற்றுணிவு, ஆய்ந்து சிந்தித்தல், பொறுப்பு, வகைகூறல், உடன்பாடான அம்சங்களை விருத்தி செய்தல்.
6. தனிநபரதும், தேசத்தினதும் வாழ்க்கைத் தரத்தை போஷிக்கக்கூடியதும், இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிக்கக்கூடியதுமான ஆக்கப் பணிகளுக்கான கல்வியூட்டுவதன் மூலம் மனிதவள அபிவிருத்தியை ஏற்படுத்தல்.
7. தனிநபர்களின் மாற்றத்திற்கு ஏற்ப இணங்கி வாழவும், மாற்றத்தை முகாமை செய்யவும், தயார்படுத்தவும் விரைவாக மாறிவரும் உலகில் சிக்கலானதும் எதிர்பாராததுமான நிலைமைகளைச் சமாளிக்கும் தகைமையை விருத்தி செய்தல்.
8. நீதி, சமத்துவம், பரஸ்பர மரியாதை என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு சர்வதேச சமூகத்தில் கௌரவமானதோர் இடத்தைப் பெறுவதற்குப் பங்களிக்கக்கூடிய மனப்பாங்குகளையும் திறன்களையும் வளர்த்தல்.

***தேசிய கல்வி ஆணைக்குழுவின் அறிக்கை (2003)***

## 3.0 அடிப்படைத் தேர்ச்சிகள்

கல்வியினூடாக விருத்தி செய்யப்படும் பின்வரும் அடிப்படைத் தேர்ச்சிகள் மேற்குறித்த தேசிய இலக்குகளை அடைவதற்கு வழிவகுக்கும்.

**(i) தொடர்பாடல் தேர்ச்சிகள்:**

தொடர்பாடல் பற்றிய தேர்ச்சிகள் நான்கு துணைத் தொகுதிகளை அடிப்படையாகக் கொண்டவை. எழுத்தறிவு, எண்ணறிவு, சித்திர அறிவு, தகவல் தொழில் நுட்பத் தகைமை.

எழுத்தறிவு : கவனமாகச் செவிமடுத்தல், தெளிவாகப் பேசுதல், கருத்தறிய வாசித்தல், சரியாகவும் செம்மையாகவும் எழுதுதல், பயன்தருவகையான கருத்துப் பரிமாற்றம்.

எண்ணறிவு : பொருள், இடம், காலம் என்பவற்றுக்கு எண்களைப் பயன்படுத்துதல்.
எண்ணுதல், கணித்தல், ஒழுங்குமுறையாக அளத்தல்.

சித்திர அறிவு : கோடு, உருவம் என்பவற்றின் கருத்தை அறிதல், விபரங்கள், அறிவுறுத்தல்கள், எண்ணங்கள் ஆகியவற்றை கோடு, உருவம், வர்ணம் என்பவற்றால் வெளிப்படுத்தலும் பதிவு செய்தலும்.

தகவல் தொழில் நுட்பத் தகைமை :
கணனி அறிவு கற்றலில், தொழில் சுற்றாடலில், சொந்த வாழ்வில் தகவல் தொடர்பாடல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துதல்.

**(ii) ஆளுமை விருத்தி தொடர்பான தேர்ச்சிகள்:**

- ஆக்கம், விரிந்த சிந்தனை, தற்றுணிபு, தீர்மானம் எடுத்தல், பிரச்சினை விடுவித்தல், நுணுக்கமான மற்றும் பகுப்பாய்வு சிந்தனை, அணியினராகப் பணிசெய்தல், தனியாள் இடைவினைத் தொடர்புகள், கண்டுபிடித்தலும் கண்டறிதலும் முதலான திறமைகள்.
- நேர்மை, சகிப்புத் தன்மை, மனித கௌரவத்தைக் கண்ணியப்படுத்தல் ஆகிய விழுமியங்கள்.
- மன எழுச்சிகள், நுண்ணறிவு.

**(iii) சூழல் தொடர்பான தேர்ச்சிகள்:**

இத்தேர்ச்சிகள் சூழலோடு தொடர்புறுகின்றன. சமூகம், உயிரியல், பௌதீகம்.

**சமூகச் சூழல்** :
தேசிய பாரம்பரியம் பற்றிய விழிப்புணர்வு, பன்மைச் சமூகத்தின் அங்கத்தவர்கள் என்ற வகையில் தொடர்புறும் நுண்ணுணர்வுத் திறன்களும், பகிர்ந்தளிக்கப்படும் நீதி, சமூகத் தொடர்புகள், தனிநபர் நடத்தைகள், பொதுவானதும் சட்டபூர்வமானதுமான சம்பிரதாயங்கள், உரிமைகள், பொறுப்புக்கள், கடமைகள், கடப்பாடுகள் என்பவற்றில் அக்கறை.

**உயிரியல் சூழல்** :
வாழும் உலகு, மக்கள், உயிரியல், சூழல் தொகுதி - மரங்கள், காடுகள், கடல், நீர், வளி, உயிரினத் தாவரம், விலங்கு, மனித வாழ்வு.

**பௌதீகச் சூழல்** :
இடம், சக்தி, எரிபொருள், சடப்பொருள், பொருட்கள் பற்றியும் அவை மனித வாழ்க்கை, உணவு, உடை, உறையுள், சுகாதாரம், சௌகரியம், சுவாசம், நித்திரை, இளைப்பாறுதல், ஓய்வு, கழிவுகள், உயிரின கழிவுப் பொருட்கள் ஆகியவற்றுடன் கொண்டுள்ள தொடர்பு பற்றிய விழிப்புணர்வு, நுண்ணுணர்வுத் திறன்களும் கற்றலுக்கும் வேலை செய்வதற்கும், வாழ்வதற்கும் கருவிகளையும் தொழில் நுட்பங்களையும் பயன்படுத்தும் திறன்களும் இங்கு உள்ளடக்கப்பட்டுள்ளன.

**(iv) வேலை உலகிற்குத் தயார் செய்தல் தொடர்பான தேர்ச்சிகள்:**
அவர்களது சக்தியை உச்ச நிலைக்குக் கொண்டு வருவதற்கும் அவர்களது ஆற்றலைப் போஷிப்பதற்கும் வேண்டிய தொழில்சார் திறன்கள்.
பொருளாதார விருத்திக்குப் பங்களித்தல்.
அவர்களது தொழில் விருப்புகளையும் உளச்சார்புகளையும் கண்டறிதல்.
அவர்களது ஆற்றல்களுக்குப் பொருத்தமான வேலையைத் தெரிவு செய்தல்.
பயனளிக்கக்கூடியதும் நிலைபேறுடையதுமான ஜீவனோபாயத்தில் ஈடுபடல்.

**(v) சமயமும் ஒழுகலாறும் தொடர்பான தேர்ச்சிகள்:**
அன்றாட வாழ்க்கையில் மிகப் பொருத்தமானவற்றைத் தெரிவு செய்யவும், நாளாந்த வாழ்க்கையில் ஒழுக்கநெறி, அறநெறி, சமயநெறி தொடர்பான நடத்தைகளைப் பொருத்தமுற மேற்கொள்ளவும், விழுமியங்களைத் தன்மயமாக்கிக் கொள்ளலும், உள்வாங்கலும்.

**(vi) ஓய்வு நேரத்தைப் பயன்படுத்துதல், விளையாட்டுப் பற்றிய தேர்ச்சிகள்:**
அழகியற் கலைகள், இலக்கியம், விளையாட்டு, மெய்வல்லுனர் போட்டிகள், ஓய்வு நேர பொழுதுபோக்குகள் மற்றும் வாழ்வின் ஆக்கபூர்வச் செயற்பாடுகள் மூலம் வெளிப்படுத்தப்படும் இன்ப நுகர்ச்சி, மகிழ்ச்சி, மன எழுச்சிகள் இவைபோன்ற மனித அனுபவங்கள்.

**(vii) கற்றலுக்குக் கற்றல் தொடர்பான தேர்ச்சிகள்:**
விரைவாக மாறுகின்ற, சிக்கலான, ஒருவரில் ஒருவர் தங்கி நிற்கின்ற உலகொன்றில் ஒருவர் சுயாதீனமாகக் கற்பதற்கான வலிமையளித்தலும் மாற்றியமைக்கும் செயன்முறை ஊடாக மாற்றத்துக்கு ஏற்ப இயங்கவும், அதனை முகாமை செய்யவும், வேண்டிய உணர்வையும் வெற்றியையும் பெறச் செய்தல்.

## 3.0 - 9 ஆந் தர இஸ்லாம் பாடத்திட்டத்தின் நோக்கங்கள்

### 1. அர்கானுல் ஈமான்

ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.

### 2. அர்கானுல் இஸ்லாம்

இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.

### 3. அல்அஹ்லாக் வத்தஸ்கிய்யா

இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையோருக்கும் வழி காட்டுவார்.

### 4. அல்குர்ஆன் வஸ்ஸுன்னா

இஸ்லாத்தின் மூலாதாரங்களை அறிந்து, அவற்றின் போதனைகளை வாழ்வில் நடைமுறைப்படுத்துவார்.

### 5. அஸ்ஸீறா வத்தாரீஹ்

நபி (ஸல்) அவர்களதும் குலபாஉர் ராஷிதீன்களதும் வாழ்க்கை முறையை விளங்குவதோடு இலங்கை முஸ்லிம்களின் வரலாற்றையும் அவர்களின் தேசிய பங்களிப்புகளையும் விரிவாக விளங்கி மற்றவர்களுக்கும் எடுத்துக் கூறுவார்.

### 6. அல்முஆமலாத்

பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.

### 7. அல்மபாஹீமுல் இஸ்லாமிய்யா

ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.

# பாட உள்ளடக்கம்

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **1.0 அர்கானுல் ஈமான்**<br>ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார் | 1.1 அல்லாஹ்வை அவனது திருநாமங்களுக்கூடாக அறிந்து எடுத்துக் கூறுவார். | • ஈமான் கொள்ள வேண்டிய அம்சங்கள் (தவ்ஹீத், றிஸாலத், மஆத்)<br>• அஸ்மாஉல் ஹுஸ்னா (முழுவதும்) | • சிறந்த மு∴மினாக வாழ்வதற்கான அடிப்படைகளை அறிந்து விளக்குவார்.<br>• அஸ்மாவுல் ஹுஸ்னாவை மனனமிட்டுக் கூறுவார்.<br>• அஸ்மாவுல் ஹுஸ்னாவை பொருளறிந்து விளக்குவார்.<br>• தவ்ஹீத், றிஸாலத், மஆத் என்பவற்றில் உள்ளடங்குபவற்றை விளக்குவார்.<br>• அஸ்மாவுல் ஹுஸ்னாக்களுடாக அல்லாவின் வல்லமையை விளங்கிச் செயற்படுவார். | 02 |
| | 1.2 மறுமை நிகழ்வுகளையும் சுவர்க்க இன்பம், நரக வேதனை பற்றி அறிந்து சுவனத்தை அடையும் வழிகளை ஏற்று நடப்பார். | • மறுமை<br>• சுவர்க்கத்தின் இன்பம்<br>• நரகத்தின் வேதனை | • மறுமை வாழ்வை நம்புவதோடு மறுமையின் நிகழ்வுகளை விபரிப்பார்.<br>• சுவர்க்கத்தின் இன்பங்களையும் நரக வேதனைகளையும் ஆதாரங்களோடு பட்டியற்படுத்துவார்.<br>• நரகத்தின் வேதனையிலிருந்து தன்னை இரட்சித்து சுவன இன்பங்களை பெறுவதற்கான வழிகளை இனங்கண்டு அதன் வழி செயற்படுவார். | 02 |
| | 1.3 அல்கழாஉ வல் கத்ர் பற்றிய நம்பிக்கையை ஆதாரங்களுடன் விளங்கி எடுத்துக் காட்டுவார். | • அல்கழாஉ வல் கத்ர் | • அல்கழாஉ வல் கத்ர் என்ற பதங்களை விளக்குவார்.<br>• அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறுகின்றன என்பதை நம்பி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.<br>• கலா கத்ர் பற்றிய நம்பிக்கையின் அவசியத்தை விளங்கி வலியுறுத்துவார்.<br>• கலா கத்ர் பற்றிய நம்பிக்கை ஒரு முஸ்லிமுக்கு வாழ்வில் செலுத்தும் செல்வாக்கைப் பட்டியற்படுத்தவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 2.0 **அர்கானுல் இஸ்லாம்**<br>இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார். | 2.1 குளிப்பை நிறைவேற்றும் முறையை அறிந்து கடைப்பிடிப்பார். | குளிப்பை நிறைவேற்றல் | • கடமையான குளிப்பை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• கடமையான குளிப்பை ஏற்படுத்தும் காரணிகளை இனங்காண்பார்.<br>• கடமையான குளிப்பை நிறைவேற்றும் முறையை அறிந்து பின்பற்றுவார். | 02 |
| | 2.2 பர்ளான தொழுகைகளைச் சுருக்கியும் சேர்த்தும் தொழுவதற்கான விதிமுறைகளை அறிந்து கடைப்பிடிப்பார். | அல் கஸ்ரு வல் ஜம்உ | • தொழுகையில் அல்கஸ்ரு வல் ஜம்உ ஐ நிறைவேற்றுவதற்கான விதிமுறையை அறிந்து விளக்குவார்.<br>• கஸ்ரு வல் ஜம்உவின் முக்கியத்துவத்தை விளங்கி பொருத்தமான சந்தர்ப்பங்களில் கடைப்பிடிப்பார்.<br>• தொழுகையை எல்லா நிலைமைகளிலும் நிறைவேற்றியாக வேண்டும் என்பதை பிறருக்கு எடுத்துரைப்பார் | 02 |
| | 2.3. ஜும்ஆத் தொழுகையை ஆர்வத்தோடும் பக்திபூர்வமாகவும் நிறைவேற்றி வருவார். | ஜும்ஆ-<br>முன் ஆயத்தம்-<br>சிறப்புக்கள் -<br>பயன்கள்-<br>முறைமை | • ஜும்ஆத் தொழுகையின் சிறப்புக்களை பட்டியற்படுத்துவார்.<br>• ஜும்ஆத் தொழுகையின் சட்டதிட்டங்களை விளங்கிச் கடைப்பிடிப்பார்.<br>• ஜும்ஆவின் சிறப்புக்கள், பயன்களை அறிந்து ஆர்வத்தோடு அதனை நிறைவேற்றுவார்.<br>• வெள்ளிக் கிழமை தினத்தின் மகிமையை அறிந்து கடமைகளை நிறைவேற்றுவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 2.4 ஜனாஸாவுக்கான கடமைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவார். | • ஜனாஸா - தொழுகை- ஏனைய கடமைகள் - | • ஜனாஸாவுக்குரிய நான்கு கடமைகளையும் விளக்கிக் கூறுவார்.<br>• ஜனாஸாத் தொழுகையின் விதிமுறைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவார்.<br>• ஜனாஸாவுக்கான கடமைகளின் சிறப்புக்களை அறிந்து அவற்றில் பங்குகொள்வார். | 02 |
| | 2.5 ஸகாத் கடமையை நிறைவேற்றுவதற்காக விதிமுறைகளையும் பயன்களையும் விளங்கி எடுத்துக் கூறுவார். | • ஸகாத்-விதியாகும் பொருட்கள்- நிஸாப் -<br>• விதியாவோர்/பெறத் தகுதியுடையோர்<br>• பயன்கள் | • ஸகாத் விதியாகும் பொருட்களை அறிந்து பட்டியற்படுத்துவார். ஸகாத் விதியாகும் ஒவ்வொரு பொருளுக்குமான நிஸாப் அளவை பட்டியற்படுத்துவார்.<br>• ஸகாத் பெறத் தகுதியானோரை இனங்கண்டு கூறுவார்.<br>• ஸகாத்தின் பயன்களை அறிந்து பிறருக்கு எடுத்துக் கூறுவார். | 02 |
| | 2.5 ஹஜ் கடமையை நிறைவேற்றுவது தொடர்பான விளக்கங்களை எடுத்துக்கூறுவார். | • ஹஜ்- அறிமுகம்<br>• பிரதான தலங்கள் | • ஹஜ் விதியாக்கப்பட்ட வரலாற்றை அறிந்து கதையாகக் கூறுவார்.<br>• ஹஜ்ஜின் பிரதான தலங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் விளக்குவார்.<br>• பிரதான தலங்கள் ஒவ்வொன்றிலும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை விளக்குவார்.<br>• ஹஜ்ஜின் பயன்களை பட்டியற்படுத்துவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **3.0 அல் அஹ்லாக் வத்தஸ்கிய்யா**<br>இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார். | 3.1 நேரம் பேணி நடப்பார். | • நேரம் பேணல்<br>• நேரத்தின் முக்கியத்துவம் | • நேரத்தின் முக்கியத்தவம் பற்றி குர்ஆன் ஸுன்னா அடிப்படையில் விளக்குவார்<br>• அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுவதன் ஊடாக நேரம் பேணல் பற்றி எடுத்துக் காட்டுவார<br>• நேரம் பேணுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியற்படுத்துவார்<br>• தனது நாளாந்த செயற்பாடுகளில் நேரம் பேணி ஒழுகுவார் | 02 |
| | 3.2 மஸ்ஜிதில் பேண வேண்டிய ஆதாபுகளை அறிந்து கடைப்பிடிப்பார். | • மஸ்ஜிதில் பேணவேண்டிய ஆதாபுகள் | • மஸ்ஜிதின் முக்கியத்துவம், கண்ணியம் குறித்து எடுத்துரைப்பார்<br>• மஸ்ஜிதிலும் அதன் சூழலிலும் பேண வேண்டிய ஒழுக்கங்களைப் பட்டியலிடுவார்.<br>• மஸ்ஜிதிலும் அதன் சூழலிலும் பேண வேண்டிய ஒழுக்கங்களை கடைப்பிடித்து வருவார்.<br>• மஸ்ஜிதையும் அதன் சூழலையும் தூய்மையாகவும் கண்ணியமாகவும் வைத்திருப்பதற்குப் பங்களிப்புச் செய்வார் | 02 |
| | 3.3 பாவமன்னிப்புக் கோருவதை வழக்கமாக்கிக் கொள்வார். | • பாவமன்னிப்பு<br>-முக்கியத்துவம்<br>-ஒழுங்குகள் | • பாவமன்னிப்பின் முக்கியத்துவத்தை விளக்குவார்<br>• பாவமன்னிப்புக் கேட்பதற்கு பொருத்தமதான நேரங்களைப் பட்டியல் படுத்துவார்<br>• பாவமன்னிப்புக் கேட்பதற்கான நிபந்தனைகளை எடுத்துக்கூறுவார்<br>• நபி (ஸல்) அவர்கள் ஓதிவந்த இஸ்தி.்.பார்களை தினமும் ஓதிவருவார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **4.0 மஸாதிருஷ் ஷரீஆ**<br>இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார். | 4.1 அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாற்றை விளக்குவார். | • அல்-குர்ஆன் அருளப்படலும் தொகுக்கப்படலும் | • அல்குர்ஆன் அருளப்பட்ட முறையினை விளக்குவார்.<br>• முதல் வஹி அருளப்பட்ட நிகழ்வைக் கதையாகக் கூறுவார்.<br>• அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட, தொகுக்கப்பட்ட முறையினைச் சுருக்கமாக விளக்குவார்.<br>• அல்குர்ஆன் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதென்பதை நம்பி ஒழுகுவார். | 02 |
| | 4.2 சூறதுல் முஹா வை திருத்தமாக ஓதி அதன் உள்ளடக்கத்தை விளக்குவார். | • சூறாக்கள்- சூறத்துல் முஹா (பொருளும் விளக்கமும்) | • சூறத்துல் முஹா அருளப்பட்ட பின்னணியைச் சம்பவமாகக் கூறுவார்<br>• சூறத்துல் முஹா எவ்வாறு நபியவர்களுக்கு ஆறுதலாய் அமைந்தது என்பதை எடுத்துக் காட்டுவார்<br>• சூறத்துல் முஹாவின் சொற்களுக்கான பொருள் விளக்கத்தைக் கூறுவார்<br>• சூறத்துல் முஹாவின் போதனைகளை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பார் | 02 |
| | 4.3 பிரதான ஹதீஸ் கிரந்தங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் அறிந்து கூறுவார். | • சுன்னா- பிரதான தீஸ் நூல்கள் - அறிமுகம் | • பிரதான ஹதீஸ் நூல்களை பட்டியற்படுத்துவார்<br>• அவற்றின் ஆசிரியர்களை இனங்கண்டு கூறுவார்<br>• அவற்றின் அமைப்புப் பற்றி சுருக்கமாக எழுதுவார்<br>• பிரதான ஹதீஸ் நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்களைத் தேடி வாசிப்பார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| **5.0 அஸ்ஸீறா வத்தாரீஹ்** நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார். | 5.1 முஹம்மத் (ஸல்) அவர்களின் ஹஜ்ஜதுல் விதா வின் உபதேசங்களைப் பின்பற்றுவார். | • ஹஜ்ஜத்துல் விதா- | • ஹஜ்ஜதுல் விதா நிகழ்த்தப்பட்ட சந்தப்பத்தை வரலாற்றோட்டத்தில் விளக்குவார்.<br>• ஹஜ்ஜதுல் விதாவீன் உள்ளடக்கத்தை விளக்குவார்.<br>• ஹஜ்ஜதுல் விதாவின் முக்கியத்துவத்தைக் கூறுவார்.<br>• ஹஜ்ஜதுல் விதா நவீன காலத்தில் எவ்வளவு முன்மாதிரிமிக்கது என்பதை விளக்குவார். | 02 |
| | 5.2 நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டு அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார். | • மஹப்பத்துர் ரசூல் | • நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ள வேண்டியதற்கான காரணங்களை முன்வைப்பார்.<br>• நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளவதை வெளிப்படுத்தும் முறைகளை விளக்குவார்.<br>• மஹப்பதுல் றஸுல் லின் வெளிப்பாடுகளை அறிந்து கடைப்பிடிப்பார். | 02 |
| | 5.3 உம்மஹாத்துல் மு∴ மினீன் களின் வாழ்வு முறையை அறிந்து கூறுவார் | • உம்மஹாத்துல் மு∴மினீன் - ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி) அவர்கள்-<br>மைமூனா (ரழி) அவர்கள்-<br>உம்மு ஹபீபா (ரழி) அவர்கள்-<br>ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி) அவர்கள் | • உம்மஹாத்துல் மு∴மினீன்களான ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி),மைமூனா (ரழி), உம்மு ஹபீபா (ரழி), ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி) ஆகியோரின் வாழ்க்கையோட்டத்தை விபரிப்பார்.<br>• அவர்களது வாழ்வில் முக்கிய நிகழ்வுகளை எடுத்துக் காட்டுவார்.<br>• அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
| --- | --- | --- | --- | --- |
| | 5.4 ஸஹாபாக்களின் முன்மாதிரிகளை எடுத்துக் கூறுவார். | • ஸலாஹுத்தீன் அய்யூபீ-<br>• முஹம்மத் அல்பாதிஹ்-<br>• தாரீக் பின் ஸியாத் | • ஸலாஹுத் தீன் அய்யூபி, முகம்மத் அல்பாதிஹ், தாரிக் பின் ஸியாத் ஆகியோரின் வீர வரலாற்றைச் சுருக்கமாக விளக்குவார்.<br>• வீரர்களின் முன்மாதிரி மிக்க நற்பண்புகளை கடைப்பிடிப்பதன் அவசியத்தை உணர்ந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பார்.<br>• அநீதிக்கு எதிராக வீரத்துடன் போராடும் நற்பண்பைப் பின்பற்றுவார்.<br>• உண்மையான வீரர்களின் வரலாற்றை மதித்து அவர்களைக் கண்ணியப்படுத்துவார். | 04 |
| | 5.5 நபி மூஸா (அலை), நபி ஈஸா (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விபரிப்பார். | • நபி மூஸா (அலை) அவர்கள்-<br>• ஈஸா (அலை) அவர்கள் | • நபி மூஸா (அலை), நபி ஈஸா (அலை) அவர்களை அறிமுகப்படுத்துவார்.<br>• அவர்களில் காணப்பட்ட தனித்துவப் பண்புகளைச் சுட்டிக் காட்டுவார்.<br>• நபி மூஸா (அலை) அவர்களின் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தை விளக்குவார்.<br>• நபி ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதை நிறுவுவார். | 04 |
| **6.0 அல்முஆமலாத்** பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் | 6.1 வீண் விரயத்தைத் தவிர்த்து சிக்கனத்தைக் கடைப்பிடிப்பார். | • சிக்கனமும் சேமிப்பும் | • சேமிப்பின் முக்கியத்துவம் குறித்து இஸ்லாமியப் போதனைகளை எடுத்துரைப்பார்<br>• வீண்விரயம் செய்வதனால் ஏற்படும் இம்மை, மறுமைப் பாதிப்புக்களை விளக்குவார்<br>• சேமிப்பின் மூலம் கிடைக்கும் நன்மைகளை எடுத்துரைப்பார்<br>• வாழ்வில் சிக்கனம் பேணி வீண்விரயத்தைத் தவிர்த்துக் கொள்வார். | 02 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| முறையாகக் கடைப்பிடித்து வருவார். | 6.2 ஹலால் ஹராம் தொடர்பாக அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பார். | • ஹலால் ஹறாம் பேணல் | • ஹலால், ஹறாம் என்ற பதங்களின் விளக்கத்தை எடுத்துரைப்பார்<br>• ஹலால், ஹறாம் என்பவற்றின் பரப்பை அறிந்து விளக்குவார்<br>• ஹலாலைப் பேணுவதன் மூலமும் ஹராத்தைத் தவிர்ப்பதன் மூலமும் கிடைக்கும் ஆன்மிக லௌகீகப் பயன்களைப் பட்டியற்படுத்வார்<br>• வாழ்வில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஹராத்தில் இருந்து தவிர்ந்து ஹலாலைப் பேணி ஒழுகுவார். | 02 |
| **7.0 அல்மபாஹிமுல் இஸ்லாமியா**<br>ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார். | 7.1 பிற சமயங்களை மதித்து அவற்றுக்குரிய கண்ணியத்தை வழங்குவார். | • பிற சமயங்களை மதித்தல்.<br>• பிற சமயத்தினருடன் நல்லுறவைப் பேணல்<br>• இன நல்லிணக்கம் | • பிறசமயங்கள் பற்றிய இஸ்லாத்தின் போதனைகளைப் பட்டியல் படுத்துவார்<br>• பிறசமயங்களுக்கும் அவற்றைப் பின்பற்றுவோருக்கும் உரிய உரிமைகளை விளங்கிச் செயற்படுவார்.<br>• பிற சமயத்தின் கிரியைகளில் ஈடுபடுவது தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களைப் பின்பற்றுவார்.<br>• பிறசமயத்தவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளை இனங்கண்டு கூறுவார்.<br>• பிறசமயத்தவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்வார். | 04 |

| தேர்ச்சி | தேர்ச்சி மட்டம் | விடய உள்ளடக்கம் | கற்றல் பேறுகள் | பாட வேளைகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| | 7.2 தேசப்பற்றை வெளிப்படுத்துவதோடு தேசத்திற்கான தமது கடமைகளை நிறைவேற்றுவார். | • தேசப்பற்று<br>• தேசத்துக்கான எமது கடமைகளும் | • தேசத்தின் மீது பற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.<br>• தேசத்தின் மீது பற்றுக் கொள்வது தொடர்பாக இஸ்லாமிய வழிகாட்டல்களை விபரிப்பார்.<br>• தேசத்தின் மீதான தமது கடமைகள் என்ன என்பதைப் பட்டியற்படுத்துவார்.<br>• தேசதின் மீது பற்றுக் கொள்வதன் வெளிப்பாடுகளை இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கேற்ப அமைத்துக்கொள்வார். | 02 |

## 9.5 கற்றல்- கற்பித்தல் முறை

கலைத் திட்டத்தில் சமய பாடம் மிக முக்கியமானதொன்றாகும். மாணவர் மிகவும் விரும்பத்தக்க விதத்தில் கவர்ச்சியாகவும் உள்ளத்தில் ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும் விதமாகவும் நடைமுறை வாழ்வில் பயிற்சிக்கு வரும் விதமாகவும் அதன் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கை அமைத்துக் கொள்வது இன்றியமையாததாகும். மாணவர்களது ஆக்கத் திறன், கற்பனைத் திறன், தொடர்பாடல் திறன், சமூகத் திறன் ஆகியவற்றை வளர்த்து வெளிக்கொணரும் விதமாக கற்றல்- கற்பித்தல் முறை அமைய வேண்டும்.

குறிப்பாக, சமய பாடத்தைப் பொறுத்தவரை மாணவர்களின் மூளையை அறிவாலும் தகவல்களாலும் போஷிக்கச் செய்து பரீட்சை எழுதும் திறனை மாத்திரம் வளர்த்து விடுவது போதுமானதல்ல. மாறாக, மாணவரிடையே தெளிவானதும் நிலையானதுமான ஒரு மாற்றத்தை உருவாக்க வேண்டும். பொருத்தமான கற்றல்- கற்பித்தல் முறைகளைத் தெரிந்திருப்பது ஆசிரியரின் தலையாய பணியாகும். இதன்போது வயது, அனுபவம், சூழல், தனியாள் வேறுபாடு என்பவற்றைக் கருத்திற் கொள்வது வரவேற்கத்தக்கது.

இப்புதிய கலைத்திட்ட ஒழுங்கமைப்பில் கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கு மாணவர்களை மையமாகக் கொண்டே இடம்பெற வேண்டுமென வலியுறுத்தப்படுகிறது. எனவே, புதிய கற்றல்- கற்பித்தலில் மாணவர்களது திறமைகள், ஆற்றல்கள் வெளிக்கொணரப்படும் விதமாக மாணவர்களது தொழிற்பாடுகள் மிகைத்துக் காணப்பட வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் செயலொழுங்கில் ஆசிரியர் தனது மாணவரது தனியாள் வேறுபாடுகளை இனங்கண்டு அவர்கள் எதிர்கொள்கின்ற இடர்பாடுகளை நிவர்த்தித்து உற்சாகமூட்டியும் திறமைகள், ஆற்றல்களுக்கு மதிப்பளித்துப் பாராட்டியும் நடந்து கொள்ள வேண்டும்.

கற்றல்- கற்பித்தல் முறைகள் சில தரப்பட்டுள்ளன.

- கலந்துரையாடல் முறை
- குழு முறை
- பங்கேற்றுக் கற்றல் முறை
- செய்து காட்டல் முறை
- தகவல் திரட்டும் முறை
- பாத்திரமேற்று நடிக்கும் முறை
- கதை கூறல் முறை
- சிந்தனைக் கிளர்வு முறை
- விரிவுரை முறை

இவ்வாறான முறைகளுடன் பாடத்திற்கும் சந்தர்ப்பத்திற்கும் பொருத்தமான மாணவர் மையச் சூழலைத் தேர்ந்தெடுப்பது வரவேற்கத்தக்கது.
மாணவரின் கற்றலை மேம்படுத்த உதவும் வகையில் இஸ்லாமிய சஞ்சிகைகள், செய்தித் தாள்கள், மேலதிக வாசிப்பு நூல்கள், பத்திரிகை நறுக்குகள், வரைபடங்கள் போன்றவற்றைப் பயன்படுத்தலாம்.

மேலும் கற்றலை இலகுபடுத்திக் கவர்ச்சிகரமானதாக்கிக் கொள்வதற்காகக் கற்றல்- கற்பித்தல் சாதனங்கள், பொருத்தமான இணையத்தளம் போன்றவற்றைத் தேவைக்கேற்பப் பயன்படுத்துவது உசிதமானதாகும்.

மேலும் பாடசாலையிலும் சுற்றாடலிலும் நடைபெறுகின்ற சமய, கலாசார நிகழ்ச்சிகள், வேலைத் திட்டங்கள் போன்றவற்றில் மிகப் பொருத்தமானவற்றை இனங்கண்டு அவற்றில் மாணவர்களைப் பங்கேற்கச் செய்து பயன்பெற வழிகாட்ட முடியும்.

எனவே, மாணவர்கள் இஸ்லாம் பாடத்தை ஆர்வத்தோடு கற்று முன்மாதிரிமிக்க முஸ்லிமாகவும் நாட்டுக்கு நல்ல பிரஜையாகவும் வாழ்வதற்கான பயிற்சியை வழங்கும் விதத்தில் கற்றல்-கற்பித்தல் செயலொழுங்கை, காத்திரமாகவும் வினைத்திறன் மிக்கதாகவும் ஆசிரியர்கள் அமைத்துக் கொள்வார்கள் என எதிர்பார்க்கின்றோம்.

## 9.6 பாடசாலைக் கொள்கையும் வேலைத் திட்டமும்

எமது நாட்டின் கலைத்திட்டம் அறிவு வளர்ச்சி, திறன் விருத்தி, மனப்பாங்கு மாற்றம் என்பவற்றை ஏற்படுத்தும் நோக்கில் வடிவமைக்கப்படுகின்றது.

இஸ்லாம் ஒரு வாழ்வு முறையாக அமைவதால் பாடசாலைச் சூழலில் மனப்பாங்கு மாற்றத்தையும் அதற்கூடாகச் செயற்பாட்டுச் சீர்மையையும் ஏற்படுத்துவதற்கான அறிவும் முறையான பயிற்சியும் வழங்கப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. அதற்காகப் பின்வரும் வழிமுறைகளைக் கையாளலாம்.

- சமய, பண்பாட்டு விழுமியங்களை மேம்படுத்தும் செயற்றிட்டங்களை அமுல்படுத்தல்.
- வெளிக்களப் பயணங்கள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றை ஒழுங்குசெய்து அவற்றின் மூலம் சமய, கலாசார மையங்களைத் தரிசிக்கச் செய்தலும் அவற்றுக்கு மதிப்பளித்தலும்.
- புத்தாக்க செயற்பாடுகளை உள்ளடக்கிய முஹர்ரம் புத்தாண்டை வரவேற்றல், ரமழான் மாதத்தை வரவேற்றல், மீலாத் தொடர்பான ஆக்க முயற்சிகளை மேற்கொள்ளல் போன்ற நிகழ்ச்சிகளை ஏற்பாடு செய்தல்.
- இனங்காணப்பட்ட புத்தாக்கத் திறனுள்ள மாணவர்களின் திறமையை மேம்படுத்தும் வகையில் வளப்பங்களிப்புச் செய்யக் கூடியவர்களை வரவழைத்து செயலமர்வுகளை ஒழுங்கு செய்தலும் அவர்களின் சேவைகளைப் பெற்றுக் கொடுத்தலும்.
- பாடசாலைச் சுற்றாடலைச் சுத்தமாக வைத்திருத்தல், அழகுபடுத்தல், பராமரித்தல் போன்ற செயற்பாடுகளுக்காகத் தனித்தனி மாணவக் குழுக்களை அமைப்பதற்கு மாணவர்களை வழிப்படுத்தல்.
- தேசிய, சர்வதேச தினங்களை இஸ்லாமியக் கண்ணோட்டத்தில் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகளைச் செய்துகொடுத்தல்.
- இஸ்லாமிய நடைமுறைகளின் யதார்த்தபூர்வமான உண்மைகளைப் புரியவைத்து, மாணவர்கள் அவற்றை உணர்ந்து பின்பற்றுவதற்கான வேலைத்திட்டமொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்தல்.

இத்தகைய பணிகளை வெற்றிகரமாக நிறைவுசெய்வதற்குப் பாடசாலை முறைமையிலுள்ள அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஊழியர்கள் முதலானோரின் பங்களிப்பு அவசியமாகின்றது. இப்பணியை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்குத் தேவையான பௌதிக, மனித வளங்களை இனங்கண்டு அவற்றின் மூலம் பாடசாலைச் சமூகம் பயன்பெறலாம்.

மேலும் குறித்த செயற்பாடுகளை வெற்றிகரமாக செயற்படுத்துவதற்கு ஆசிரியர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்குகள், செயலமர்வுகள் போன்றவற்றை ஏற்பாடு செய்து அதன் மூலம் கற்றல்- கற்பித்தல் செயற்பாடுகளில் வினைத்திறனை அதிகரிக்கச் செய்யலாம்.

இஸ்லாம் பாடத்துக்காக ஒதுக்கப்பட்டுள்ள பாடவேளைகளின் கால நேரத்தைக் கவனத்திற் கொண்டு குறித்த நேரத்திற்குள் மாணவர்கள் கூடிய பயனைப் பெறும் வகையில் பாட ஆசிரியர்கள் தம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும். இப்பாடத்துக்காக ஆசிரியர்களைத் தெரிவுசெய்யும்போது, இஸ்லாம் பாடத்துக்காக பயிற்சி பெற்ற ஆசிரியர்கள், இஸ்லாமிய ஷரீஆ கலாநிலையங்களில் தராதரம் பெற்றவர்கள், இஸ்லாமிய கலாசாரத்தை ஒரு பாடமாகக் கற்ற பட்டதாரிகள் என்போரை ஈடுபடுத்துவது பயன்மிக்கதாக அமையும்.

இந்தப் பாடத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் இஸ்லாமிய அறிவும், சிந்தனைத் தெளிவுமுள்ள, ஒழுக்க விழுமியங்களைப் பேணி நடக்கின்ற, நேர்முறையாகச் சிந்திக்கின்ற, நல்ல உள்ளங்கொண்ட சமூகத்துக்கும் நாட்டுக்கும் பயனளிக்கக்கூடிய எதிர்கால சந்ததியை உருவாக்கும் பணியில் வெற்றி காணலாம்

## 9.7 கணிப்பீடும் மதிப்பீடும்

கற்றல்- கற்பித்தல் நடவடிக்கைகளுக்கூடாக மாணவர்களின் கற்றல் பேறுகளை அளவிடும் ஒரு வழிமுறையாகவே கணிப்பீடும் மதிப்பீடும் அமைகின்றது. இது ஒவ்வொரு பாட வேளையிலும் இடம்பெற வேண்டிய ஒரு செயன்முறையாகும்.

இஸ்லாம் பாட உள்ளடக்கத்தினூடாக மாணவரின் நடத்தை சார்ந்த பண்புகள், வணக்க வழிபாடுகள் மீது கொண்டுள்ள அக்கறை, சமய சமூக செயற்பாடுகளில் ஈடுபாடு போன்றன கணிப்பீடு செய்யப்பட வேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்றது. (இது வகுப்பறைக்குள்ளேயும் வகுப்பறைக்கு வெளியேயும் குறித்த தேர்ச்சியை அடைந்துள்ளாரா என முறைசார்ந்த அல்லது முறைசாராத வகைகளில் இடம்பெற முடியும்.)

பாட ஆரம்பம் முதற்கொண்டே கணிப்பீடு செய்யப்பட்டு, இடர்ப்படும் மாணவர்களை இனங்கண்டு பரிகாரக் கற்பித்தலை உடனடியாக ஆரம்பிப்பது பயனுடையதாக அமையும். கணிப்பீட்டுக் கருவி ஆளுக்காள் வேறுபடுவதோடு இஸ்லாம் பாடம் தொடர்பான மதிப்பீடு, கற்றல் கற்பித்தல் முடிவுற்ற பின்பும் மாத, தவணை, ஆண்டு இறுதியிலும் வாய்மொழி வினாக்களுக்கூடாகவோ, எழுத்து மூலமாகவோ, வேலைத் திட்டங்களுக்கூடாகவோ இடம்பெற முடியும். இவற்றுக்குப் பொருத்தமான நியதிகள், வழிமுறைகளை நேர காலத்துடன் உருவாக்கிக் கொள்வது அவசியமாகும்.

இவை தவிர, ஸூறாக்கள், அத்கார்கள், ஹதீஸ்கள், துஆக்கள் முதலியவற்றின் எழுத்துக்கள் சரியாக உச்சரிக்கின்றனரா, மனனமிட்டுள்ளனரா, குறித்த சந்தர்ப்பத்தில் பயன்படுத்துகின்றனரா என்பவற்றையும் மதிப்பீடு செய்தல் வேண்டும். இதற்காக மாதிரி மதிப்பீட்டுக் கருவிகளைத் தயாரித்துக் கொள்வதற்கான அனுபவத்தை ஆசிரியர்கள் பெற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில், கணிப்பீடும் மதிப்பீடும் மாணவர்களுக்குரியது மட்டுமன்றி, ஆசிரியர்களுக்கும் முக்கியமானது என்பதையும் விளங்கிக்கொள்ள வேண்டும்.

இஸ்லாம் பாடத்தில் மனப்பாங்கு தொடர்பான கணிப்பீட்டுக்கு முக்கியத்துவம் கொடுப்பது அவசியமானதாகும். பாடத்திட்டத்தில் இடம்பெறும் அல்குர்ஆன் ஸூறாக்கள், சந்தர்ப்ப துஆக்கள் என்பவற்றைக் கணிப்பீடு செய்யும்போது அறபு எழுத்துக்களின் உச்சரிப்பு, நீட்டல்- குறுக்கம், மனனமிட்டிருத்தல் போன்றன அவதானிக்கப்படல் வேண்டும். கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டில் கணிப்பீடும் மதிப்பீடும் தவிர்க்க முடியாதவை. ஏனெனில் கற்றல்- கற்பித்தல் செயற்பாட்டின் வெற்றி- தோல்வி அதற்கூடாகவே தீர்மானிக்கப்படுகின்றது.

# கற்றல் - கற்பித்தல் செயல்முறைக்கான வழிகாட்டல்கள்

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேரச்சி மட்டம் 1.1: அல்லாஹ்வை அவனது திருநாமங்களுக்கூடாக அறிந்து எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- சிறந்த மு.்.மினாக வாழ்வதற்கான அடிப்படைகளை அறிந்து விளக்குவார்.
- *தவ்ஹீத், ரிஸாலத், மஆத்* என்பவற்றில் உள்ளடங்குபவற்றை விளக்குவார்.
- *அஸ்மாஉல் ஹுஸ்னா*வை மனனமிட்டுக் கூறுவார்.
- *அஸ்மாஉல் ஹுஸ்னா*வை பொருளறிந்து விளக்குவார்.
- *அஸ்மாஉல் ஹுஸ்னா*க்களுடாக அல்லாஹ்வின் வல்லமையை விளங்கிச் செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- *அஸ்மாவுல் ஹுஸ்னாக்கள்* மற்றும் அவற்றின் கருத்துக்கள் தொடர்பாக மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள். மாணவர்கள் குறிப்பிடும் கருத்துக்களைக் கரும்பலகையில் குறித்துக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - *தவ்ஹீத், ரிஸாலத், மஆத்* ஆகியன இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படையாகும்.
  - இஸ்லாமிய நம்பிக்கைகள் மனித வாழ்வைச் சீர்படுத்துவதுடன் உலக வாழ்க்கைக்கான இலட்சியத்தையும் உருவாக்கித் தருகிறது.
  - இஸ்லாமிய நம்பிக்கைகளுள் முதன்மையானது அல்லாஹ்வைப் பற்றிய நம்பிக்கையாகும்.
  - அல்லாஹ்வுடன் தொடர்பான விடயங்கள் தவ்ஹீத் ஏகத்துவம் என்ற தலைப்பின் கீழ் ஆராயப்படுகிறன.
  - அல்லாஹ்வை அறிந்து கொள்வதற்கும் அவனை விளங்கிக் கொள்வதற்கும் *அஸ்மாஉல் ஹுஸ்னா* எனப்படும் அழகிய திருநாமங்கள் உதவுகின்றன.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிகக் கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

**படி 3** ● பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- அல்லாஹ்வின் அழகிய திருநாமங்கள் *அஸ்மாஉல் ஹுஸ்னா* எனப்படுகிறது.
- *அஸ்மாஉல் ஹுஸ்னா*வின் முக்கியத்துவம் பற்றி அல்குர்ஆனிலும் ஹதீஸிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.
- ''அல்லாஹ்வுக்கு மிக்க அழகிய பெயர்கள் இருக்கின்றன. ஆகவே அவற்றைக் கொண்டே நீங்கள் அவனை அழையுங்கள். அவனுடைய திருப் பெயர்களில் தவறிழைப்பவர்களை நீங்கள் விட்டுவிடுங்கள். இவர்கள் தங்கள் செயலுக்குத் தக்க கூலியை விரைவில் அடைவார்கள்.'' (7:180)
- ''நபியே! நீங்கள் கூறுங்கள்: 'நீங்கள் அல்லாஹ் என்றழையுங்கள். அல்லது ரஹ்மான் என்றழையுங்கள். (இவ்விரண்டில்) எப்பெயர் கொண்டு நீங்கள் அவனை அழைத்தபோதிலும் அவனுக்கு அழகான (இன்னும்) பல திருநாமங்கள் உள்ளன'' (17:110)
- அல்லாஹ்வுக்கு 99 திருநாமங்கள் உள்ளன. யார் அவற்றை மனனமிடுன்கிறாரோ அவர் சுவனத்தில் நுழைவார். (புஹாரி)
- *லப்ஸுல் ஜலாலா* எனப்படுகின்ற *''அல்லாஹ்''* எனும் திருநாமம் தனித்துவமானதாகும். ஏனையவை அவனது பண்புகளை விளக்குகின்றன.
- அல்லாஹ்வின் திருநாமங்கள் மூலம் அவனது அறிவு, ஆற்றல், அதிகாரம், உயர்குணங்கள், வல்லமை ஆகிய அனைத்திலும் அல்லாஹ் பூரணத்துவமானவன், ஒப்பற்றவன் என்பதை அறிய முடியும்.
- அகீதாத் துறை அறிஞர்கள் அல்லாஹ்வின் திருநாமங்களை அவற்றின் பொருளை அடிப்படையாகக் கொண்டு பின்வருமாறு வகைப்படுத்துகின்றனர்.
    - அல்லாஹ்வின் படைப்பாற்றலுடன் தொடர்பானவை.
    - அல்லாஹ்வின் அன்புடன் தொடர்பானவை.
    - அல்லாஹ்வின் வல்லமை, சக்தி என்பவற்றுடன் தொடர்பானவை.
    - அல்லாஹ்வின் அறிவுடன் தொடர்பானவை.
- மு∴மினின் வாழ்வில் *அஸ்மாஉல் ஹுஸ்னா* பல காரணங்களுக்காக முக்கியம் பெறுகின்றன.

- *அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள்* மூலமாக
  - அல்லாஹ்வை அறிந்து கொள்ள முடிகிறது.
  - இறை நம்பிக்கை வலுப்பெறுகிறது.
  - இறை சிந்தனை தூண்டப்படுகிறது.
  - இறை வணக்கத்திற்கு வழிகாட்டுகிறது.
  - அல்லாஹ்விடம் பிரார்த்திப்பதற்கு உதவுகிறது.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு 01 அஸ்மாஉல் ஹுஸ்னாவின் முக்கியத்துவத்தை அல்-குர்ஆன் ஸுன்னா ஆதாரங்களுடன் எழுதுங்கள்.

குழு 02 அல்லாஹ்வின் படைப்பாற்றலுடனும் அன்புடனும் தொடர்பான திருநாமங்களை அவற்றின் பொருளுடன் பட்டியல்படுத்துங்கள்.

குழு 03 அல்லாஹ்வின் வல்லமையுடனும் அறிவுடனும் தொடர்பான திருநாமங்களை அவற்றின் பொருளுடன் தேடிப்பட்டியலிடுங்கள்.

குழு 04 முஃமினின் வாழ்வில் அஸ்மாஉல் ஹுஸ்னாக்கள் எவ்வாறு முக்கியத்துவம் பெறுகிறன என்பதை உதாரணங்களுடன் விளக்குங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

அஸ்மாஉல் ஹுஸ்னாக்களை உள்ளடக்கிய ஒரு கையேட்டைத் தயாரிப்பதுடன் அவற்றை மனனமிட்டுப் பெற்றோரிடம் ஒப்புவிப்பதற்கு வழிகாட்டுங்கள்.

**தேர்ச்சி 1.0 : ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேரச்சி மட்டம் 1.2 : மறுமை நிகழ்வுகளையும் சுவர்க்க இன்பம் மற்றும் நரக வேதனை பற்றி அறிந்து சுவனத்தை அடையும் வழிகளை ஏற்று நடப்பார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- மறுமை வாழ்வை நம்புவதோடு மறுமை நிகழ்வுகளை விபரிப்பார்.
- சுவர்க்க இன்பங்களையும் நரக வேதனைகளையும் ஆதாரங்களுடன் பட்டியற்படுத்துவார்.
- நரகத்தின் வேதனையில் இருந்து தன்னை இரட்சித்து சுவன இன்பங்களைப் பெறுவதற்கான வழிகளை இனங்கண்டு அதன் வழி செயற்படுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- பின்வரும் கூற்றுக்கள் பற்றிய மாணவர்களது அபிப்பிராயங்களைப் பெறுவதன் மூலம் அவர்களது முன்னறிவைப் பரிசோதியுங்கள்.

  1) சுவர்க்கம், நரகம் பற்றி நம்பாதவன் மறுமையில் ஈடேற்றம் பெற முடியுமா?

  2) மனிதர்கள் உலகில் செய்யும் வினைக்குரிய பலனை மறுமையில் காண்பார்களா?

  3) மறுமை பற்றிய நம்பிக்கை பாவம் செய்வதைவிட்டும் எவ்வாறு தடுக்கும்?

  4) மனிதன் மீண்டும் இவ்வுலகில் பிறப்பது தானா மறுமை எனப்படுகிறது?

  5) மறுமை என்ற ஒன்று இல்லாமல் இவ்வுலகோடு மனித வாழ்வு முடிவுறுவது நியாயமானதா?

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் ஐந்தாவது அம்சம் மறுமை பற்றிய நம்பிக்கையாகும்.
  - யுகமுடிவின் பின் உள்ள வாழ்க்கையே மறுமையாகும்.
  - மறுமை நாள் பல பெயர்களைக் கொண்டு அழைக்கப்படுகிறது.
  - மறுமையில் வெற்றி பெறுவதே இவ்வுலக வாழ்வின் இலட்சியமாகும்.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

**படி 3** பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- மரணத்தின் பின்னுள்ள நிலை குறித்து மனித சமூகத்தில் மூன்று வகையான நம்பிக்கைகள் காணப்படுகின்றன.

  1) மரணத்தோடு மனித வாழ்வு முற்றுப் பெறுகிறது எனும் நாத்திகக் கொள்கை.

  2) மனிதனது செயல்களுக்கு ஏற்ப இவ்வுலகிலேயே திரும்பத் திரும்பப் பிறக்கிறான் எனும் மறுபிறப்புக் கொள்கை.

  3) யுகமுடிவின் பின் உலகில் வாழ்ந்து மரணித்த எல்லா மனிதர்களும் மீண்டும் உயிர் கொடுத்து எழுப்பப்பட்டு வெகுமதியோ அல்லது தண்டனையோ வழங்கப்படுவர் எனும் மறுமை நம்பிக்கை.

- மறுமை நம்பிக்கை என்பது உலக முடிவு, உயிர் கொடுத்து எழுப்பப்படுதல், விசாரணை, சுவர்க்கமும் நரகமும் என்ற நான்கு அடிப்படைகளின் மீது கட்டப்பட்டுள்ளது.
- இறைவேதங்கள் அனைத்தும் மறுமை நம்பிக்கையினையே போதிக்கின்றன.
- அல்குர்ஆனின் கருத்துப்படி மறுமை நிச்சயமானதும் மிகவும் நெருங்கி வந்ததுமான ஒன்றாகும்.
- "விசாரணைக்காலம் நிச்சயமாக வந்தே தீரும். அதில் சந்தேகமே இல்லை. எனினும் மனிதர்களில் பெரும்பாலானவர்கள் இதனை நம்புவதில்லை" (40:59)
- "விசாரணைக் காலம் நிச்சயமாக வரக்கூடியது. அதில் சந்தேகமேயில்லை. (அந்நாளில்) சமாதிகளில் புதைந்து கிடந்தவர்களை நிச்சயமாக அல்லாஹ் (உயிர் கொடுத்து) எழுப்புவான்" (22:7)
- "மறுமை நெருங்கி விட்டது. (அத்தாட்சியாக) சந்திரனும் பிளந்து விட்டது. எனினும் அவர்கள் அந்த அத்தாட்சியைக் கண்ட போதிலும் (அதனைப்) புறக்கணித்து, இது தொடர்ந்து நிகழக் கூடிய சூனியமே எனக் கூறுகின்றனர்."(54:1-2)

- மறுமை நிகழ்வுகள் பலவாகும்.

- **ப.்.ஸ்**

- அல்லாஹ்வின் கட்டளைப்படி இஸ்ராபீல் (அலை) அவர்கள் முதல் முறையாக ஸூர் ஊதியதும் உலகமும் அதில் உள்ள அனைத்தும் முற்றாக அழிந்து விடும்.

- நீண்ட காலம் சென்றபின் இஸ்ராபீல் (அலை) அவர்களை எழுப்பி மீண்டும் ஸூர் ஊதுமாறு அல்லாஹ் கட்டளையிடுவான்.

- இரண்டாம் ஸூர் ஊதப்பட்டதும் மரணித்த அனைவரும் உயிர்கொடுத்து எழுப்பப்பட்டு *மஹ்ஷர்* எனும் பெரு வெளியை நோக்கி விரைவர்.

- **மஹ்ஷர்**

- மலக்குமார்கள் சூழ்திருக்க மக்கள் அனைவரும் *மஹ்ஷர்* எனும் பெருவெளியில் ஒன்று சேர்க்கப்படுவர்.

- சூரிய வெப்பத்தின் அகோரம் காரணமாக மக்கள் மிகவும் வேதனைப்படுவர். வியர்வையில் மூழ்குவர். *அர்ஷின்* நிழலைத் தவிர அங்கு எந்த நிழலும் இருக்காது.

- *மஹ்ஷரி*ன் வேதனையில் இருந்து விடுதலை கோரி மக்கள் நபிமார்களிடம் மன்றாடுவர்.

- முஹம்மத் (ஸல்) அவர்களின் ஷபாஅத்தைத் (ஷபாஅத்துல் குப்பரா) தொடர்ந்து விசாரனைக்காக கட்டளை பிறப்பிப்பான்.

- **ஹிஸாப்** (விசாரணை)

- ஒவ்வொருவரும் தனித்தனியாக விசாரிக்கப்படுவர். எவருக்கும் தாம் செய்த குற்றங்களை இல்லை என மறுத்துத் தப்பிக்கொள்ள முடியாது.

- "அந்நாளில் அவர்களுடைய நாவுகளும், அவர்களுடைய கைகளும், அவர்களுடைய கால்களும் அவர்களுக்கு விரோதமாக அவர்கள் செய்தவைகளைப் பற்றிச் சாட்சி சொல்லும்". (24: 24 - 25)

- நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள்: "மஹ்ஷரில் நடைபெறும் இவ்விசாரணை என்ற சொல்லே அந்நாளில் அங்குள்ளவர்களைத் திடுக்கிடச் செய்யும்". (இப்னு குசைமா)

- பட்டோலைகள் வழங்கப்படும். அதை வலக்கரத்தால் பெறுவோர் இன்புற இடக்கரத்தால் பெறுவோர் துன்புறுவர்.

- மீஸான் எனும் தராசில் மக்களது செயல்கள் அனைத்தும் நிறுக்கப்படும். அணுப்பிரமான வேறுபாட்டையும் அது துல்லியமாகக் காட்டக் கூடியதாகும்.

- **ஹவ்ளுள் கவ்தர்** (தடாகம்)

  - தொடர்ந்து ஒவ்வொரு சமுதாயமும் தமக்கு வழிகாட்டியாக அனுப்பப்பட்ட நபியின் தலைமையின் கீழ் அவரவருக்குரிய **ஹவ்ள்** எனும் தடாகங்களைச் சந்திப்பர். அவற்றுள் மிகப்பெரும் பாக்கியம் நிறைந்த தடாகம் முஹம்மத் (ஸல்) அவர்களுக்கு வழங்கப்படும் *ஹவ்ளுள் கவ்தர்* எனும் தடாகமாகும். அத்தடாகத்தில் நபியவர்களது வழிகாட்டல்களைப் புறக்கனித்து நடந்தவர்களைத் தவிர அவரது உம்மத்தைச் சேர்ந்தவர்கள் அனைவரும் நீர் அருந்தும் பாக்கியத்தைப் பெறுவர்.

- **ஸிராத்** (பாலம்)

  - அடுத்த கட்டமாக நரகத்தின் மேலால் போடப்பட்ட *ஸிராத்* எனும் பாலத்தைக் கடக்கும் நிகழ்வு இடம்பெறும்.
  - மக்கள் தமது நன்மைகளுக்கு ஏற்ப மின்னல் வேகம், குதிரை வேகம், ஒட்டக வேகம், கால் நடை வேகம் என வெவ்வேறு வேகத்தில் கடக்க முயல்வர்.
  - காபிர்களும் பாவிகளும் அதைக்கடக்க முயற்சிக்கையில், முடியாமல் நரகத்தில் விழுவார்கள்.

- **சுவர்க்கமும் நரகமும்.**

  - மு.்.மின்கள் தமக்குரிய சுவர்க்கங்களில் நுழைவார்கள். அவர்கள் அங்கு வர்ணிக்க முடியாத இன்பங்களை நிரந்தரமாக அனுபவிப்பார்கள். சுவர்க்கங்களுக்கிடையிலும் வேறுபாடுகள் காணப்படுகின்றன. அவற்றுள் மிகவும் உயரந்தது *பிர்தவ்ஸ்* எனும் சுவர்க்கமாகும். நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். **“நீங்கள் அல்லாஹ்விடம் வேண்டுவதாயின் பிர்தவ்ஸ் எனும் சுவர்க்கத்தை வேண்டுங்கள். சுவர்க்கத்தின் மத்தியில் இருப்பதும் மிக உயரத்தில் இருப்பதும் அதுதான். அதற்கு மேலால் தான் ரஹ்மானின் அர்ஷ் இருக்கிறது. அதிலிருந்து தான் சுவர்க்கத்தின் நதிகள் ஊற்றெடுக்கின்றன”** (முஸ்லிம்).

- நரகம் வேதனையும் துன்பமும் நிறைந்த இடமாகும். காபிர்கள் அதில் வேதனையை நிரந்தரமாக அனுபவிப்பார்கள். *முனாபிக்* எனப்படும் நயவஞ்சகர்கள் நரகத்தின் மிகவும் வேதனை கூடிய அதன் அடித்தளத்தில் நிரந்தரமாகத் தங்குவார்கள். ஈமானுடன் பெரும் பாவம் செய்தோர் அங்கு தம் பாவத்துக்கு ஏற்பத் தண்டிக்கப்படுவார்கள். பின்னர் நபி (ஸல்) அவர்களது ஷபாஅத்தினால் சுவர்க்கம் நுழைவர்.

- நன்மையும் தீமையும் சமமானவர்கள் சுவர்க்கத்துக்கும் நரகத்துக்கும் இடையில் போடப்பட்டுள்ள அ.்.ராப் எனும் மதில்மீது நிறுத்தப்பட்டு பின்னர் சுவர்க்கம் நுழைய அனுமதி பெறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு 01** மரணித்தின் பின்னுள்ள நிலை குறித்து மனித சமூகத்தில் காணப்படும் நம்பிக்கைகளை விளக்கி எழுதுங்கள்.

**குழு 02** இஸ்லாமிய நம்பிக்கையின் அடிப்படையில் மறுமை நிகழ்வுகளைப் பட்டியல் படுத்துங்கள்.

**குழு 03** சுவர்க்க, நரகக் காட்சிகள் பற்றி வந்துள்ள அல்குர்ஆன், ஹதீஸ் ஆதாரங்களைத் தொகுத்தெழுதுங்கள்.

**குழு 04** நரகத்தில் இருந்து பாதுகாப்புப் பெற்று சுவர்க்கத்துக்குரியவர்களாக ஆவதற்கு எம்மிடம் வரவேண்டிய பண்புகளைப் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

*ஸூரா வாக்கிஆ*வின் மொழிபெயர்ப்பை வாசித்து அதில் சுவர்க்கவாசிகள், நரகவாசிகள், அவர்கள் அனுபவிக்கக் கூடிய இன்ப துன்பங்கள், அதற்கான காரணங்கள் ஆகியன பற்றிக் கூறப்பட்டுள்ள விடயங்களைத் தொகுத்து எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 1.0: ஈமான் பற்றிய அம்சங்களை அறிந்து அதனடிப்படையில் வாழ்வை அமைத்துக் கொள்வார்.**

**தேரச்சி மட்டம் 1.3: *அல்கழாஉ வல்கத்ர்* பற்றிய நம்பிக்கையை ஆதாரங்களுடன் விளங்கி எடுத்துக்காட்டுவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- *அல் கழாஉ வல் கத்ர்* என்ற பதங்களை விளக்குவார்.
- அனைத்தும் அல்லாஹ்வின் நாட்டப்படியே நடைபெறுகின்றன என்பதை நம்பி வாழ்வை ஒழுங்கமைத்துக் கொள்வார்.
- நரகத்தின் வேதனையில் இருந்து தன்னை இரட்சித்துச் சுவன இன்பங்களைப் பெறுவதற்கான வழிகளை இனங்கண்டு அதன் வழி செயற்படுவார்.
- கழா-கத்ர் பற்றிய நம்பிக்கையின் அவசியத்தை விளங்கி வலியுத்துவார்.
- கழா-கத்ர் பற்றிய நம்பிக்கை ஒரு முஸ்லிமின் வாழ்வில் செலுத்தும் செல்வாக்கைப் பட்டியற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- பின்வரும் விடயத்தை வரைந்து காட்டி அல்லது விபரித்து மாணவர்களிடம் சிந்தனைக் கிளர்வை ஏற்படுத்துங்கள்.

  கண் தெரியாத ஒரு மாடு 10மீற்றர் நீளமான பலமான ஒரு கயிற்றினால் மரமொன்றில் கட்டப்பட்டுள்ளது. மரத்தில் இருந்து 11மீற்றர் தூரத்திலும் 7மீற்றர் தூரத்திலும் என இரு இடங்களில் தீன் போடப்பட்டுள்ளது. மாடு 2மீற்றர் தூரத்தில் பசியுடன் படுத்திருக்கிறது. மாடு தான் இருக்கின்ற இடத்திலேயே இருப்பதன் மூலம் தனது உணவைப் பெறமுடியுமா? முயற்சிப்பதன் மூலம் 11மீற்றர் தூரத்தில் உள்ள உணவை அடைய முடியுமா? தனக்குரிய உணவைப் பெற அது என்ன செய்ய வேண்டும்? எழுந்து **முயற்சிக்க வேண்டும். அதன் மூலம் தனக்குரியது கிடைக்கும்.**

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இஸ்லாமிய நம்பிக்கைக் கோட்பாட்டின் ஆறாவது அம்சம் *கழா கத்ர்* பற்றிய நம்பிக்கையாகும்.
  - *கழா கத்ரை* நம்புதல் என்பது அல்லாஹ் ஏற்கனவே விதித்துள்ளபடியே அனைத்தும் நடைபெறுகின்றன என்று நம்புவதாகும்.
  - *கழா கத்ர்* பற்றிய நம்பிக்கை முயற்சியைத் தூண்டுவதுடன் மனத்திருப்பதியையும் ஏற்படுத்துகிறது.
  - *கழா கத்ரை* தவறாகப் புரிந்து கொண்டவர்கள் வழிகேட்டில் சென்றுள்ளனர்.

படி 2

- மாணவர்களை நான்கு குழக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிகக் கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

படி 3

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- *கழா* என்றால் தீர்ப்பு, விதியாக்குதல் எனவும் *கத்ர்* என்றால் முன்னளத்தல், நிர்ணயித்தல் எனவும் பொருள்படும்.
- நடக்கப் போகின்ற அனைத்தையும் அல்லாஹ் ஏற்கனவே எழுதி வைத்துள்ளான். அவன் எழுதி வைத்த பிரகாரமே அது நடைபெறுகிறது என நம்புவதையே *கழா கத்ர்* குறிக்கிறது.
- *கழா கத்ர்* பற்றிய நம்பிக்கை அல்குர்ஆன் ஸுன்னாவிற்கு மாற்றமாக அமையுமாயின் அது பாதகமான விளைவுகளையே ஏற்படுத்தும்.

  **"(நபியே) வானத்திலும் பூமியிலும் உள்ளவற்றை நிச்சயமாக அல்லாஹ் நன்கறிவான் என்பதை நீங்ககள் அறியவில்லையா? நிச்சயமாக இவை யாவும் அவனது நிகழ்ச்சிக் குறிப்பாகிய லவ்ஹுல் மஹ்பூலில் இருக்கின்றன. நிச்சயமாக இது அல்லாஹ்வுக்கு மிக்க சுலபமானது" (22:70)**

  **"அல்லாஹ்வைத் தவிர எந்த ஒன்றும் இருக்காத நிலையில் அல்லாஹ் மாத்திரமே இருந்தான். அவனது அர்ஷ் தண்ணீரின் மேல் இருந்தது. அவன் லவ்ஹுல் மஹ்பூல் எனும் ஏட்டில் அனைத்தையும் எழுதினான். பின் வானங்களையும் பூமியையும் படைத்தான்" (புஹாரி).**

- *கழா கத்ரை* பகுத்தறிவினால் மாத்திரம் விளங்க முயற்சிப்பது மிகப்பிழையான பாதகமான முடிவுகளையே ஈட்டித்தரும்.
- நபி (ஸல்) அவர்கள் *கழா கத்ர்* விடயத்தில் தர்க்கிப்பதைத் தடுத்துள்ளார்கள்.
- ஒரு முறை ஸஹாபாக்கள் கழா கத்ர் விடயத்தில் தர்க்கித்துக் கொண்டிருந்தார்கள். அதைக் கண்ட நபியவர்கள் கடுமையாகக் கோபப்பட்டார்கள். அவர்களைப் பார்த்துக் கூறினார்கள்: **"இதைத்தானா நீங்கள் ஏவப்பட்டுள்ளீர்கள்? இதற்காகவா நீங்கள் படைக்கப்பட்டுள்ளீர்கள்? அல்குர்ஆனின் ஒரு பகுதியைக் கொண்டு**

**இன்னொரு பகுதியைத் தாக்குகின்றீர்கள். இவ்வாறு தான் உங்களுக்கு முந்திய சமூகங்கள் அழிவுற்றன''**.

- அல்லாஹ்வின் பண்புகளாகிய அறிவு(இல்ம்), நாட்டம்(இராதத்), ஆற்றல்(குத்ரத்), நீதி(அத்ல்) ஆகியவற்றை அதன் பூரணத்துவ நிலையில் ஏற்றுக் கொள்பவர்கள் கழா, கத்ரை எவ்வித சிக்கலும் இன்றிப் புரிந்து விசுவாசம் கொள்வார்கள்.

- கழா கத்ர் பற்றிய நம்பிக்கை மனிதனில் மிக உயர்ந்த பண்புகளையும் குணங்களையும் விருத்தி செய்கின்றன.

**பொறுமை:**

இன்பம், துன்பம், இலாபம், நஷ்டம், பிறப்பு, இறப்பு, வெற்றி, தோல்வி ஆகிய அனைத்தும் ஒன்றறக் கலந்ததுதான் வாழ்க்கை. அவ்வாறுதான் அல்லாஹ் எழுதி வைத்துள்ளான். இதில் நம்பிக்கை கொண்டவர் தனக்கு வரும் எல்லா, சூழ்நிலைகளையும் பொறுமையுடன் எதிர்கொள்வார்கள். தனக்கு ஏற்படும் இழப்புக்களுக்காக வருந்தவும்மாட்டார். விரக்தியடையவும் மாட்டார்.

**துணிவு:**

பலர் துணிவுடன் முன்செல்லத் தடையாய் இருப்பது தனக்கு ஏதும் துன்பம் நேர்ந்து விடுமோ என்ற அச்சமேயாகும். அல்லாஹ்வின் நாட்டத்துக்கு அப்பால் எதுவும் நிகழ்வதில்லை என நம்புகிறவர் இவ்வாறு வீணச்சம் கொள்ளாமல் துணிவுடன் முன்செல்வார்.

**மனத்திருப்தி:**

ஒவ்வொரு மனிதுனுக்கும் அல்லாஹ் அளந்ததுதான் கிடைக்கும் என்ற நம்பிக்கை கழா கத்ரை நம்புபவரிடம் மேலோங்கியிருக்கும். ஆகவே அவர் தனக்குக் கிடைத்ததைக் கொண்டு மனத்திருப்தியடைவார். அடுத்தவர்களிடம் உள்ளதைக் கண்டு பொறாமைப்படமாட்டார்.

**விடாமுயற்சி:**

கத்ர் பற்றிய நம்பிக்கை புதையல் போன்றது. ஓரிடத்தில் புதையல் இருக்கிறது என்று நம்பும் ஒருவர் அதை அடைந்து கொள்ளும் வரை விடாது முயற்சிப்பார் அல்லவா? அவ்வாறுதான் அல்லாஹ்வின் அருளில் நம்பிக்கை கொண்டவர், தனக்கு அல்லாஹ் எழுதி வைத்த அருளை அடைந்து கொள்ளும் வரை விடாமுயற்சியில் ஈடுபடுவார்.

**தியாகம் :**

தனக்குத் தேவையான ஒன்றை அல்லது தான் விரும்புகின்ற ஒன்றை தனது கொள்கைக்காக அல்லது இன்னொருவருக்காக இழக்க முன்வருவதே தியாகமாகும். தியாகத்தின் மூலம் தான் நஷ்டமடைவேனா? என்ற அச்சமே அதிகமானோர் தியாகம் செய்யாமைக்குக் காரணமாகும். ஆனால் கத்ரில் நம்பிக்கை கொண்டவரிடம் இவ்வாறான அச்சம் ஏற்படுவதில்லை. ஆகவே அவர் தியாகம் செய்யத் தயங்கமாட்டார்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்பப் பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு 01 : கழா, கத்ர் ஆகிய சொற்களின் மொழிரீதியான கருத்தையும் அகீதா ரீதியான அதன் விளக்கத்தையும் எழுதுங்கள்.

குழு 02 : அல்லாஹ் அனைத்தையும் படைக்குமுன் அவை பற்றி லவ்ஹுல் பஹ்பூல் எனும் ஏட்டில் எழுதிவைத்தான் என்பதற்கு அல்குர்ஆன் ஹதீஸிலிருந்து ஆதாரங்களைத் தேடி எழுதுங்கள்.

குழு 03 : கழா கத்ர் பற்றிய நம்பிக்கையில் உள்ளடங்கும் அல்லாஹ்வின் பூரணமான நான்கு பண்புகளைக் குறிப்பிடுங்கள்.

குழு 04 : கழா கத்ர் பற்றிய நம்பிக்கை ஒரு முஸ்லிமின் வாழ்வில் செலுத்தும் செல்வாக்கை பட்டியற்படுத்துங்கள்..

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

கழா கத்ர் பற்றிய நம்பிக்கை முயற்சியைத் தடுப்பதில்லை. இதற்கு உமது வாழ்வில் இடம் பெற்ற இரு சம்பவங்களை நினைவுபடுத்தி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.1: குளிப்பை நிறைவேற்றும் முறையை அறிந்து கடைப்பிடிப்பார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- கடமையான குளிப்பை நிறைவேற்றுவதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- கடமையான குளிப்பை ஏற்படுத்தும் காரணிகளை இனங்காண்பார்.
- கடமையான குளிப்பை நிறைவேற்றும் முறையை அறிந்து பின்பற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- குளிப்பை நிறைவேற்றியுள்ள சந்தர்ப்பங்களை வினவுங்கள். அதில் சுன்னத்தான பர்ளான குளிப்புக்கள் பற்றிய விளக்கங்களை வழங்குங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - நபி (ஸல்) அவர்கள் குளிக்கும் ஒழுங்கைக் கற்றுத் தந்துள்ளார்கள்.
    - குளிப்பு கடமையான நிலையை ஜனாபத் என்று அழைக்கின்றனர். ஜனாபத்துடைய நிலையில் தொழுதல், க.்.பாவைத் தவாப் செய்தல், அல்குர்ஆனைத் தொடுதல், பள்ளிவாசலில் தரித்தல் முதலானவற்றில் ஈடுபட முடியாது.
    - பொதுவாக குளித்துச் சுத்தமாக இருப்பதை விரும்பும் இஸ்லாம் சில சந்தரப்பங்களில் குளிப்பதை சுன்னத்தாக்கியுள்ளது.
    - ஒழுங்குகளைப் பேணிக் குளிப்பை நிறைவேற்றுவது உடலுக்கும் உள்ளத்துக்கும் புத்துணர்வைத் தருகிறது.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

  கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிக, கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

படி 2

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- பின்வரும் காரணங்களினால் குளிப்பது பர்ளாகும்.
  - ஆண்-பெண் உடலுறவு
  - விழிப்பிலோ உறக்கத்திலோ விந்து வெளிப்படல்
  - முஸ்லிம் இறத்தல்
  - பெண்களுக்கு ஹைழ் நின்று விடல்
  - நிபாஸ் நின்றுவிடல்
  - பிள்ளை பெறுதல்

- குளிப்புக் கடமையானவர் கட்டாயம் குளித்து சுத்தம் செய்து கொள்ள வேண்டும். கடமையான குளிப்பை தாமதப்படுத்தாதிருப்பது முக்கியமானது.

- நபி (ஸல்) அவர்கள் குளிக்க நாடினால் முன்னங்கைகள் இரண்டையும் மூன்று முறை கழுவிக் கொள்ளுவார்கள். அப்பால் தொழுகைக்கு மூழு செய்வது போன்று செய்து கொளவார்கள். பின்னர் விரல்களை நீரில் அமிழ்த்தி எடுத்து விரல்களால் மயிர் வேர்களைக் கோதிவிடுவார்கள். பின்னர் இரு கைகளாலும் நீரை அள்ளி மூன்று முறை தலையில ஊற்றிவிடுவார்கள். அதன் பின்பே மேனி முழுமைக்கும் நீர் ஊற்றி வார்ப்பார்கள். (புஹாரி)

- குளிக்க ஆரம்பிக்கும் போது பிஸ்மில் கூறி இரு முன்னங்கைகளையும் மூன்று முறை கழுவ வேண்டும். உடலிலுள்ள அழுக்குகளை நீக்கி வாய்கொப்பளித்து நாசிக்கு நீர் செலுத்தி கழுவுதல் வேண்டும். பூரணமாக உழுச் செய்து கொள்வது சுன்னத்தானதாகும். அவ்வாறே கைவில்களை நீரில் நனைத்து தலை தாடி பயிர் வேர்களில் சேரத்து நிர் படியம் வரை கோதுவது ஒழுங்காகும். பின் நீரை ஊற்றிக் கழுவிக் கொள்ள வேண்டும்.

- உடம்பில் சிறுபகுதியாவது விடுபட்டுவிடாமல் அனைத்துப் பகுதிகளும் நனைவதை உறுதிப்படுத்திக் கொள்ளல் வேண்டும். குளித்து முடித்ததன் பின்னர் கழுவப்படாத பகுதிகளை அறிந்து கொண்டால் அப்பகுதியை மாத்திரம் நீஜர ஊற்றிக் கழுவிக் கொள்ளுவது போதுமானது.

- நீர் நிலைகளில் குளிக்கும் போது நிய்யத்தோடு மூழ்கிக் குளிப்பதன் மூலம் கடமை நிறைவேறும்.

- நிய்யத் வைத்தல் மற்றும் உடல் முழுவதையும் நீரை ஓட விட்டுக் கழுவுதல் ஆகிய இரு அம்சங்கையும் குளிப்பின் பர்ளுகள் என்பர். ஏனைய அம்சங்கள் சுன்னத்தனவையாகும்.

- கடும் குளிர், நோய், தண்ணீர் இன்மை போன்ற காரணங்களுக்காக கடமைகளை நிறைவேற்றுவதற்காக குளிப்பதற்குப் பதிலாக தயம்மும் செய்து கொள்ள முடியும். அவ்வாறான சந்தர்ப்பங்களில் தயம்மும் செய்ய ஏதுவாக அமைந்த காரணி நீங்கும் பட்சத்தில் தண்ணீரில் குளித்து சுத்தமாகிக் கொள்ளல் கடமையாகும்.

**தரவிருத்தி உள்ளீகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றை பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு 01** : குளிப்பின் வகைகளையும் சுன்னத்தான குளிப்புக்களுக்கான சந்தர்பப்ங்களைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு 02** : குளிப்பு பர்ளாகும் சந்தர்ப்பங்களை எழுதுங்கள்

**குழு 03** : குளிப்பை நிறைவேற்றும் முறையை விளக்கும் நபி (ஸல்) அவர்களின் வழிகாட்டல்களை தொகுத்து அவற்றை படிமுறை ஒழுங்கின் படி எழுதுங்கள்

**குழு 04** : குளிப்பை நிறைவேற்றுவதனால் கிடைக்கும் உள, உடலியல் பயன்களைப் பட்டியலிடுங்கள்

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

ஜனாஸாவைக் குளிப்பாட்டிய ஒருவரின் அனுபங்களைத் தொகுத்து எழுத வழிப்படுத்துங்கள்..

**தேர்ச்சி 2.0: இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேர்ச்சி மட்டம் 2.2: தொழுகைகளைச் சுருக்கியும் சேர்த்தும் தொழுவதற்கான விதிமுறைகளை அறிந்து கடைபிடிப்பார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- அல் கஸர், வல் ஜம்உ பற்றி விபரிப்பார்.
- தொழுகையில் அல் கஸர் வல் ஜம்உவை நிறைவேற்றுவதற்கான விதிமுறைகளை அறிந்து விளக்குவார்.
- அல் கஸர், வல் ஜம்உவின் முக்கியத்துவத்தை விளங்கிப் பொருத்தமான சந்தர்ப்பங்களில் அவற்றைக் கடைபிடிப்பார்.
- தொழுகையை எல்லா நிலைமைகளிலும் நிறைவேற்றியாக வேண்டும் என்பதை பிறருக்கு எடுத்துரைப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- தொழுகையைச் சேர்த்தும் சுருக்கியும் தொழுதிருக்கிறீர்களா? என மாணவர்களிடம் வினவி அதுபற்றிய தமது அனுபவங்களை வெளிப்படுத்த அவர்களுக்கு இடமளியுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - குறித்த சில காரணங்களுக்காகத் தொழுகையைச் சுருக்கியும் சேர்த்தும் தொழுவதே கஸ்ர், ஜம்உ என அழைக்கப்படுகிறது.

      தொழுகையைச் சுருக்கவும் சேர்க்கவும் அனுமதித்துள்ளமைக்கான காரணம் தொழுகை எந்த சந்தர்ப்பத்திலும் விட்டுவிடக்கூடாது என்பதற்காகவேயாகும்.

      ம.்.ரிப் தொழுகையைச் சுருக்கித் தொழ முடியாது. ஸுப்ஹுத் தொழுகையை சுருக்கவோ சேர்க்கவோ முடியாது. ஏனைய தொழுகைகளை சுருக்கியும் சேர்த்தும் தொழ முடியும்.
    - சேர்த்துத் தொழுவதில் ஜம்உத் தக்தீம், ஜம்உத் த.்.கீர் என இருவகையுண்டு

**படி 2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிக, கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

**படி 2**3

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

**ஸலாதுல் கஸ்ர்:**

- தொழுகையைச் சுருக்கித் தொழுதல் *ஸலாதுல் கஸ்ர்* எனப்படும். நான்கு ரக்அத்கள் கொண்ட தொழுகையை இரண்டு ரக்அத்களாக சுருக்கித் தொழுவதையே இது குறிக்கும்.
- பிரயாணத்தின் போது அல்லாஹ் இதை அனுமதித்துள்ளான்.
- ''நீங்கள் பூமியில் பிரயாணம் செய்வதாயின் (உங்கள்) தொழுகையைச் சுருக்கித் தொழுவதில் உங்கள் மீது குற்றமில்லை'' (4:101)
- சுருக்கித் தொழுவது அல்லாஹ் உங்களுக்களித்த சலுகையாகும். அவனளித்த அந்த தர்மத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்.'' (புஹாரி, முஸ்லிம்)
- ம.்.ரிப் தொழுகையையும் ஸுப்ஹுத் தொழுகையையும் *கஸ்ர்* செய்ய முடியாது.

**ஸலாதுல் ஜம்உ**

- தொழுகையைச் சேர்த்துத் தொழுதல் *ஸலாதுல் ஜம்உ* எனப்படும்.
- பிரயாணம், மழை, நோய் போன்ற காரணங்களுக்காக அல்லாஹ்வின் தூதர் அவர்கள் இதை அனுமதித்துள்ளார்கள்
- நியாயமான காரணமின்றிச் சேர்த்துத் தொழுவதை இஸ்லாம் கண்டிக்கிறது.
- *லுஹர் - அஸர், ம.்.ரிப் - இஷா* என்றவாறுதான் சேர்த்துத் தொழ முடியும்.
- சுபஹையும் ம.்.ரிபையும் சேர்த்துத் தொழ முடியாது.
- லுஹர் நேரத்தில் அஸரையும், ம.்.ரிபுடைய நேரத்தில் இஷாவையும் சேர்த்துத் தொழுதல் *ஜம்உத் தக்தீம்* எனப்படும். தக்தீம் என்பது முற்படுத்தல் என்பதைக் குறிக்கும்.
- அஸருடைய நேரத்தில் லுஹரையும், இஷாவுடைய நேரத்தில் ம.்.ரிபையும் சேர்த்துத் தொழுதல் *ஜம்உத் த.்.கீர்* எனப்படும். *த.்.கீர்* என்பது பிற்படுத்தலாகும்.
- பிற்படுத்தித் தொழுவதாயின் முந்திய தொழுகையின் நேரத்தில் பிற்படுத்தித் தொழுவதாக நிய்யத் வைத்துக் கொள்ள வேண்டும்.

- இரு தொழுகைகளைச் சேர்த்துத் தொழும்போது முதல் தொழுகையை முடித்து ஸலாம் கொடுத்தபின்பே அடுத்த தொழுகையைத் தொழ வேண்டும். இரு தொழுகைகளையும் ஒரே ஸலாத்துடன் தொழு முடியாது.
- சேர்த்து, சுருக்கி தொழும்போது ஜமாத்தாகவும் தொழ முடியும். தனித்தும் தொழ முடியும்.
- பிரயாணத்திற்காகச் சேர்த்தும் சுருக்கியும் தொழும்போது பின்வரும் நிபந்தனைகள் கவனத்திற் கொள்ளப்படல் வேண்டும்.
  - இஸ்லாம் அனுமதித்த பயணமாக இருக்க வேண்டும்.
  - கஸ்ர் செய்வதாயின் சொந்த ஊரைத் தாண்டியிருக்க வேண்டும்
  - பிரயாண தூரம் சுமார் 90 கிலோ மீட்டருக்கு மேற்பட்டதாக இருக்க வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றை பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு 01** : ''தொழுகையை விடுவதற்கு அனுமதி கிடையாது'' என்ற கூற்றை *ஸலாத்துல் கஸ்ர், ஸலாத்துல் ஜம்உ* ஆகியன எவ்வாறு உறுதிப்படுத்துகின்றன என்பதை விளக்கி எழுதுங்கள்.

**குழு 02** : சுருக்கியும் சேர்த்தும் தொழுவதற்கான அல்குர்ஆன் அல் ஹதீஸ் ஆதாரங்களைத் தேடி எழுதுங்கள்

**குழு 03** : *ஜம்உத் தக்தீம், ஜம்உத் த.:.கீர்* என்ற பதப்பிரயோகங்களை விளக்கி சுருக்கி, சேர்த்து தொழுவதில் விதிவிலக்கான தொழுகைகளைக் குறிப்பிடுங்கள்.

**குழு 04** : இரண்டுநாள் சுற்றுலா ஒன்றில் கலந்து கொள்ளும் நீங்கள் இரவைக் கழிப்பதற்காகப் வெளியூர் பாடசாலை ஒன்றை அடைந்துள்ளீர்கள். நேரம் இரவு 9 மணி. இப்போது ம.:.ரிபையும் இஷாவையும் எவ்வாறு தொழப்போகிறீர்கள் என்பதை செய்து காட்டுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

தாய், தந்தை, சகோதரர்கள் ஸலாதுல் ஜம்உ, ஸலாதுல் கஸ்ரு செய்துள்ள சந்தப்பங்களில் அவர்கள் எவ்வாறு தொழுதார்கள் என்பதை தொகுக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0: இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேரச்சி மட்டம் :2.3 ஜுமுஆத் தொழுகையை ஆர்வத்தோடும் பக்திபூர்வமாகவும் நிறைவேற்றி வருவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள் :**

- ஜுமுஆத் தொழுகையின் சிறப்புக்களைப் பட்டியற்படுத்துவார்.
- ஜுமுஆத் தொழுகையின் சட்டதிட்டங்களை விளங்கிக் கடைப்பிடிப்பார்.
- ஜுமுஆவின் சிறப்புக்கள், பயன்களை அறிந்து ஆர்வத்தோடு அதனை நிறைவேற்றுவார்.
- வெள்ளிக்கிழமை தினத்தின் மகிமையை அறிந்து கடமைகளை நிறைவேற்றுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- *ஸூரதுல் ஜுமுஆவின்* 9வது வசனத்தை அழகாக ஓதக்கூடிய மாணவனைக் கொண்டு ஓதச் செய்து அதன் மொழி பெயர்ப்பை வாசித்துக் காட்டுங்கள்.
- ஜுமுஆக் கடமையின் சிறப்பு பற்றிய மாணவர்களின் முன்னறிவை பரிசீலனை செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - ஜுமுஆத் தொழுகையின் சிறப்புக்களை அல் குர்ஆனும், ஸுன்னாவும் எடுத்துக் கூறுகின்றன.
    - ஜுமுஆத் தொழுகை கூட்டாக மாத்திரம் நிறைவேற்ற முடியுமான *பர்ளு ஐன்* கடமையாகும்.
    - ஜுமுஆத் தொழுகைக்கும். குத்பாக்களுக்கும் ஷர்த்துக்களும், பர்ளுகளும், ஸுன்னத்துக்களும் காணப்படுகின்றன.
    - வாரந்தோறும் இடம்பெறும் ஜுமுஆத் தொழுகை, குத்பாக்கள் மூலம் முஸ்லிம்கள் பல்வேறு பயன்களை அடைந்து கொள்ள முடிகின்றது.
    - வெள்ளிக்கிழமையின் சிறப்புக்கள் ஒவ்வொரு முஸ்லிமையும் அத்தினத்தில் நிறைவேற்ற வேண்டிய கடமைகளைச் செய்யத் தூண்டுகின்றன.

**படி 3**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

  கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.

- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

- ஜுமுஆக் கடமையின் சிறப்புப் பற்றி அல்குர்ஆன் பின்வருமாறு கூறுகிறது. ''விசுவாசிகளே! வெள்ளிக் கிழமையன்று ஜுமுஆத் தொழுகைக்காக (பாங்கு சொல்லி) நீங்கள் அழைக்கப்பட்டால் வியாபாரத்தை விட்டு விட்டு அல்லாஹ்வை நினைவு கூர நீங்கள் விரைந்து செல்லுங்கள். அறிவுடையவர்களாக இருந்தால் இதுவே உங்களுக்கு மிக நன்று. இதனை நீங்கள் அறிந்து கொள்வீர்களா? (62: 9)

- ஜுமுஆக் கடமையின் சிறப்புப் பற்றி ஸுன்னா பின்வருமாறு குறிப்பிடுகிறது.

  ''எவர் மூன்று ஜுமுஆக்களை பொடுபோக்காக விட்டு விடுகிறாரோ அவரது உள்ளத்திற்கு அல்லாஹ் முத்திரை இட்டு விடுகின்றான். (அபூ தாவூத்)

- ஒரு பிரதேசத்தில் வாழ்கின்ற பருவ வயதையடைந்த, சித்த சுவாதீனமுள்ள, சுதந்திரவானான முஸ்லிம்கள் ஒவ்வொருவர் மீதும் இக்கடமையை நிறைவேற்றுவது பர்ளு ஐனாகிறது.

- ஜுமுஆத் தொழுகை ஜமாத்தாக இடம்பெறுதலும், குத்பாவின் ஆரம்பம் முதல் தொழுகை முடியும் வரை ஆண்களில் நாற்பது பேராவது கலந்து கொள்வதும், ஊரின் எல்லைக்குள் ஜுமுஆ இடம்பெறுவதும், ழுஹர் நேரத்தில் இடம்பெறுவதும், ஓர் ஊரில் ஒரு ஜும்ஆ மாத்திரம் இடம் பெறுவதும், (தேவைக்கேற்ப அதிகரிக்கலாம்) இரண்டு குத்பாக்கள் இடம்பெறுவதுமான அம்சங்கள் ஜுமுஆ நிறைவேறுவதற்குரிய நிபந்தனைகளாகும்.

- ஹம்தும் ஸலவாத்தும் கூறுவதும், தக்வாவைக் கொண்டு உபதேசிப்பதும், குர்ஆன் வசனமொன்றையேனும் ஓதுவதும், மு∴மீன்களுக்காக துஆக் கேட்பதும் குத்பாக்களில் இடம்பெறவேண்டிய பர்ளுகளாகும்.

- ஜுமுஆத் தொழுகை பல்வேறு சிறப்பம்சங்களையும் பயன்களையும் கொண்டுள்ளதால் அதுபற்றி நபி (ஸல்) அவர்கள் பின்வருமாறு வலியுறுத்திக் கூறினார்கள். ''நான் மக்களைத் தொழுவிக்கும்படி ஒரு மனிதருக்கு ஏவ விரும்பகிறேன். பின்னர் ஜும்ஆவுக்கு சமூமளிக்காத மக்களின் வீடுகளைத் தீயிட்டு எரித்துவிட நாடுகின்றேன்'' (முஸ்லிம்). ஜும்ஆத் தொழுகையின் முக்கியத்துவத்தை விளக்கவே இவ்வாறு நபி (ஸல்) அவர்கள் குறிப்பிட்டுள்ளார்கள்.

- ஜுமுஆத் தொழுகை மூலம் ஐக்கியம், ஒற்றுமை, சகோதரத்துவம், பரஸ்பர அன்பும் நல்லுறவும் ஒத்துழைப்பும் முஸ்லிம்கள் மத்தியில் வளர வாய்ப்பு ஏற்படுகின்றது. குத்பா மூலம் மக்களை நல்வழிப்படுத்தவும் முடிகின்றது.

- '' நிச்சயமாக வெள்ளிக் கிழமையானது நாட்களுக்கு தலைமையானதாகும். அல்லாஹ்விடம் எல்லா நாட்களிலும் மிகவும் கண்ணியம் பொருந்தியதாகும். ஹஜ்ஜுப் பெருநாள், நோன்புப் பெருநாட்களை விடவும் அல்லாஹ்விடம் கனதியுடையதாகும். அதிலே ஐந்து சிறந்த காரியங்கள் உண்டு.

1.ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் படைத்தான்.

2.ஆதம் (அலை) அவர்களை பூமிக்கு இறக்கினான்

3.ஆதம் (அலை) அவர்களை அல்லாஹ் வபாத்தாக்கினான்

4. அதிலே ஒரு நேரம் உண்டு. அதில் பாவகாரியங்களைத் தவிர, மனிதன் ஏதாவதொன்றை அல்லாஹ்விடம் கேட்டால் அதை அவனுக்கு அல்லாஹ் கொடுப்பான்.

5. அதிலே இறுதி நாள் இடம் பெறும்.

இதனால் எந்த சங்கைப் பொருந்திய மலக்கும் பயந்து நடுங்குவார். அதுபோல் வானம்,பூமி, காற்று, மலை, கடல் எதுவாயினும் வெள்ளிக் கிழமை வரும் போது பயந்து நடுங்கிக் கொண்டேயிருக்கும். (அஹ்மத், இப்னு மாஜா)

- திலாவதுல் குர்ஆன், திக்ர், ஸலவாத், தவ்பா, தான தர்மம், ஸியாரத், இ.்.திகாப் போன்ற ஸுன்னத்தான செயற்பாடுகளைக் கொண்டு இத்தினத்தை அலங்கரிக்குமாறு இஸ்லாம் கூறுகின்றது.
- அதான் சொல்வதற்கு முன்பே வெள்ளிக் கிழமையன்று குளித்து, சுத்தமான ஆடையணிந்து, நறுமணம் பூசி நேரகாலத்துடன் மஸ்ஜிதுக்குச் செல்வது ஸுன்னத்தான வழிமுறைகளாகும். குத்பாப் பிரசங்கம் ஆரம்பிக்கும் வரை ஸுன்னத்தான செயற்பாடுகளில் ஈடுபடலாம். குத்பா நிகழ்த்தப்படும் பொழுது கதைக்கக் கூடாது. பிந்தி வருபவர்கள் முந்தி வந்தவந்தவர்களைக் கடந்து செல்லக் கூடாது.

**தரவிருத்தி உள்ளீகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு 01** ஜுமுஆத் தொழுகையின் சிறப்புக்களை எடுத்துக் கூறும் அல்குர்ஆன், ஹதீஸ் போதனைகளை தொகுத்து எழுதுங்கள்.

**குழு 02** ஜுமுஆ தொழுகையின் ஷர்த்துக்களைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு 03** குத்பாவின் பர்ளுகளைக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு 04** வெள்ளிக் கிழமை தினத்தின் சிறப்பையும் அத்தினத்தில் நிறைவேற்ற வேண்டிய ஸுன்னத்தான செயற்பாடுகளையும் கலந்துரையாடி எழுதுங்கள்.

**வீட்டில் பின்தொடர் செயற்பாடு :**

வெள்ளிக் கிழமை தினத்தில் செய்ய வேண்டிய ஸுன்னத்தான செயற்பாடுகள் தொடர்பாக குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0: இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேரச்சி மட்டம்: 2.4 ஜனாஸாவுக்கான கடமைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள் :**

- ஜனாஸாவுக்குரிய நான்கு கடமைகளையும் விளக்கிக் கூறுவார்.
- ஜனாஸாத் தொழுகையின் விதிமுறைகளை அறிந்து அவற்றை நிறைவேற்றுவார்.
- ஜனாஸாவுக்கான கடமைகளின் சிறப்புக்களை அறிந்து அவற்றில் பங்குகொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- ''ஒவ்வோர் ஆத்மாவும் மரணத்தைச் சுவைக்கக் கூடியதாகும்'' (3:185)

  ''இன்பங்களை அறுத்துவிடக்கூடிய மரணத்தை நீங்கள் அதிகம் ஞாபகம் செய்யுங்கள்'' (திர்மிதி)

  மேற்படி அல்குர்ஆன், ஹதீஸ் வசனங்களை ஒரு மாணவனைக் கொண்டு வாசிக்கச் செய்யுங்கள்.

- ஒரு முஸ்லிம் ஜனாஸாவுக்கு நிறைவேற்ற வேண்டிய கடமைகள் பற்றிய மாணவர்களின் அறிவைப் பரிசீலனை செய்யுங்கள்

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

  - நோயுற்றிருப்போரைச் சுகம் விசாரிப்பதற்காகச் செல்வது ஸுன்னத்தான காரியமாகும்.
  - வாழ்வின் இறுதிக் கட்டத்தை அடைந்த மரண வியாதியுடையவர்களை அல்லாஹ்வின் ரஹ்மத்தில் ஆர்வமூட்டுதல் வேண்டும்.
  - மரணித்தவுடன் ஜனாஸாவுக்குச் செய்ய வேண்டிய ஒழுங்குகளை இஸ்லாம் கூறுகின்றது.
  - ஜனாஸாவைக் குளிப்பாட்டுதல், கபனிடல், தொழுவித்தல், அடக்கம் செய்தல் எனும் கடமைகள் முஸ்லிம்கள் மீது *பர்ளுகிபாயா*வாகும்.
  - ஜனாஸாவுக்குரிய கடமைகளை நிறைவேற்றுவதற்கான ஒழுங்கு முறைகளை இஸ்லாம் கூறுகின்றது.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

  கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

**படி 2**

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - நோயாளிகளை சுகம் விசாரிக்கச் செல்வது வலியுறுத்தப்பட்ட ஒரு விடயமாகும். நோய் விசாரிக்கச் செல்லுவதில் பாகுபாடு காட்டுவது முறையல்ல. நோயாளிகளுக்குச் சிரமம் கொடுக்கும் விதத்தில் நடந்துகொள்ளக் கூடாது. நோயாளிக்கு பிரார்த்திப்பதும், ஆறுதல் கூறுவதும் இஸ்லாம் கூறும் ஒழுங்கு முறையாகும்.
  - இறுதிக் கட்டத்தை அடைந்த நோயாளிகளை தவ்பா, இஸ்தி∴பார், வஸிய்யதின்பால் ஆர்வமூட்டுதல் விரும்பத்தக்கது. பக்கத்தில் உள்ளோர் ''லாஇலாஹ இல்லல்லாஹ்'' என்ற கலிமாவை நோயாளி கேட்குமாறு திரும்பத்திரும்பக் கூறுதல் வேண்டும்.
  - ஒருவர் மரணித்துவிட்டால் மரணத்தை உறுதி செய்ததன் பின்னர் ஜனாஸாவின் உடலுறுப்புக்களை நேர்த்தியாக வைப்பதும், சுத்தம் செய்வதும், கழிவுகள் வெளியேறுவதற்கான ஒழுங்குகளைச் செய்வதும், நறுமணம் வீசக் கூடியவற்றை வைப்பதும் சிறந்த ஒழுங்கு முறைகளாகும்.
  - மரணித்தவருக்கு மிக நெருங்கிய உறவினர்கள் குளிப்பாட்டுவதற்கு உரிமையும், தகைமையும் பெறுகின்றார்கள். குளிப்பாட்டுபவர் ஜனாஸாவின் குறைகளை மறைப்பதும், குளிப்பாட்டுவதற்குரிய ஒழுங்கு முறைகளைப் பேணுவதும் கடமையாகும். ஷஹீதான ஜனாஸாக்கள் குளிப்பாட்டப்படமாட்டாது.
  - வெள்ளை நிறப் புடவையினால் கபன் செய்யப்படல் வேண்டும். ஆண்களுக்கு மூன்று வெள்ளைப் புடவைகளும், பெண்களுக்கு ஐந்து வெள்ளைப் புடவைகளும் பயன்படுத்தப்படும். கற்பூரம், அத்தர் பாவிப்பதும் கண், காது, மூக்கு வாய் மறைவான இடங்களிலும், ஸுஜுதுக்குரிய உறுப்புக்களிலும் கற்பூரம் கலந்து பஞ்சு வைப்பதும் ஸுன்னத்தாகும். ஹஜ், உம்ரா செய்ய இஹ்ராம் கட்டிய ஒருவர் இஹ்ராமுடனையே காலமானால் அதனுடனேயே நல்லடக்கம் செய்யப்பட வேண்டும்.
  - ஜனாஸாவை ஆண்கள் சுமந்து செல்வர். ஜனாஸாவுக்கு முன்னாலும் அல்லது அதனைச் சூழவும் அதில் கலந்து கொள்வோர் செல்லலாம்.
  - ஜனாஸாத் தொழுகைக்கு மரணித்தவரின் நெருங்கிய வாரிசு இமாமத் செய்வார்.
  - ஜனாஸாத் தொழுகை, ஜனாஸாவுக்குரிய பிரதான பிரார்த்தனையும் பாவமன்னிப்புக் கோரலுமாகும். நான்கு தக்பீர்களைக் கொண்ட

இத்தொழுகையில் முதலாம் தக்பீருக்குப் பின்னால் பாதிஹா ஸுராவும், இரண்டாம் தக்பீருக்குப் பின்னால் ஸலவாத்தும் மூன்றாம் தக்பீருக்குப் பின்னால் ஜனாஸாவுக்கான பிரார்த்தனையும் நான்காம் தக்பீருக்குப் பின்னால் ஸலாமும் இடம் பெறும்.

- ஜனாஸாவுக்குரிய நான்காவது கடமை அடக்கம் செய்வதாகும். கப்ர், பாதுகாப்பானதாக அமைவது வாஜிபாகும். மண்ணின் தன்மைக்கேற்ப இதனை அமைத்துக் கொள்ளலாம். ஜனாஸாவை கப்ரில் வைக்கும் போது இஸ்லாமிய ஒழுங்கு முறைகள் பின்பற்றப்படும். ஜனாஸா கப்ரில் வைக்கப்பட்டதன் பின் மக்பராவிற்குச் சென்றவர்கள் தம் இரு கரங்களாலும் மூன்று அள்ளு மண் போடுவது ஸுன்னத்தானதாகும். கப்ருக்கு அடையாளமாக கல்லை வைப்பது விரும்பத்தக்கதாகும். அடக்கம் செய்தததன் பின் மையித்துக்காக பிரார்த்தனை செய்தல் வேண்டும்.

**தரவிருத்த உள்ளீடுகள் :**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு 01 மரணவியாதியுடையவர்களை அல்லாஹ்வின் ரஹ்மத்தில் ஆர்வமூட்டுவதற்கான இஸ்லாமிய ஒழுங்குகளை எழுதுங்கள்

குழு 02 ஒரு முஸ்லிம் மரணித்தவுடன் செய்ய வேண்டிய ஒழுங்குகளை ஒரு ஆலிமிடம் கேட்டு எழுதுங்கள்.

குழு 03 ஜனாஸாவைக் குளிப்பாட்டுவோர் பேண வேண்டிய ஒழுங்குகளைக் குறிப்பிடுங்கள்

குழு 04 ஜனாஸாத் தொழுகை, அடக்கம் செய்தல் பற்றிய இஸ்லாமிய விதிமுறைகளைக் குறிப்பிடுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

ஊரில் நிகழ்ந்த ஜனாஸா ஒன்றுக்கு தம்மால் செய்ய முடியுமான விடயங்கள் தொடர்பாக குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேரச்சி மட்டம் :2.5 ஸகாத் கடமையை நிறைவேற்றுவதற்காக விதிமுறைகளையும் பயன்களையும் விளங்கி எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- ஸகாத் விதியாகும் ஒவ்வொரு பொருட்களுக்குமான நிஸாப் அளவைப் பட்டியற்படுத்துவார்.
- ஸகாத் பெறத் தகுதியானோரை இனங்கண்டு கூறுவார்.
- ஸகாத்தின் பயன்களை அறிந்து பிறருக்கு எடுத்துக் கூறுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- ஸூரதுத் தௌபாவின் 34, 35 ஆம் வசனங்களை அழகாக ஓதக் கூடிய மாணவனைக் கொண்டு ஓதச் செய்து அதன் மொழி பெயர்ப்பை வாசித்துக் காட்டுங்கள்.
- ஸகாத் விதியாகும் பொருட்கள் பற்றி மாணவர்களின் முன்னறிவை மீள் பரிசீலனை செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - ஸகாத் விதியாகும் செல்வங்கள் பற்றிய அடிப்படைகளை அல்குர்ஆனும், ஸுன்னாவும் கூறிப்பிடுகின்றன.
  - ஸகாத் விதியாகும் செல்வங்கள் நிஸாபை அல்லது குறித்த பெறுமானத்தை அல்லது ஆரம்ப அளவை அடைந்திருத்தல் வேண்டும்.
  - ஸகாத் பெறத் தகுதியான கூட்டத்தினரை அல்குர்ஆனும் ஸுன்னாவும் அடையாளப்படுத்துகின்றன.
  - ஸகாத்தை நடைமுறைப்படுத்துவதால் தனிமனித, சமூக, நன்மைகள் கிடைக்கப்பெறுகின்றன.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

  கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்றுக் குறை நிரப்புச் செய்யுங்கள்.

படி 3
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - கால்நடைகள், தானியம், பழவகைகள், கனிப் பொருட்கள், பணம், வியாபாரப் பொருட்கள் போன்றவற்றில் ஸகாத் விதியாகின்றன.
  - ஸகாத் ஒருவர் மீது விதியாவதற்கு நிபந்தனைகளும் உள்ளன.
  - ஸகாத் விதியாகும் பொருட்கள் குறித்த அதற்குரிய நிஸாபையும், காலத்தையும் அடைந்திருத்தல் வேண்டும்.
  - பக்கீர், மிஸ்கீன், ஆமில், முஅல்லபதுல் குலூப், அர்ரிகாப், காரிமூன், பீஸபீலில்லாஹ், இப்னுஸ் ஸபீல் ஆகிய அல் குர்ஆன் கூறும் எட்டுக் கூட்டத்தினரிடையே ஸகாத் விநியோகப்படும்.
  - ஸகாத்தை வழங்குபவரும், ஸகாத்தைப் பெறுபவர்களும், சமூகமும் பல்வேறு பயன்களை ஸகாத்தை முறையாக நடைமுறைப்படுத்துவதன் மூலம் பெறுவர்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தலகளுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு 01 ஸகாத் விதியாகும் பொருட்களில் கால் நடைகள், தானிய வகைக்குரிய நிஸாப், காலம், கொடுபடவேண்டிய அளவு பற்றிய அட்டவணையொன்றைத் தயார் செய்யுங்கள்.

குழு 02 ஸகாத் விதியாகும் பொருட்களில் தங்கம், வெள்ளி, புதையல், கனிப் பொருட்கள், பணம், வியாபாரப் பொருட்களுக்குரிய நிஸாப், காலம், கொடுபட வேண்டிய அளவு பற்றிய அட்டவணையொன்றை தயார்படுத்துங்கள்.

குழு 03 ஸகாத் பெறத் தகுதியானோர் பற்றிய விளக்கமொன்றை எழுதுங்கள்.

குழு 04 ஸகாத் மூலம் பெற முடியுமான தனிமனித சமூக நன்மைகளை அடையாளம் கண்டு எழுதுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

ஸகாத்தைப் பெறத் தகுதியானோர் மத்தியில் அதனை விநியோகிப்பது தொடர்பாகக் குடும்ப உறுப்பினர்களுடன் கலந்துரையாடி எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 2.0 : இஸ்லாத்தின் அடிப்படைக் கடமைகள், சிறப்புக்கள், அவற்றை நிறைவேற்றும் முறைகள் பற்றி விளங்கி நடைமுறைப்படுத்துவார்.**

**தேரச்சி மட்டம் :2.6 ஹஜ் கடமையை நிறைவேற்றுவது தொடர்பான விளக்கங்களை எடுத்துக்கூறுவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- ஹஜ் விதியாக்கப்பட்ட வரலாற்றை அறிந்து கதையாகக் கூறுவார்.
- ஹஜ்ஜின் பிரதான தலங்களையும் அவற்றின் முக்கியத்துவத்தையும் விளக்குவார்.
- பிரதான தலங்கள் ஒவ்வொன்றிலும் நிறைவேற்ற வேண்டிய கடமைகளை விளக்குவார்.
- ஹஜ்ஜின் பயன்களைப் பட்டியற்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- கஃபதுல்லாஹ்வின் படம் ஒன்றை காட்சிப்படுத்தி அதன் வரலாறு பற்றிய மாணவர்களின் முன்னறிவைப் பரிசீலனை செய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
    - ஹஜ் விதியாக்கப்பட்ட வரலாற்றை அல்குர்ஆனும் ஸுன்னாவும் கூறுகின்றன.
    - ஹஜ்ஜின் முக்கிய தலங்கள் பல்வேறு சிறப்பம்சங்களைக் கொண்டுள்ளன.
    - ஹஜ், உம்ரா கடமைகளின்போது பிரதான தலங்களில் மேற்கொள்ள வேண்டிய கடமைகள் உள்ளன.
    - ஹஜ்ஜின் மூலமாக ஆன்மீக, உலகியல் ரீதியான பயன்கள் கிடைக்கப் பெறுகின்றன.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

  கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

படி 3 • பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.

- ''மஸ்ஜிதுல் ஹராம்'' ''பைதுல்லாஹ்'' என அழைக்கப்படும் க.ஃபா முதன் முதலில் மலக்குகளால் மக்காவில் கட்டப்பட்ட இல்லமாகும்.
- க.ஃபா ஆதம் (அலை), நூஹ் (அலை), இப்ராஹீம் (அலை), முஹம்மத் (ஸல்) எனும் நபிமார்களினாலும், அப்துல்லாஹ் இப்னு ஸுபைர் (ரழி), ஹஜ்ஜாஜ் இப்னு யூசுப், நாலாம் ஸுல்தான் முராத் ஆகியோரினாலும் புனர் நிர்மாணம் செய்யப்பட்டது.
- க.ஃபதுல்லாஹ், ஹஜருல் அஸ்வத், மகாமு இப்ராஹீம், ஸபா மர்வா, ஸம்ஸம், முஸ்தலிபா, மினா எனும் தலங்கள் வரலாற்று அடிப்படையிலும், வேறு வழிகளிலும் முக்கியத்துவங்களைக் கொண்டுள்ளன.
- ஹஜ்ஜின் பிரதான தலங்களில் ஹஜ், உம்ரா கடமைகளை அடிப்படையாகக் கொண்டு பர்ளான வாஜிபான, ஸுன்னத்தான கிரியைகள் மேற்கொள்ளப்படுகின்றன.
- மனிதனைப் புனிதனாக்கக் கூடிய பயன்களும், மனிதத்துவத்தை உலக மாந்தர்களுக்கு வழங்கும் உயர் பண்புகளையும் உள்ளடக்கியதாக இக்கடமை உள்ளது.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தலகளுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு 01 க.ஃபா நிர்மாணிக்கப்பட்ட, புனர்நிர்மாணம் செய்யப்பட்ட வரலாற்றைச் சுருக்கமாக எழுதுங்கள்.

குழு 02 ஹஜ்ஜின் முக்கிய தலங்களை வரைபடங்களோடு குறிப்பிட்டுக் காட்டுங்கள்.

குழு 03 ஹஜ்ஜின் தலங்களில் நிறைவேற்ற வேண்டிய கிரியைகளை விளக்கி எழுதுங்கள்.

குழு 04 ஹஜ்ஜின் ஆன்மீக, உலகியல் பயன்களை பட்டியற்படுத்திக் காட்டுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

வீட்டின் குடும்ப உறுப்பினர் எவராவது ஹஜ் அல்லது உம்ரா கடமையை நிறைவேற்றியிருப்பின் அவருடன் கலந்துரையாடி அதன் செயன்முறையைச் சுருக்கமாக எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 3.0 : இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேர்ச்சி மட்டம் : 3.2 மஸ்ஜிதில் பேண வேண்டிய ஆதாபுகளை அறிந்து கடைப்பிடிப்பார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- மஸ்ஜிதின் முக்கியத்துவம், கண்ணியம் குறித்து எடுத்துரைப்பார்.
- மஸ்ஜிதிலும் அதன் சூழலிலும் பேண வேண்டிய ஒழுக்கங்களைப் பட்டியலிடுவார்.
- மஸ்ஜிதிலும் அதன் சூழலிலும் பேண வேண்டிய ஒழுக்கங்களைக் கடைப்பிடித்து வருவார்.
- மஸ்ஜிதையும் அதன் சூழலையும் தூய்மையாகவும் கண்ணியமாகவும் வைத்திருப்பதற்குப் பங்களிப்புச் செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- மஸ்ஜிதில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பது பற்றி மாணவரிடம் வினவி அவர்களது கருத்துக்களை கரும்பலகையில் குறித்துக் கொள்ளுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
  - இறைவனின் பார்வையில் உலகில் அவனுக்கு மிக விருப்பமான இடம் மஸ்ஜிதாகும்.
  - மஸ்ஜிதுடன் உளப்பூர்வமான தொடர்பை வைத்திருப்பவர் மறுமையில் அர்ஷின் நிழலில் இருப்பார்.
  - மஸ்ஜிதில் ஜமாஅத் தொழுகை போன்ற கூட்டுக் கடமைகளில் ஈடுபட வேண்டும்.
  - மஸ்ஜிதுக்குரிய கண்ணியத்தை வழங்கி அங்கு பேண வேண்டிய ஒழுக்கங்களை அனுசரித்தொழுக வேண்டும்.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

  கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.

- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

**படி 3** பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- மஸ்ஜித் என்ற பதம் ஸுஜூத் செய்யும் இடம் என்ற கருத்தை தருகின்றது. அது புனித தலம். அருள் நிறைந்த இடம், மலக்குகளால் சூழப்பட்ட இடம் என அடையாளப்படுத்தப்படுகின்றது.
- மஸ்ஜிதுக்காக உழைப்பது, அதனோடு நெருங்கிய தொடர்பை வைத்துக் கொள்வது அதற்காக தொண்டு செய்வது அனைத்தும் ஈமானின் அடையாளமாகும்.
- மஸ்ஜிதுக்கு விருப்பத்துடனும் ஆர்வத்துடனும் செல்வது ஜிஹாதிற்கு ஒப்பானது. நிறைவான கூலியைப் பெற்றுத் தரும் ஒரு நற்செயலாகும்.
- மஸ்ஜிதை தூய்மையாகவும், நேர்த்தியாகவும் மணங்கமளவும், அழகாகவும் வைத்திருக்கும்படி நபி (ஸல்) அவர்கள் கட்டளையிட்டுள்ளார்கள்.
- மஸ்ஜிதைக் கூட்டிப் பெருக்குவது, தூய்மையாக வைத்திருப்பது, மஸ்ஜிதில் உள்ள குப்பை கூழங்களை வெளியேற்றுவது, மஸ்ஜிதில் நறுமணம் கமழச் செய்வது குறிப்பாக வெள்ளிக்கிழமையன்று மஸ்ஜிதை நறுமணம் கொள்ளச் செய்வது - இச் செயல்கள் அனைத்தும் சுவனத்திற்கு இட்டுச் செல்லும் வழிகளாகும் (இப்னுமாஜா)
- ''மஸ்ஜிதைத் தூய்மைப்படுத்தி வைத்திருப்பது அழகிய கண்கள் கொண்ட ஹூருலீன்களுக்குரிய மஹர் ஆகும்'' (தபரானி)
- மஸ்ஜிதுள் நுழையும்போதும், வெளியேறும்போதும் பிரார்த்தித்துக்கொள்ள இஸ்லாம் வழிகாட்டுகிறது.
- மஸ்ஜிதில் அமைதி, கண்ணியம் பேணி நடந்து கொள்ள வேண்டும். அங்கு கூக்குரலிடுவது, பரிகாசம் செய்வது, உலக விடயங்கள் குறித்துப் பேசுவது, கொடுக்கல் வாங்கல் செய்வது முற்றாக தவிர்க்கப்பட வேண்டும்.
- மஸ்ஜிதில் மார்க்க விடயங்களுடன் தொடர்பான நல்ல போதனைகள், நல்லமல்கள், பயன்தரு நிகழ்ச்சிகள் போன்றவற்றை நடாத்த ஒத்துழைப்பு வழங்குவதும் அவற்றில் பங்கேற்பதும் சிறந்த செயல்களாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தலகளுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு 01 மஸ்ஜிதின் முக்கியத்துவம் பற்றிய அல் குர்ஆன் ஸுன்னாவின் போதனைகளைத் தேடி எழுதுங்கள்.

குழு 02 ஒரு முஸ்லிம் மஸ்ஜிதில் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும் என்பதை பட்டியலிட்டு எழுதுங்கள்.

குழு 03 மஸ்ஜிதில் தவிர்ந்து கொள்ள வேண்டியவைகள் குறித்துக் கலந்துரையாடுங்கள்.

குழு 04 மஸ்ஜிதின் செயற்பாடுகள் மேலும் சிறப்பிக்கவும் அதனை முன்மாதிரிமிக்க ஒரு மஸ்ஜிதாக மாற்றவும் உங்களது ஆலோசனைகளை முன்வைத்து நம்பிக்கையாளர் சபைக்கு ஒரு கடிதம் எழுதுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

நண்பர்களுடன் சேர்ந்து மூத்தோரின் வழிகாட்டலுடன் விடுமுறை நாள் ஒன்றில் மஸ்ஜிதில் சிரமதானப் பணியொன்றை மேற்கொள்ள வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி : 3.0 இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேரச்சி மட்டம்: 3.3 பாவமன்னிப்புப் கோருவதை வழக்கமாக்கிக் கொள்வார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள் :**

- பாவமன்னிப்பின் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- பாவமன்னிப்புக் கேட்பதற்குப் பொருத்தமான நேரங்களைப் பட்டியல் படுத்துவார்.
- பாவமன்னிப்புக் கேட்பதற்கான நிபந்தனைகளை எடுத்துக்கூறுவார்.
- நபி (ஸல்) அவர்கள் ஓதிவந்த இஸ்தி.ஃ.பார்களை தினமும் ஓதிவருவார்

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

பின்வரும் சம்பவத்தைக் கதையாகக் கூறி அது தரும் படிப்பினைகளைக் கலந்துரையாடிப் பாடப் பிரவேசம் செய்யுங்கள்.

**படி 1**

- அது மூஸா (அலை) அவர்கள் வாழ்ந்த காலம். மழையின்றி மக்கள் வருந்தினர். நாடு பஞ்சத்தால் வாடியது. மக்கள் மூஸா (அலை) அவர்களிடம் முறையிட்டனர். எழுபதுனாயிரம் மக்கள் ஒன்று கூடி அல்லாஹ்விடம் துஆ கேட்டனர். இருந்தும் மழை பொழியவில்லை. காரணம் கேட்கப்பட்டபோது நாற்பது ஆண்டுகளாகப் பாவத்தில் மூழ்கியுள்ள ஒருவர் அங்கே இருக்கிறார். அவரை வெளியேற்றுங்கள் என்று அல்லாஹ்விடமிருந்து கட்டளை வந்தது. அப்படியான ஒருவர் இங்கே இருந்தால் உடனே வெளியேற்றிவிடுமாறு மூஸா (அலை) அவர்கள் அறிவித்தார்கள். அதனைக் கேட்ட அந்தப் பாவி மனம் உருகினான். தனது நிலையை எண்ணிப் பாவமன்னிப்புக் கோரினான். இதன் பின்னர் மழை பொழிய ஆரம்பித்தது. மூஸா (அலை) மழை பொழிவதற்கான காரணத்தை வினவினார்கள். குறித்த நபர் பாவமன்னிப்புக் கேட்டதாக அல்லாஹ் அறிவித்தான். அந்த நபரை தனக்குக் காட்டித் தரும்படி மூஸா (அலை) வினவினார்கள். தான் நாற்பது வருடகாலம் மறைத்து வைத்திருந்த ஒருவரை காட்டித்தர முடியாதென அல்லாஹ் மறுத்துவிட்டான்.

பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

- பாவமன்னிப்புத் தேடுவது ஓர் இபாதாவாகும். முன்பின் பாவங்கள் மன்னிக்கப்பட்ட நபி (ஸல்) அவர்கள் ஒவ்வொரு நாளும் நூறு முறை அல்லாஹ்விடம் பாவமன்னிப்புத் தேடினார்கள்.
- இஸ்தி.ஃ.பார், தவ்பா இரண்டையும் கைக்கொள்ளும்படி அல்குர்ஆனும் ஸுன்னாவும் கட்டளையிடுகின்றன.

- பாவங்களை நீக்கி அடியானைப் பரிசுத்தப்படுத்துவதற்கு தவ்பாவும், இஸ்தி∴பாரும் துணை நிற்கின்றன.

படி 2

- மாணவர்களை நான்கு குழக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

  கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.

- மாணவர் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் அறிக்கைகளைச் சமர்ப்பிக்க சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- ஆக்கபூர்வமான மேலதிக கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த அதே குழுவுக்கு முதலில் வாய்ப்பளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் கருத்துக்களையும் பெற்று குறை நிரப்புச் செய்யுங்கள்.

படி 3

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.
- ஆதமுடைய மக்கள் பாவம் செய்யக்கூடியவர்கள். ஆயினும் அவர்களுள் சிறந்தவர் பாவமன்னிப்புத் தேடுபவராவார்.
- பாவம் செய்யும் இயல்பைக் கொண்ட மனிதன் அதிலிருந்து விலகி நடக்க வேண்டும். ஆயினும் அவனால் தவறுகள் நிகழ்ந்தால் உடனே தவ்பா கேட்க வேண்டும்.
- அல்லாஹ் கருணையாளன், மன்னிப்பவன், அவனது பெரும் தன்மையினால் பாவியினரை மன்னித்துவிடுகின்றான்.
- பாவ மன்னிப்புக் கேட்பதற்கு பொருத்தமான நேரமாக தஹஜ்ஜத் நேரம் மற்றும் ஜும்ஆத் தொழுகைக்கு பிந்திய நேரங்கள் காணப்படுகின்றன.
- பாவ மன்னிப்புக் கேட்பதற்கான நிபந்தனைகளை அனுசரித்தே பாவமன்னிப்பு கேட்க வேண்டும். அவை: குறித்த பாவத்திலிருந்து முற்றாக நீங்குதல், குறித்த பாவத்தை செய்தமைக்காக மனம் வருந்துதல், திரும்பவும் அப்பாவத்தை செய்வதில்லையென உறுதி கொள்ளல், அடியார்களுடன் தொடர்பான பாவங்களெனின் முதலில் அவர்களிடம் மன்னிப்பைப் பெற்றுக் கொள்ளல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

குழு 01 தௌபா பற்றி வந்துள்ள அல்குர்ஆன், ஸுன்னா போதனைகள் இவ்விரண்டைத் தேடி எழுதுங்கள்.

குழு 012 தௌபா ஏற்றுக் கொள்ளப்படுவதற்கான நிபந்தனைகளை விளக்கி எழுதுங்கள்.

குழு 03 நாளாந்தம் ஓதிவரக் கூடிய தவ்பாக்களை திரட்டி எழுதுங்கள்.

குழு 04 தௌபா ஏன் ஒரு மு.்.மினுக்கு இன்றியமையாதாகின்றது என்பது பற்றி விளக்கி எழுதுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

நபி (ஸல்) அவர்கள் ஓதி வந்த இஸ்தி.்.பார்களை மனனமிட்டு, காலை மாலை ஓதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேரச்சி மட்டம் 4.1: அல்குர்ஆன் அருளப்பட்டு தொகுக்கப்பட்ட வரலாற்றை விளக்குவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- அல்குர்ஆன் அருளப்பட்ட முறையினை விளக்குவார்.
- முதல் வஹி அருளப்பட்ட நிகழ்வைக் கதையாகக் கூறுவார்.
- அல்குர்ஆன் பாதுகாக்கப்பட்ட, தொகுக்கப்பட்ட முறையினைச் சுருக்கமாக விளக்குவார்.
- அல்குர்ஆன் முழுமையாகப் பாதுகாக்கப்பட்டதென்பதை நம்பி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- கீழுள்ள உரைப் பகுதியை நன்கு வாசிக்கத் தெரிந்த ஒரு மாணவன் அல்லது மாணவி மூலம் வகுப்பறையில் வாசிக்க விடுங்கள். பின்னர் அது பற்றிக் கலந்துரையாடுங்கள்.
- மக்காவையும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களையும் அமாவாசை இருள் கவ்விக் கொண்டிருந்தது. அவ்விருளை ஊடறுத்துக் கொண்டு ஓர் ஒளிப் பிழம்பு ஹிறாவை நோக்கி விரைந்தது. அது அங்கு தவத்தில் ஈடுபட்டிருந்த நபி (ஸல்) அவர்களைக் கட்டித் தழுவி ‘இக்ரஉ’ என்றது. எனக்கு ஓதத் தெரியாதே என்று அவர் உண்மையைப் பிரகடனப்படுத்தினார். உருவம் அவர்களை மீண்டும் கட்டித்தழுவியது. *இக்ரஉ* எனக் கூறியது. இரண்டாவது முறையாகவும் அதே பதில் கிடைக்க, மூன்றாம் முறையாக அவரைக் கட்டித் தழுவி *இக்ரஉ* (ஓதுவீராக) என்றது. அப்போது எதை ஓதுவது என நபி (ஸல்) அவர்கள் கேட்டார்கள். ஸூறதுல் அலக்கின் முதல் ஐந்து வசனங்களையும் ஓதிக் காட்டி அவற்றை மீண்டும் ஓதுமாறு கூறியது. நபி (ஸல்) அவர்கள் அதனைப் மனனமிட்டுக் கொண்டார்கள்.
- அல்குர்ஆன், முதன் முதல் நபி (ஸல்) அவர்கள் ஹிறாக்குகையில் தனித்திருந்து தவம் செய்தபோது அவர்களது 40 வது வயதில் அருளப்பட்டது. அதனை ஒளி உருவில் தோன்றிய ஜிப்ரீல் (அலை) அவர்கள் கற்றுக் கொடுத்தார்கள்.
- பின்னர், சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கு ஏற்ப படிப்படியாக ஒரு வசனமாகவும், சில வசனங்களாகவும், சிறிய சூறாக்களாகவும் அருளப்பட்டுக் கொண்டிருந்தது.

- ஒவ்வொரு முறையும் ஜிப்ரீல் (அலை) அவர்கள் அல்லாஹ்விடமிருந்து வஹியைக் கொண்டு வந்து கொடுத்துக்கொண்டிருந்தார். அவர்களுக்கு வஹி அருளப்படும்போது அவர்களின் உடம்பில் மாற்றங்கள் தெரிந்தன.

- வஹி அருளப்பட்டு ஜிப்ரீல் (அலை) அவர்கள் மறைந்ததன் பின் நபி (ஸல்) அவர்கள் தமக்கு அருளப்பட்ட வஹியை தம்முடன் இருக்கும் ஸஹாபாக்களிடமோ மனைவிகளிடமோ எடுத்துக் கூறுவார்கள். அவர்கள் அதனை மனனமிட்டுக் கொள்வார்கள்.

- வஹியை எழுத்தில் வடிப்பதற்காக நபி (ஸல்) அவர்கள் *குத்தாபுல் வஹி* எனப்பட்ட சிலரை அமர்த்தியிருந்தார்கள். அவர்கள் அருளப்பட்ட வசனங்களைக் கடதாசி, தோல், தடித்த எலும்பு, பட்டை, புடவை, வெண்கல் போன்றவற்றில் உடனுக்குடன் எழுதிக் கொண்டார்கள். அதேவேளை அருளப்பட்ட வசனம் எங்கு அமைய வேண்டும் என்ற குறிப்பையும் நபி (ஸல்) அவர்கள் கூறியதற்கமைய குறித்துக்கொள்வார்கள். அருளப்பட்ட ஒழுங்கை *தர்தீப் நுஸுூல்* எனவும் ஓதப்படும் ஒழுங்கை *தர்தீப் திலாவத்* எனவும் அழைப்பர். இதனால் *தர்தீப் நுஸுூலின்* ஒழுங்கிலன்றி, *தர்தீப் திலாவத்*தின் ஒழுங்கில் அல்குர்ஆன் ஓதப்பட்டும், எழுதப்பட்டும் பாதுகாக்கப்பட்டு வந்தது.

- முதலில் எல்லோரும் அல்குர்ஆனை மனனமிட்டிருந்தார்கள். அதற்கு வசதியாக சந்தர்ப்பத்திற்கேற்ப சிறிது சிறிதாக அது அருளப்பட்டுக் கொண்டிருந்தது. குத்தாபுல் வஹிகளால் எழுதப்பட்ட பிரதிகளும் அவர்களிடம் இருந்து வந்தன.

- நபி (ஸல்) அவர்களின் வபாத்துக்குப் பின்னர், இடம்பெற்ற *யமாமா* போரில் அல்குர்ஆனை மனனம் செய்திருந்த அதிகமான *ஹாபிழ்கள்* ஷஹீதாகினர். இதனால் அல்குர்ஆன் அழிந்துவிடும் என்ற பயம் உமர் (ரழி) அவர்களுக்கு ஏற்பட்டது. அதனை கலீபாவாக இருந்த அபூபக்ர் (ரழி) அவர்களிடம் தெரிவிக்க, தேவையை உணர்ந்த கலீபா அவர்கள், ஸைத் இப்னு தாபித் (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு குழுவை நியமித்து அல்குர்ஆனை ஏட்டில் பதிக்கும் முயற்சியை ஆரம்பித்து வைத்தார்கள்.

- ஸைத் பின் தாபித் (ரழி) அவர்களும் தம்மிடம் ஒப்படைக்கப்பட்ட பணியை அமானிதமாகக் கருதிப் பிழையின்றிச் செய்து முடித்தார்கள். அவர்களால் தொகுக்கப்பட்ட பிரதி, *முஸ்ஹப்* எனப்பட்டது. இது ஹப்ஸா (ரழி) அவர்களின் பாதுகாப்பில் வைக்கப்பட்டது.

- கலீபா உஸ்மான் (ரழி) அவர்களின் காலத்தில், ஆர்மீனிய பிரதேசத்தில் இடம் பெற்ற போர்க்களத்தில் அல்குர்ஆனை வெவ்வேறு மொழி வழக்கில் ஓதப்படுவதையும், தாம் ஓதுவதே சரியென வாதிப்பதையும் தளபதியாகச் சென்ற ஹுதைபா (ரழி) அவர்கள் அவதானித்தார்கள். இதனை கலீபாவிடம் முறையிட்டு முஸ்லிம்ளைப் பிளவுபடாமல் பாதுகாக்குமாறு கோரினார்கள்.

- கலீபா, குறைஷியரின் வழக்கு மொழியை தெரிந்த ஸஹாபாக்கள் சிலருடன், ஸைத் இப்னு ஸாபித் (ரழி) அவர்களின் தலைமையில் ஒரு குழுவை

அமைத்து, குறைஷிகளின் வழக்கு மொழியில் சில பிரதிகளை எழுதுவித்தார்கள். பின்னர், ஒவ்வொரு மாகாணத்துக்கும் குறைஷிகளின் வழக்கு மொழியில் ஓதத் தெரிந்த ஹாபிழ்களுடன் ஒவ்வொரு பிரதியை அனுப்பிவைத்தார்கள். இனிமேல் குறிப்பிட்ட காரி ஓதும் முறையிலேயே ஓத வேண்டுமென்றும், குறிப்பிட்ட பிரிதியைப் பார்த்தே எழுத வேண்டும் என்றும் கட்டளை பிறப்பித்தார்கள். இதனால் தான் உஸ்மான் (ரழி) அவர்கள் '*ஜாமிஉல் குர்ஆன்*' என அழைக்கப்படுகின்றார். இவரது காலப்பிரதி *முஸ்ஹப் உஸ்மானி* என வழங்கப்படுகின்றது.

- ஸஹாபாக்கள் வாழும் காலத்திலேயே எந்தக் குறைபாடுகளும் இன்றி அல்குர்ஆன் குறைஷிகளின் வழக்கு மொழியில் நூலுருவில் பதிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டது. ஏனெனில் அவ்வழக்கு மொழியிலேயே அது அருளப்பட்டது. எனவே அதனைத் தொடர்ந்து அல்குர்ஆன், அவ்வாறே ஓதப்பட்டும், எழுதப்பட்டும் மனனமிடப்பட்டும், பிற்காலத்தில் அச்சிடப்பட்டும் பாதுகாக்கப்பட்டு வருகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

மாணவர்களை நான்கு குழுக்காகப் பிரித்து, ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

**குழு 01** : நபி (ஸல்) அவர்களுக்கு முதல் வஹி அருளப்பட்ட முறையைத் தொகுத்து எழுதுங்கள்.

**குழு 02** : நபி (ஸல்) அவர்களுக்கு வஹி அருளப்பட்ட முறையினைச் சில உதாரணங்களுடன் எடுத்துக் காட்டுங்கள்.

**குழு 03** : அல்குர்ஆன் நூலுருப்படுத்தப்பட்ட பின்னணியைப் படிமுறையாக எழுதுங்கள்.

**குழு 04** : அல்குர்ஆன் நபி (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட அதே வடிவில் இன்றும் உள்ளது என்பதை ஆதாரபூர்வமாக நிரூபித்துக் காட்டுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

வீடுகளில் உள்ள அல்குர்ஆன் பிரதிகளைப் பார்த்து அவற்றில் அமைந்துள்ள எழுத்து வடிவங்களின் மாதிரிகள் பற்றிப் பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேரச்சி மட்டம் :4.2 சூறதுல் ழுஹா வை திருத்தமாக ஓதி அதன் உள்ளடக்கத்தை விளக்குவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- சூறத்துல் ழுஹா அருளப்பட்ட பின்னணியைச் சம்பவமாகக் கூறுவார்.
- சூறத்துல் ழுஹா எவ்வாறு நபியவர்களுக்கு ஆறுதலாய் அமைந்தது என்பதை எடுத்துக் காட்டுவார்.
- சூறத்துல் ழுஹாவின் சொற்களுக்கான பொருள் விளக்கத்தைக் கூறுவார்.
- சூறத்துல் ழுஹாவின் போதனைகளை விளங்கி வாழ்வில் கடைப்பிடிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- *ஸூறதுல் ழுஹா*வை இறுவட்டு அல்லது ஒலிநாடா மூலம் ஒலிக்கச் செய்யுங்கள்.
- அழகிய குரலில், தஜ்வீத் சட்டங்களை அனுசரித்து ஓதக்கூடிய ஒரு மாணவன் மூலம் வகுப்பில் ஓதிக் காண்பித்துச் செவிமடுக்க வழிசெய்யுங்கள்.
- பின்வரும் விடயங்களை அடிப்படையாகக் கொண்டு விளக்கமளியுங்கள்.
    - *ஸூறா ழுஹா* குர்ஆனில் 99 ஆவது அத்தியாயமாகும். 11 வசனங்களை உள்ளடக்கிய இந்த சூறா மக்கி ஸூறாவாகும்.
    - சத்தியத்துடன் ஆரம்பிக்கின்ற இந்த சூறா நபி (ஸல்) அவர்களின் கவலை, ஏக்கம் ஆகியவற்றைப் போக்கி அமைதியையும் ஆறுதலையும் அள்ளித் தருவதாய் அமைந்துள்ளது.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3**

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்புப் செய்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவுக்கு வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மீளாய்வு செய்யுங்கள்.
  - நபி (ஸல்) அவர்களது சிரமம் நிறைந்த பயணத்திற்கிடையில் ஜிப்ரீல் (அலை) அவர்களின் சந்திப்பும் அதன் மூலம் கிடைக்கும் இறைவனின் தொடர்பும் தான் அவர்களுக்கு கட்டுச்சாதம் போல் அமைந்திருந்தது.
  - வஹி கொண்டு வந்த ஜிப்ரீல் (அலை) அவர்களின் வருகை சிறிது காலம் தாமதமாயிற்று. இதனால் நபி (ஸல்) அவர்கள் கவலையுற்றார்கள். எதிரிகள் முஹம்மதை அவருடைய இறைவன் கைவிட்டுவிட்டான் என கேலி செய்தனர்.
  - இச் சந்தர்ப்பத்தில் நபி (ஸல்) அவர்களுக்கு ஆறுதல் அளித்து அவரை உறுதிப்படுத்துவதாக அருளப்பட்ட இந்த ஸூறா நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு, நேசம், பாசம், கருணை, பரிவு. அமைதி, உறுதி, நம்பிக்கை அனைத்தையும் அள்ளிச் சொரிவதாய் அமைந்துள்ளது.
  - அல்லாஹ் தன் தூதர் (ஸல்) அவர்களைக் கைவிடவில்லை என்பதை அறுதியிட்டு சொல்வதற்காகவே அல்லாஹ் சத்தியங்களைக் கொண்டு ஆரம்பிக்கின்றான்.
  - அனாதைகளை மதித்து அரவணைக்க வேண்டும் . கேட்டு வருபவர்களுக்கு வழங்கப்படவேண்டும். அவர்களை விரட்டக் கூடாது. இறைவன் தந்த அருட்கொடைகளை எடுத்துரைத்து மகிழ வேண்டும். அவற்றை மறைக்கக் கூடாது போன்ற போதனைகளை இந்த *ஸூறா* தருகின்றது.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு 01** : ஸூறா லுஹா அருளப்பட்ட பின்னணியை விளக்கமாக எழுதுங்கள்.

**குழு 02** : ஸூறா லுஹா நபி (ஸல்) அவர்களுக்கு எவ்வாறு ஆறுதலாய் அமைந்தது என்பதைக் குறிப்பிடுங்கள்.

**குழு 03** : ஸூறா லுஹா முன்வைக்கும் நற்பண்புகளை விளக்கி எழுதுங்கள்.

**குழு 04** : ஸூறா லுஹாவில் உள்ள அறபுப் பதங்களை எழுதி அவற்றுக்கான பொருளை எழுதுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

ஸூறா லுஹாவை மனனமிட்டு அதன் பொருளறிந்து தொழுகைகளில் ஓதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி : 3.0 இஸ்லாம் கூறும் ஒழுக்கப் பண்புகளை அறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை விளங்கி தனிநபர் வாழ்விலும் சமூக வாழ்விலும் கடைப்பிடித்து முன்மாதிரியாக வாழ்வதோடு ஏனையவருக்கும் வழி காட்டுவார்.**

**தேரச்சி மட்டம்: 3.1 நேரம் பேணி நடப்பார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள் :**

- நேரத்தின் முக்கியத்தவம் பற்றிக் குர்ஆன் ஸுன்னா அடிப்படையில் விளக்குவார்.
- அடிப்படைக் கடமைகளை நிறைவேற்றுவதன் ஊடாக நேரம் பேணல் பற்றி எடுத்துக் காட்டுவார்.
- நேரம் பேணுவதன் மூலம் கிடைக்கும் நன்மைகளைப் பட்டியற்படுத்துவார்.
- தனது நாளாந்தச் செயற்பாடுகளில் நேரம் பேணி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- பின்வரும் கூற்றை எழுதிக் காட்சிப்படுத்தி அதனை வாசிக்கச் செய்து கருத்துப் பரிமாறுங்கள்.

  'ஒரு நாள் புலர்ந்தது, அந்நாளில் எனது செயற்பாடுகளில் சிறிதேனும் முன்னேற்றம் காணாத நிலையில் எனது ஆயுள் குறைந்து விடுமாயின் அதற்காக நான் கவலைப்படுவது போல வேறு எதற்காகவும் கவலைப்பட மாட்டேன். - அப்துல்லாஹ் இப்னு மஸ்ஊத் (ரழி)-

- இஸ்லாம், நேரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டி அதனை உரியவாறு பயன்படுத்த வேண்டும் என அறிவுறுத்துகின்றது.
- நேரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுவதற்காக நேரங்களின் பெயர் குறித்துக் கூறியுள்ளதோடு அதன் மீது அல்குர்ஆன் சத்தியம் செய்துள்ளது.
- நேரத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்த வேண்டும்.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3**

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்புப் செய்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவுக்கு வழங்குங்கள்.

- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மீளாய்வு செய்யுங்கள்.
- கடந்து செல்லும் நேரம் மீட்டிப் பெற முடியாததாக இருப்பதால் செல்வத்தை விட எச்சரிக்கையுடனும், அக்கறையுடனும் காலத்தையும், நேரத்தையும் பயன்படுத்த வேண்டும்.
- நாம் நேரத்தைப் பயன்படுத்தாது போனால் நேரம் எம்மை விட்டு ஓடிவிடும், எம்மை அழித்துவிடும்.
- நேரத்தை எமது உடல், அறிவு, ஆன்மா விருத்திக்காகவும், சமய சமூக நலன்களுக்காகவும் பயன்படுத்த வேண்டும்.
- நேரத்தை வீணாக்குவது அல்லாஹ்வின் வெறுப்பை உண்டாக்கும்.
- மறுமையில் வாழ்வு, வாலிபம் பற்றிக் குறிப்பாக விசாரிக்கப்படும்.
- இஸ்லாத்தின் கடமைகள் நேரத்தை ஒழுங்குபடுத்த வழிகாட்டுகின்றன. ஐவேளையைத் தொழுகையில் உரிய நேரத்தில் தொழுவது நேரத்திற்கேற்ப இயங்குவதற்கான பயிற்சிகளில் ஒன்றாகும்.
- நாளாந்த, வாராந்த, மாதாந்த, வருடாந்த, பருவகால செயற்பாடுகளுக்கான நேரசூசியை இஸ்லாம் வழங்கியுள்ளது.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு 01** அல்குர்ஆன் காலத்தின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுவதற்காக காலங்களின் மீது சத்தியம் செய்துள்ள அல்குர்ஆன் வசனங்களை தர்ஜமா மூலம் கண்டறிந்து தொகுத்து எழுதுங்கள்.

**குழு 02** காலத்தைத் திட்டமிட்டுப் பயன்படுத்துவதற்காக இஸ்லாம் வகுத்துத் தந்துள்ள இபாதத்துக்களைப் பட்டியற்படுத்துங்கள்.

**குழு 03** வார இறுதி நாட்களில் நேரத்தைத் திட்டமிட்டுச் செயற்படுத்துவதற்கான ஒரு கால அட்டவணையைத் தயாரித்துக் காட்டுங்கள்.

**குழு 04** நேரத்தைத் திட்டமிடுவதால் ஏற்படும் பயன்களையும் திட்டமிடாமல் கடத்துவதால் ஏற்படும் விளைவுகளையும் பட்டியற்படுத்துங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

திட்டமிட்டுச் செயற்படுவதற்கான முஹாஸபா அட்டவணை ஒன்றை பெற்றோருடன் சேர்ந்து தயாரித்து அதனை செயற்படுத்தி வார வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 4.0 : இஸ்லாத்தின் மூலாதாரங்கள் பற்றிய தெளிவான அறிவைப் பெற்று அதனடிப்படையில் வாழ்க்கை முறையை நெறிப்படுத்திக் கொள்வார்.**

**தேரச்சி மட்டம் : 4.3 பிரதான ஹதீஸ் கிரந்தங்களையும் அவற்றின் ஆசிரியர்களையும் அறிந்து கூறுவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- பிரதான ஹதீஸ் கிரந்தங்களைப் பட்டியற்படுத்துவார்.
- பிரதான ஹதீஸ் கிரந்தங்களின் ஆசிரியர்களை இனங்கண்டு கூறுவார்.
- அவற்றின் அமைப்புப் பற்றி சுருக்கமாக எழுதுவார்.
- பிரதான ஹதீஸ் நூல்களின் தமிழ் மொழிபெயர்ப்புக்களைத் தேடி வாசிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி 1**

- பின்வரும் அட்டவணையைக் காட்சிப்படுத்தி கருத்துப் பரிமாறுங்கள்.

| | பெயர் | தந்தை | பிறப்பிடம் | வாழ்ந்தகாலம் | நூல் |
|---|---|---|---|---|---|
| இமாம் புகாரி | முஹம்மத் | இஸ்மாயில் | புகாரா | 194-256 | ஸஹீஹ் புகாரி |
| இமாம் முஸ்லிம் | முஸ்லிம் | ஹஜ்ஜாஜ் | நைசாப்பூர் | 204-261 | ஸஹீஹ் முஸ்லிம் |
| இமாம் அபூ தாவூத் | ஸுலைமான் | அஷ்அத் | ஸிஜிஸ்தான் | 201-275 | ஸுனன் அபூதாவூத் |
| இமாம் திர்மிதி | முஹம்மத் | ஈஸா | திர்மிதி | 209-279 | ஜாமிஉத் திர்மிதி |
| இமாம் நஸாஈ | அஹ்மத் | சுஐபு | நஸாஈ | 215-303 | ஸுனன் நஸாஈ |
| இமாம் இப்னு மாஜா | முஹம்மத் | யஸீத் | கஸ்வின் | 209-273 | ஸுனன் இப்னு மாஜா |

- இவர்கள் வாழ்ந்த காலம், பிரதேசம், நூலின் பெயர் என்பவற்றைப் பற்றிக் கருத்துப் பரிமாறுங்கள்.
- ஹிஜாஸுக்கு வெளியே முன்னைய பைசாந்திய, பாரசீக ஆட்சிப் பிரதேசங்களில் வாழ்ந்தவர்கள்.
- ஸஹீஹ், ஸுனன் ஜாமிஉ சொற்பிரயோகங்கள்
- ஹிஜ்ரி இரண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்தவர்கள் (194-303)

**படி 2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

படி 3

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்புப் செய்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவுக்கு வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்ரும் கருத்துக்களை முன்வைத்துக் கலந்துரையாடுங்கள்.
- நபி (ஸல்) அவர்களின் காலத்திலோ, ஸஹாபாக்கள் காலத்திலோ ஹதீஸ்கள் நூலுருவில் தொகுக்கப்படவில்லை.
- கலீபா இரண்டாம் உமரின் காலத்தில் (ஹி 99-101) எழுத்துருவில் தொகுக்குமாறு அறிஞர்களிடம் வேண்டுகோள் விடுக்கப்பட்டது.
- இதன் காரணமாக *முஸ்னத்* நூல்கள் தோன்றின. அவற்றில் *ராவிகளை* மையப்படுத்திப் பாடங்கள் அமைந்தன.
- அடுத்த கட்டத்தில் விடயத்தை மையப்படுத்திப் பாடங்கள் எழுதப்பட்டன. இத்தகைய நூல் *முஸன்னப் அல்லது ஜாமிஉ* எனப்பட்டது.
- ஸிஹாஹுஸ் ஸித்தா என்ற ஆறு நூல்களும் இதே பாணியில் அமைந்தன.
- இதற்கு முன்னோடியாக அமைந்தவர் இமாம் புகாரி (ரஹ்) ஆவார். அவர் 16 வருட காலமாக முஸ்லிம் உலகெங்கும் பயணம் செய்து ஹதீஸ்களை அறிந்தவர்களை நேரில் சந்தித்து அவை கிடைக்கப் பெற்ற வழிகளையும் (ராவிகள்) கேட்டறிந்து அவர்களையும் இனம்கண்டு பகுத்தாய்ந்து நூல்வடிவில் பதிந்தார்கள். எனினும் தாம் தொகுத்த நூல்களை மூத்த அறிஞர்களிடம் காட்டிச் சான்றுரை பெற்றார்கள். இதே வழிமுறையை ஏனைய *முஹத்திஸீன்களும்* கையாண்டார்கள்.
- இவற்றுக்கு விளக்க நூல்கள் பல எழுதப்பட்டுள்ளன. ஸஹீஹ் புகாரிக்குப் போன்றே ஏனைய நூல்களுக்கும் விளக்க நூல்கள் எழுதப்பட்டுள்ளன.

| | | |
|---|---|---|
| உ-ம் : | பத்ஹுல் பாரி | - ஸஹீஸ் புகாரி |
| | அல் மின்ஹாஜ் | - ஸஹீஹ் முஸ்லிம் |
| | மஆலிமுஸ்ஸுன்னா | - அபூதாவூத் |
| | துஹ்பதுல் அஹ்வத் | - திர்மிதி |
| | அல் இ.்.லாம் பீ ஸுனன் | - நஸயீ |

- *ஸிஹாஹ் ஸித்தா* எனப்படும் நூல்களை *ஜாமிஉ*, *ஸுனன்* என இரண்டாக வகுப்பர். மார்க்கத்தின் எல்லாத் துறை சார்ந்த தலைப்புக்களையும்

தொகுத்துத் தரும் நூல் *ஜாமிஉ* எனவும் (ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம்) மார்க்கத்தின் பெரும்பாலான தலைப்புக்களை உள்ளடக்கியவை (ஏனைய நான்கு நூல்கள்) *ஸுனன்* எனவும் அழைக்கப்படும்.

- இந்த ஆறு நூல்களிலும் பெரும்பாலும் 4000 முதல் 5000 வரையான ஹதீஸ்களே காணப்படுகின்றன. அவற்றுள் ஸஹீஹ் புகாரியில் மட்டும் 7275 ஹதீஸ்கள் உள்ளன.

- ஹதீஸ்கள் இஸ்லாமிய வாழ்வில் முக்கிய பங்கு வகிப்பதால் அறபு மொழி தெரியாதவர்களும் அறிந்து கொள்ளும் வகையில் மொழி பெயர்ப்பு நூல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

  (உ-ம் : ஸஹீஹ் புகாரி, ஸஹீஹ் முஸ்லிம், ஜாமிஉத் திர்மிதி, முஸ்னத் அஹ்மத் - மொழிபெயர்ப்பு சென்னை ரஹமத் அறக்கட்டளை நிறுவனம்)

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

நபிமொழி திரட்டிய நால்வர் - முஹம்மத் முஸ்தபா

இஸ்லாத்தின் மூலாதாரங்கள் - அஹதியா பரீட்சைக்கானது

**கணிப்பீட்டு மதிப்பீட்டுக்கான அறிவுறுத்தல்கள்.**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம்**

**குழு 01** : நபி (ஸல்) அவர்கள் காலத்திலோ ஸஹாபாக்கள் காலத்திலோ தொகுக்கப்படாத ஹதீஸ்கள் ஏன் தொகுக்கப்பட்டன என்பதைக் கண்டறிந்து எழுதுங்கள்.

**குழு 02** : குறிப்பிட்ட ஆறு நூல்களின் காலம், பணி பற்றிக் கலந்துரையாடி எழுதுங்கள்.

**குழு 03** : இமாம் புகாரி (ரஹ்0 அவர்களின் பங்களிப்பை கண்டறிந்து எழுதுங்கள்.

**குழு 04** : தமிழில் வெளியாகியுள்ள ஹதீஸ் மொழி பெயர்ப்பு நூல்களின் பட்டியல் ஒன்றை தயாரியுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

தமிழ் மொழியல்லாத அறபுத் தமிழ், ஆங்கிலம், சிங்கள மொழிகளிலான ஹதீஸ் மொழிபெயர்ப்பு நூல்களைக் கேட்டறிந்து எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேரச்சி மட்டம்: 5.1 முஹம்மத் (ஸல்) அவர்களின் ஹஜ்ஜதுல் விதா வின் உபதேசங்களைப் பின்பற்றுவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- ஹஜ்ஜதுல் விதா நிகழ்ந்த சந்தர்ப்பத்தை வரலாற்றோட்டத்தில் விளக்குவார்.
- ஹஜ்ஜதுல் விதா பிரசங்கத்தின் உள்ளடக்கத்தை விளக்குவார்.
- ஹஜ்ஜதுல் விதாவின் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறுவார்.
- ஹஜ்ஜதுல் விதா பிரசங்கம் நவீன காலத்தில் எவ்வளவு முன்மாதிரிமிக்கது என்பதை விளக்குவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி - 01 :

- "இன்றைய தினம் உங்களுக்காக உங்கள் மார்க்கத்தைப் பூரணமாக்கிவிட்டேன். மேலும் நான் உங்கள் மீது என் அருட்கொடைகளைப் பூர்த்தியாக்கிவிட்டேன்." (5:3) என்ற வசனம் இறங்கிய போது உமர் (ரலி) அவர்கள் அழத் தொடங்கிவிட்டார்கள். இதைப் பார்த்த நபி (ஸல்) அவர்கள், "உமரே! ஏன் அழுகிறீர்? என வினவ மார்க்க அனுஷ்டானங்கள் பூர்த்தியாகாதவரை அதிகமான அமல்களை நாங்கள் செய்யக் கூடியவர்களாக இருந்தோம். இன்று மார்க்கத்தை பூர்த்தியாக்கிவிட்டேன் என்று அல்லாஹ் கூறிவிட்டதால் பூரணமானவை இனிக் குறைவுறுமே தவிர அதிகமாகமாட்டாதே என நினைத்துத் தான் அழுகின்றேன்" என்றார்கள். (தப்ஸீர் இப்னு கஸீர்)
- இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் நபிகளாரின் அன்றைய உரையைப் பற்றிக் கூறும்போது அது நபிகளாரின் மரண சாசனம் எனக் கண்ணீர் மல்கக் கூறினார்கள்.
- இச் சம்பவங்களைக் கூறிப் பாடப்பிரவேசம் செய்து அந்த நிகழ்வுகள் பற்றியும் அது போன்ற வேறு நிகழ்வுகள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
- *ஹஜ்ஜதுல் விதா* எனப்படுவது நபி (ஸல்) அவர்கள் தனது 23 வருட நபித்துவ வாழ்க்கையில் முதலும் கடைசியுமாகச் செய்த ஹஜ் ஆகும். இது விடைபெறும் ஹஜ் எனவும் அழைக்கப்பட்டது.
- இதன்போது நபியவர்கள் அரபா, முஸ்தலிபா, மினா ஆகிய இடங்களில் மிகப் பெரிய பேருரை ஒன்றை நடத்தினார்கள்.
- இப்பேருரையில் 23 வருட காலமாக தனக்கு அருளப்பட்ட இறை வழிகாட்டல்களை (தூதுத்துவத்தை) இரத்தினச் சுருக்கமாக முன்வைத்தார்கள்.
- அன்றைய தினம் தான் அல்லாஹ் தனது சத்திய மார்க்கத்தைப் பூரணப்படுத்தியதாகப் பிரகடனப்படுத்தினார்கள்.

- தனக்கு மரண வேளை நெருங்கி விட்டதாக உணர்ந்து கொண்ட நபியவர்களும் இதனை விடைபெறும் ஹஜ் என்றே குறிப்பிட்டார்கள். இதன் வெளிப்பாடாகவே நபியவர்கள் மக்களை நோக்கி ''மக்களே! இந்த நாளிலே இந்த இடத்திலே இதன் பின்னால் உங்களைச் சந்திப்பேனா? என்பதை அறிய மாட்டேன்.'' என்று கூறினார்கள். ''(தார குத்னி) அறிவிப்பவர் : ஜுபைர் பின் முத்இம்''

**படி - 02 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்கள் வெளிப்படுமாறு நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி - 03 :**

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் தகவல்களைப் பகிர்ந்து கொள்ளுங்கள்.
  - நபியவர்களின் வாழ்வின் இறுதிக் காலகட்டத்திலேயே ஹஜ்ஜதுல் விதா நிகழ்கிறது.
  - இதனை (5:3) எனும் அல்குர்ஆன் வசனமும் நபிகளாரின் வாக்கும் ஸஹாபாக்களின் உணர்வுகளும் தெளிவுபடுத்தியுள்ளன.
  - இது 23 வருடகால வாழ்க்கையின் போது நபியவர்கள் பெற்றுக்கொண்ட இறை வழிகாட்டல்களை இரத்தினச் சுருக்கமாக முன்வைத்துள்ளது.
  - இது சகோதரத்துவம், கொலை, கடனை நிறைவேற்றல், அமானிதத்தைப் பாதுகாத்தல், பெண்கள் நலன் பேணல், வாரிசுரிமைச் சட்டம், வட்டி, இஸ்லாத்தின் அடிப்படைத் தூண்கள், சமத்துவம், தலைமைக்கு கட்டுப்படல், பிறர் உரிமைகளை மதித்தல், அலட்சியமாகக் கருதப்படும் ஆபத்தான பாவச் செயல்கள் பற்றிய விளக்கங்கள், தஜ்ஜால் பற்றிய எச்சரிக்கை போன்ற தலைப்புக்களை உள்ளடக்கியதாக அமைந்திருந்தது.
- மனித வாழ்க்கைக்குத் தேவையான முக்கிய விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

- மாக் களாக வாழ்ந்தவர்களை மக்களாக வாழ வழிவகுத்தது.
- தனது இறப்பிற்குப் பின்பும் தான் உருவாக்கிவிட்ட தோழர்கள், தோழியர்கள் அனைவரும் அவரைப் பின்பற்றுவதில் உறுதியானவர்களாக வாழ வழிவகுத்தது.
- வழிகேட்டின் பால் மக்கள் மீண்டும் நெருங்கிச் செல்ல இடமே வைக்காதளவுக்கு தேவையான அத்தனை விடயங்களையும் விளக்கியது.
- இன்று பெண் உரிமை மற்றும் கோபம், சமாதானம், வட்டியின் விபரீதங்கள் பெரிதும் பேசப்பட்டு வருகின்றது. ஆனால் அன்றே அவற்றை இஸ்லாம் முன்வைத்துள்ளது.
- இவ்வசனம் அருளப் பெற்ற நாளே உலக முஸ்லிம்களுக்கு பெருநாள் தான் என்பதை உமர் (ரலி) அவர்கள் சுட்டிக் காட்டினார்கள்.
- இவ்வாறு நபியவர்கள் அனைத்து விஷயங்களையும் அல்லாஹ் முழுமைப்படுத்திவிட்டதாக மக்களுக்கு அறிவிப்புக் கொடுத்து விட்டு தான் அறிவித்த அனைத்து விடயங்களையும் கேட்டவர்கள் மற்றவர்களுக்கும் எத்திவைக்க வேண்டும் என்ற பொறுப்பையும் சுமத்தி விட்டே சென்றார்கள்.
- மேலும், என்னிடமிருந்து ஒரு வசனத்தைக் கேட்டாலும் கூட அதனையும் பிறருக்கு எத்திவைத்திட வேண்டும் எனவும் கட்டளை பிறப்பித்தார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியங்மகளை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் :**

குழு - 01 : ஹஜ்ஜதுல் விதா நிகழ்த்தப்பட்ட சந்தர்ப்பத்தையும் அது தொடர்பான நிகழ்வுகளையும் கலந்துரையாடி எழுதுக.

குழு - 02 : ஹஜ்ஜதுல் விதா உரையில் உள்ளடக்கப்பட்ட நான்கு விடயங்களை விபரமாக எழுதுக.

குழு - 03 : இவ்வுரையின் முக்கியத்துவத்தைக் கலந்துரையாடி எழுதுக.

குழு - 04 : அந்த அறிவுரைகள் நவீன காலத்துக்கு எவ்வளவு முன்மாதிரிமிக்கவை என்பதை கலந்துரையாடி எழுதுக.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு :**

இறுதி ஹஜ்ஜின் போதனைகளை வாசித்து அதனைப் பிறருக்கும் எடுத்துரைக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேரச்சி மட்டம் :5.2 நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொண்டு அவர்களின் முன்மாதிரிகளைப் பின்பற்றுவார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ள வேண்டியதற்கான காரணங்களை முன்வைப்பார்.
- நபி (ஸல்) அவர்கள் மீது அன்பு கொள்ளவதை வெளிப்படுத்தும் முறைகளை விளக்குவார்.
- *மஹப்பதுல் றஸுல்* லின் வெளிப்பாடுகளை அறிந்து கடைப்பிடிப்பார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி - 01 :** ''ஒரு முறை உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் நபியவர்களின் கையை இறுகப்பிடித்த வண்ணம் அல்லாஹ்வின் தூதரே எனது உயிரைத் தவிர மற்றைய அனைத்தையும் விட நீங்களே எனக்கு மிகவும் விருப்பத்திற்குரியவர் என்றார்கள். அதற்கு நபியவர்கள், இல்லை உமரே! அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் உங்களின் உயிரை விட உங்களுக்கு விருப்பத்திற்குரியவராக ஆகாதவரை என்றார்கள். உடனே உமர் (ரலி) அவர்கள் அல்லாஹ்வின் மீது ஆணையாக நீங்கள் தான் எனக்கு, எனது உயிரையும் விட மிகவும் விருப்பத்திற்குரியவர் என்றார்கள். பின்பு தான் நபியவர்கள் உமரைப் பார்த்து உமரே இப்போது தான் உமது ஈமான் பூரணமாகிவிட்டது என்று பதில் கூறினார்கள்.''

- இச் சம்பவத்தை எழுதிக் காட்சிப்படுத்தி, ஒரு மாணவரைக் கொண்டு வாசிக்கச் செய்த பின் வினாக்களை வினவிக் கலந்துரையாடுவதன் மூலம் பாடப் பிரவேசம் செய்யுங்கள்.
- இது போன்ற வேறு சம்பவங்கள் நிகழ்வுகள் பற்றியும் கலந்துரையாடுங்கள்.
  - திண்ணமாக நம்பிக்கையாளர்களுக்கு அவர்களின் உயிர்களை விட நபி தான் முன்னுரிமை பெற்றவராவார் (அல் அஹ்ஸாப் : 6) என்ற வசனத்தை நினைவுபடுத்துங்கள்.
  - அல்லாஹ்வும், மலக்குமார்களும் நபியை நேசிக்கின்றனர்.
  - அல்லாஹ்வையும், தூதரையும் தனது உயிரை விட நேசிப்பவரே ஈமானைப் பூரணப்படுத்தியவர்.
  - இவ்வுலகில் ஒருவன் யாரை நேசிக்கின்றானோ அவர்களுடனே மறுமையிலும் இருப்பான்.

- சாதாரண மக்களைக் கொண்டு உன்னத சமூகமொன்றைக் கட்டியெழுப்பிய ஆளுமை மிக்க ஒருவரை நேசிப்பது இயல்பானது.
- குறுகிய காலத்திற்குள் ஆன்மீக லௌகீகத் துறைகளில் பாரிய வெற்றிகளை ஈட்டினார்கள்.

**படி - 02 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

**படி - 03 :**

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவிற்குச் சந்தர்ப்பம் அளியுங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்கபூர்வமான கருத்துக்களை வினவிப் பெறுங்கள்.

  பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

  - ரஸூலை உண்மையாக நேசிப்பவரே இம்மையிலும் மறுமையிலும் வெற்றியடைவார்.
  - *ஹுப்புல் ரஸூல்* ஈமானின் நிபந்தனைகளில் ஒன்றாகும்.
  - *மஹப்பதுர் ரஸூல்* மூலமே ஈமானின் சுவையைப் பெற முடியும்.
  - இவ்வுலகில் ரஸூலை நேசிப்பவரே மறுமையில் அவர்களின் நெருக்கத்தைப் பெறுவர்.
  - ரஸூலை முறையாகப் பின்பற்றி நடப்பவர்களையே அல்லாஹ்வும் நேசிக்கிறான்.
  - ரஸூலுக்கு மாறு செய்பவர் அல்லாஹ்வுக்கும் மாறு செய்தவராவார்.
  - உண்மையான விசுவாசி தனது உயிரையும் விட ரஸூலையே அனைத்திலும் முதன்மைப்படுத்துவார்.

- ரஸூலின் உடலில் ஒரு முள் தைப்பதைக்கூட ஏற்கவோ அல்லது அனுமதிக்கவோமாட்டார்.
- ஒரு விசுவாசி எப்போதும் அல்லாஹ்வின் ரஸூலுக்காகவும், அவரின் குடும்பத்தினர், தோழர்களுக்காகவும் பிரார்த்தித்துக் கொண்டிருப்பார்.
- நபி (ஸல்) அவர்களுக்கும் அவர்களது குடும்பம், ஸஹாபாக்கள் மற்றும் உண்மையான விசுவாசிகளுக்கும் எதிராக முன்வைக்கப்படும் அனைத்துக் குற்றச்சாட்டுக்களுக்கும் அறிவுபூர்வமாகப் பதில் கூறுவார்.
- நபியை நேசிக்கின்ற, பின்பற்றுகின்ற ஒவ்வொருவரதும் உடை, நடை செயற்பாடுகள் யாவும் முன்மாதிரிமிக்கதாகவே அமைதல் வேண்டும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் :**

**குழு - 01** : மஹப்பதுர் ரஸூல் என்பது ஈமானின் நிபந்தனை என்பதை வலியுறுத்தும் ஹதீஸைக் கலந்துரையாடிப் பிழையின்றி எழுதுங்கள்.

**குழு - 02** : நபியவர்களின் மீது அன்பு கொள்ள வேண்டியதற்கான வேறு காரணங்கள் மூன்று எழுதுங்கள்

**குழு - 03** : நபியவர்களின் மீது அன்பை வெளிப்படுத்திய நபித் தோழர்களில் ஒருவரின் சம்பவத்தைத் திரட்டி எழுதுங்கள்.

**குழு - 04** : மஹப்பதுர் ரஸூலின் வெளிப்பாடுகள் நான்கினைக் கலந்துரையாடி அட்டவணைப்படுத்துங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு**

பெற்றோரின் கண்காணிப்புடன் நபிகளாரின் வாழ்க்கை வரலாறுகளை வாசிப்பதற்கும் வாசித்தவற்றை வீட்டில் உள்ளவர்களுக்கு எடுத்துரைக்கவும் வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 5.0 : நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேரச்சி மட்டம் 5.3 : உம்மஹாத்துல் மு.ஃமினீன் களின் வாழ்வு முறையை அறிந்து கூறுவார்**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- உம்மஹாத்துல் மு.ஃமினீன்களான ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி), மைமூனா (ரழி), உம்மு ஹபீபா (ரழி), ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி) ஆகியோரின் குடும்பப் பின்னணியைக் கூறுவார்.
- நபி (ஸல்) அவர்களை மணமுடிக்கு முன் அவர்கள் நால்வரினதும் மணவாழ்வு பற்றி எழுதிக்காட்டுவார்.
- நால்வரும் நபி (ஸல்) அவர்களை மணமுடித்த பின்னணியை சொல்லிக்காட்டுவார்.
- நால்வரினதும் முன்மாதிரிகளைப் பின்பற்றி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி - 01 :** பலதார மணம் என்றால் என்ன? அதனை இஸ்லாம் அனுமதித்துள்ளமைக்கான காரணங்கள் யாவை? நபி (ஸல்) அவர்கள் ஏன் பல பெண்களை முடித்தார்கள்? என்ற வினாக்களை எழுப்பி மாணவர்களின் சிந்தனையைக் கிளறி கருத்துப் பரிமாறுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்தி கலந்துரையாடுங்கள்.
  - ஸைனப் பிந்தி ஜஹஷ் (ரழி) அவர்களின் குடும்பப் பின்னணியை எடுத்துக்காட்டுங்கள்.
  - உம்மு ஹபீபா (ரழி) அவர்களின் குடும்பப் பின்னணியை எடுத்துக்காட்டுங்கள்.
  - ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி) அவர்களின் குடும்பப் பின்னணியை எடுத்துக்காட்டுங்கள்.
  - மைமூனா (ரழி) அவர்களின் குடும்பப் பின்னணியை எடுத்துக்காட்டுங்கள்.
  - நால்வரதும் முதற் கணவன்மாரின் பெயர்களை சுட்டிக்காட்டி அவர்கள் மரணித்த, விவாக விலக்குச் செய்த, பிரிந்த சந்தர்ப்பங்களை எடுத்துக்காட்டுங்கள்.
  - நால்வரையும் நபி (ஸல்) அவர்கள் மறுமணம் செய்ததற்கான காரணங்களை எடுத்துக்காட்டி கருத்துப்பரிமாறுங்கள்.
  - நால்வரினது வாழ்வில் காணப்பட்ட நலன்களையும், முன்மாதிரிகளையும் எடுத்துக்காட்டி அவற்றின் தேவையை உணர்த்துங்கள்.

**படி - 02 :**

- மாணவர்களை 4 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்துங்கள்.
- மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3**

- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.
- மேலதிக தகவல்களை முன்வைத்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவினருக்குச் சந்தர்ப்பமளியுங்கள்.

- பின்ரும் கருத்துக்களை முன்வைத்து கலந்துரையாடுங்கள்

    - ஸைனப் பிந்தி ஜஹ்ஷ் (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களின் முத்தலிப் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். ஹிஜ்ரத்துக்கு 30 ஆண்டுகளுக்கு முன் இஸ்லாத்தை ஏற்றார்கள். ஸைனப் (ரழி) அவர்களின் முதற் கணவர் ஸைத் இப்னு ஹாரிதா என்ற நபி (ஸல்) அவர்களின் வளர்ப்பு மகனாவார். இவரது திருமணத்தின் மூலம் வளர்ப்பு மகன் சொந்த மகன் போலன்னன். இஸ்லாத்தில் வேறுபாடில்லை என்பது காண்பிக்கப்பட்டது.
    - இவர் இரக்க சுபாவமும், அழகும், புத்திகூர்மையும் உடையவர். இறையச்சம், நாணம், விருந்தோம்பல் முதலிய பண்புகளை உடையவர்.
    - நபி(ஸல்) அவர்கள் வபாத்தான பின் உயிருடனிருந்த அன்னையருள் முதலாவதாக மரணித்தவர்.
    - மதிப்பிலும், தகுதியிலும் எனக்கு நிகரானவர் என அன்னை ஆயிஷா (ரழி) அவர்களால் பாராட்டப்பட்டார்.
    - **உம்மு ஹபீபா (ரழி) அவர்கள்** அன்று குறைஷிகளின் தலைவராக இருந்த அபூஸுப்யானின் மகளாவார். இவரது பெயர் *ரம்லா* என்பதாகும். இவரது திருமணத்தின் மூலம் குடும்ப ரீதியான இணக்கம் ஏற்பட்டது.
    - இவரின் முதற் கணவர் உபைதுல்லா பின் ஜஹ்ஷ் ஆவார். இவர் முதலில் ஓர் 'ஹனீப்' ஆக இருந்தவர். கணவனுடன் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் சென்றார்.
    - இவரது திருமணத்தின் மூலம் கணவன் மதம் மாறி மரணித்ததால் விதவையான ஒருவருக்கு வாழ்வளிக்கப்பட்டது. இஸ்லாத்தின் எதிரியாக இருந்த அபூஸுப்யானுடன் நெருக்கம் ஏற்பட வழிகிடைத்தது.
    - இவர் விருந்தோம்பும் பண்பு உடையவர். அழகும், கல்வித் தேர்ச்சியும் உடையவர்.

- இவரது கணவர் கிறிஸ்தவராவார், குடிகாரனாகவும் மாறினார். இதனால் அன்னையார் மிகுந்த துக்கத்துக்குள்ளானார். அல்லாஹ்விடம் முறையிட்டார். அவருடைய கவலைக்கு ஆறுதல் கூறும் விதத்தில் ஹபஷாவுக்கு ஹிஜ்ரத் வந்து றுகையா (ரழி), அஸ்மா (ரழி), லைலா (ரழி) ஆகியோர் பங்கு கொண்டார்கள். அவரது நிலைபற்றி நபி (ஸல்) அவர்கள் நஜ்ஜாஸி மன்னனுக்கு அறிவித்தார். அவன், அவரை நபி (ஸல்) அவர்களுக்கு மணமுடித்துக் கொடுத்தார். காலித் பின் ஸஈத் பின் ஆஸ் (ரழி) வலியாக நின்றார். மன்னன் மஹராக 400 தீனார்கள் வழங்கினார்கள்.

- இவர் ஹி. 44இல் 53 ஆம் வயதில் வபாத்தானார்கள்.

- **ஸைனப் பிந்தி குஸைமா (ரழி)** ஹி.மு. 13ஆம் ஆண்டில் பிறந்தார். இவர் பிறவியில் தாராள குணம் படைத்தவர். *உம்முல் மஸாகீன்* எனப்பட்டார்.

- இவரது முதற் கணவர் அப்துல்லா பின் ஜஹ்ஷ் ஆவார். அவர் உஹத் களத்தில் மரணிக்க நபி (ஸல்) அவர்கள் ஸைனப் (ரழி) அவர்களை மணமுடித்தார்கள். விதவைகளை வாழ்வளிக்கத் தூண்டும் வகையில் இவரது திருமணம் அமைந்தது. எனினும் இரு மாதங்களில் மரணமானார். கதிஜா (ரழி) அவர்களுக்குப் பின் மரணமான முதலாமவராவார்.

- **மைமூனா பிந்தி ஹாரிஸ் (ரழி)** ஹிலாலி கோத்திரத்தைச் சேர்ந்தவர். இவரது இயற்பெயர் பஸ்ரா என்பதாகும். நபி (ஸல்) அவர்களே மைமூனா எனப் பெயரிட்டார்கள்.

- இவரின் முதற் கணவர் மஸ்ஊத் பின் அம்ர் இவரை மணந்திருந்து விலக்குச் செய்திருந்தார். இவர் ஹி. 7 இல் நபி (ஸல்) அவர்களை மணந்தார்கள்.

- இவரது சகோதரி உம்முல் பழ்ல் அப்பாஸ் (ரழி) அவர்களின் மனைவியாவார். அவரது வேண்டுகோளுக்கேற்பவே நபி (ஸல்) அவர்கள் இவரை மணமுடித்தார்கள்.

- இவர் இறையச்சமுடையவராக இருந்தார். இரத்த உறவை மதித்து நடந்தார்.

- ஹுதைபியா உடன்படிக்கை நிகழ்ந்த அடுத்த ஆண்டில் (ஹி.7) உம்றாவுக்குச் சென்று மீளும்போது இவருக்கு நபி (ஸல்) அவர்களுடன் திருமணம் நிகழ்ந்தது. குறைஷிகள் முஸ்லிம்களை மூன்று நாட்களுக்கு மேல் மக்காவில் நிற்க அனுமதிக்காததால் மக்காவுக்கு வெளியே *ஸரப்* எனுமிடத்தில் திருமணமும், வலிமாவும் நிகழ்ந்தது.

- ஸைனப் (ரழி) அவர்களும் மைமூனா (ரழி) அவர்களும் தாய்வழி சகோதரிகளாக இருந்ததால் ஸைனப் (ரழி) இறந்த பின்பே நபி (ஸல்) அவர்கள் மைமூனாவை மணமுடித்தார்கள்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் :**

குழு - 01 : அன்னை ஸைனப் பிந்தி ஜஹ்ஷ், உம்மு ஹபீபா ஆகிய இருவரதும் பரம்பரைச் சிறப்பு பற்றி கேட்டறிந்து எழுதுங்கள்.

02. : ஸைனப் பிந்தி குஸைமா (ரழி) அவர்கள் நபி (ஸல்) அவர்களை மணந்தமைக்கான காரணங்களையும், அவரது திருமணம் தொடர்பாக எழுந்த எதிர்ப்பலைகளையும் கேட்டறிந்து எழுதுங்கள்.

03. : நான்கு அன்னையர்களிலும் காணப்பட்ட நற்பண்புகளைக் கண்டறிந்து அவற்றின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுங்கள்.

04. : நபி (ஸல்) அவர்கள் இந்நால்வரையும் மணமுடித்தமைக்கான காரணங்களைக் கேட்டறிந்து அவற்றை நியாயப்படுத்துங்கள்.

**தேர்ச்சி : 5.0 நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேர்ச்சி மட்டம் 5.4 ஸஹாபாக்களின் முன்மாதிரிகளை எடுத்துக் கூறுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள் :**

- ஸலாஹுத் தீன் அய்யூபி, முகம்மத் அல்பாதிஹ், தாரிக் பின் ஸியாத் ஆகியோரின் வீர வரலாற்றைச் சுருக்கமாக விளக்குவார்.
- வீரர்களின் முன்மாதிரிமிக்க நற்பண்புகளைக் கடைப்பிடிப்பதன் அவசியத்தை உணர்ந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பார்.
- அநீதிக்கு எதிராக வீரத்துடன் போராடும் நற்பண்பைப் பின்பற்றுவார்.
- உண்மையான வீரர்களின் வரலாற்றை மதித்து அவர்களைக் கண்ணியப்படுத்துவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி - 01 :




- மேலுள்ள வரைபடத்தைக் காட்டி கருத்துப் பரிமாறுங்கள்.
- இப்பிரதேசத்தின் சர்வதேச முக்கியத்துவத்தை எடுத்துக் காட்டுங்கள்.
    - மூன்று கண்டங்களுக்கு மத்தியில் உள்ளமை
    - மேற்கத்திய- கீழைத்தேய வணிகப் பாதையில் அமைந்துள்ளமை
    - கிழக்கு, மேற்கு அரசியல், சமூக, சமய போராட்டகளமாக இருந்தமை

- கொன்ஸ்தாந்தி நோபிள் (இஸ்தம்பூல்), ஜெரூஸலம், கோர்டோவா நகர்களின் இஸ்லாமிய முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுங்கள்.
    - பைஸாந்திய பேரரசின் தலைநகராக அமைந்தமை
    - இஸ்லாத்தின் எழுச்சிக்கு தடையாக இருந்தமை
    - அதனைத் தம்வசப்படுத்த நபி(ஸல்) அவர்கள் விரும்பியமை
    - பைத்துல் மக்தஸ், புனித தலங்களில் ஒன்றாக அமைந்துள்ளமை
    - நபி (ஸல்) அவர்களின் மி.்.ராஜ் பயணம் இங்கிருந்தே ஆரம்பித்தமை
    - ஹி. 17ல், உமர் (ரழி) அவர்களின் காலத்தில் முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் வந்த ஜெரூஸலம் ஹி.471 இல் மேற்கத்திய அரசுகள் தமது கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததால் அதனை மீட்கவேண்டிய தேவை இருந்தமை.
    - ஐரோப்பாவில் இஸ்லாம் அறிமுகமாகவேண்டிய தேவையிருந்தமை
    - உரிமையிழந்தவர்களுக்கு உதவி செய்து அராஜகத்தை ஒழிக்க வேண்டுமென்ற மானிட நலன் ஓம்பப்பட்டமை.

**படி 2**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.
- கலந்துரையாடிக் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

**படி 3**

- ஒவ்வொரு குழுவும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- குறை நிரப்புப் செய்து விரிவுபடுத்துவதற்கு முதலில் அதே குழுவுக்கு வழங்குங்கள்.
- ஏனைய குழுக்களின் ஆக்க பூர்வமான கருத்துக்களையும் வினவிப் பெறுங்கள்.
- பின்வரும் கருத்துக்களை முன்வைத்துக் கலந்துரையாடுங்கள்.
- இம்மூன்று நகரங்களுடன் தொடர்புடைய தாரிக் பின் ஸியாத் (ஹி: 50-120) ஸலாஹுூதீன் ஐயூபி (532-589) முஹம்மத் அல்பாதிஹ் (831-886) ஆகியோரின் வரலாற்றோட்டத்தைச் சுருக்கமாக முன்வையுங்கள்.
- தாரிக் வட ஆபிரிக்காவில் தர்சீர் பகுதியில் பொறுப்பாளராக இருந்தமையால், ஸ்பானிய மன்னன் நோட்ரிசின் அராஜகத்தை ஒழிக்க, வட ஆபிரிக்க உமையா கவர்னர் மூஸா பின் நுஸைரின் தளபதியாக அனுப்பப்பட்டார். குறைந்த வீரர்களுடன் தூரப் பிரதேசத்திலுள்ள ஒரு நாட்டைக் கடல் கடந்து தாக்க முற்பட்டார். அவரது வீரம், தந்திரம், படையினருக்கான

அறிவுரை முதலானவற்றில் தேர்ச்சி பெற்றிருந்தார். ஐரோப்பாவில் இஸ்லாத்தை அறிமுகப்படுத்திய பெருமைக்குரியவர்.

- ஸலாஹுத்தீன் ஐயூபி, இரண்டு தசாப்தங்களாக மேற்கத்திய ஆக்கிரமிப்பாளர்களை எதிர்கொண்டார். ஹித்தீன் போரில் (ஹி 565) ஜெரூஸலத்தை முஸ்லிம்களின் கட்டுப்பாட்டில் கொண்டு வந்ததார், எதிரிகளுக்கும் இரக்கம் காட்டினார். மனிதாபிமானம், எளிமையான வாழ்வு ஆகிய முன்மாதிரிகளைக் கொண்டிருந்தார்.
- முஹம்மத் அல் பத்தாஹ், நபி (ஸல்) அவர்களின் ஆசீர்வாதத்தைப் பெற முன்வந்த ஒருவர், கொன்ஸ்தாந்தி நோபிளை கைப்பற்றினார். (கி.பி. 1453) எதிரிகளோடு நேர்மையாக நடந்து கொண்டிருந்தார், பன்மொழித் தேர்ச்சி பெற்றிருந்தர், பல்கலை அறிவு பெற்றிருந்தார். ஐரோப்பாவில் இஸ்லாமிய பூமியை (இஸ்தம்பூல்) உருவாக்கிய பெருமைக்குரியவர்.
- இவர்கள் இளைஞர்களுக்கான முன்மாதிரிகளைக் கொண்ட மாவீரர்கள். இவர்களை முன்னுதாரணமாகக் கொள்வது இளமைக்கு கிடைத்த கௌரவமாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீட்டு மதிப்பீட்டு அறிவுறுத்தல்கள் :**

மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத் தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரத்தை வழங்குங்கள்.

குழு 1 : கோர்டோவா, ஜெரூஸலம், இஸ்தன்பூல் நகர்களின் முக்கியத்துவத்தை எடுத்துக்காட்டுங்கள்.

குழு 2 : தாரிக் பின் ஸியாத், ஸலாஹுத்தீன் ஐயூபி, முஹம்மத் அல்பாதிஹ் ஆகியோரின் வரலாற்றோட்டத்தை சுருக்கமாக முன்வையுங்கள்.

குழு 3 : தாரிக் , ஸலாஹுத்தீன், முஹம்மத் அல் பாதிஹ் ஆகிய மூவரிலும் காணப்பட்ட சிறந்த பண்புகளைத் தொகுத்து எழுதுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு**

குறிப்பிட்ட ஆளுமைகள், நகர்கள் பற்றி வீட்டாருடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களைச் சுருக்கமாக எழுத வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி : 5.0 நபிமார்கள், ஸஹாபாக்கள், முன்னோர்களின் வாழ்க்கை முறைகளைக் கற்று அவர்களது முன்மாதிரிகளை ஏற்று நடப்பார்.**

**தேரச்சி மட்டம்: 5.3 நபி மூஸா (அலை), நபிஈஸா (அலை) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை விபரிப்பார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- நபி மூஸா (அலை) மற்றும் நபி ஈஸா (அலை) அவர்களை அறிமுகப்படுத்துவார்.
- அவர்களில் காணப்பட்ட தனித்துவப் பண்புகளைச் சுட்டிக் காட்டுவார்.
- நபி மூஸா (அலை) அவர்களின் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்கான போராட்டத்தை விளக்குவார்.
- நபி ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் தூதர் என்பதை நிறுவுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி - 01 : பின்வரும் அல் குர்ஆன் வசனங்களை உணர்வுபூர்வமாக ஓதிக் காண்பித்து சிந்தனைக் கிளர்வை ஏற்படுத்துங்கள்.

- ‘மேலும் முன்னர் மற்றொரு முறையும் நிச்சயமாக நாம் உம்மீது பேரருள் புரிந்துள்ளோம். உம் தாயாருக்கு அறிவிக்க வேண்டியதை அறிவித்த நேரத்தை (நினைவு கூருவீராக!) அவரை (குழந்தையை)ப் பேழையில் வைத்து (அப்பேழையை) நதியில் போட்டுவிடும்’ பின்னர் அந்த நதி அதைக் கரையிலே கொணர்ந்து எறிந்துவிடும், அங்கே எனக்குப் பகைவனும் அவருக்குப் பகைவனுமாகிய ஒருவன் அவரை எடுத்துக் கொள்வான் (எனப்பணித்தோம்) மேலும், (மூஸாவே!) நீர் என் கண் முன்னே வளர்க்கப்படுவதற்காக உன்மீது அன்பைப் பொழிந்தேன்.’’ (20:37-39)
- ‘‘நிச்சயமாக மர்யமுடைய மகனாகிய ஈஸா அல் மஸீஹ் அல்லாஹ்வின் தூதர்தான். இன்னும் ‘‘குன்’’-ஆகுக என்ற அல்லாஹ்வின் வாக்காக(அதனால்) உண்டானவராகவும் அவர் இருக்கிறார் அதைஅவன் மர்யமிடம் போட்டான். எனவேஅவரும் அவனிடமிருந்துவந்தஓர் ஆன்மாதான்.’’ (4:171)

  இந்த அல்குர்ஆன் வசனங்களை ஓதி அதன் கருத்துக்களைக் கூறிப் பாடப் பிரவேசம் செய்யுங்கள்.

- பின்வரும் விடயங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்.

**மூஸா (அலை)**

- பிர்அவுனும் அவனது படையினரும் பிறக்கும் ஆண் குழந்தைகளையெல்லாம் கொலை செய்கின்ற சமயத்தில் நபி மூஸா (அலை) இம்ரான் என்பவருக்கு மகனாகப் பிறந்தார்.

- பிறந்தது முதல் மறைமுகமாக தாயின் அனுசரணையில் பக்குவமாக வளர்க்கப்பட்டார்.
- அந்தத் தாய் தன் குழந்தையின் உயிர்மீது அச்சம் கொணடிருந்தவேளை அல்லாஹ்வின் வஹிக்கிணங்க அதைப் பெட்டியில் வைத்து நதியில் விட்டுவிட்டார்.
- பிர்அவுனின் மாளிகைக்குப் பெட்டி கொண்டு செல்லப்பட்டதும் அதில் உள்ள குழந்தை மீது அன்புகொண்டு அக்குழந்தையைத் தாமே வளர்க்க முடிவுசெய்தனர்.
- குழந்தைக்குப் பாலூட்டுவதற்காக 6 பெண்கள் வரவழைக்கபட்டபோதும் அவர்களிடம் பால் அருந்த அக்குழந்தை மறுத்துவிட்டது.
- 7வது பெண்ணாக அக்குழந்தையின் உண்மையான தாய் வரவழைக்கப்பட்டபோது அத்தாயிடமே அக்குழந்தை பால் குடித்து வளர்ந்தது.
- பால் குடிகாலம் முடிவடைந்ததும் தாய் பிள்ளையை மாளிகையிலேயே விட்டுவிட்டுச் சென்றாள் அத்தாய்.
- குழந்தை வளர்ந்து வாலிபத்தை அடைந்தபோது அரசனின் கெடுதிகளையும் அநியாயங்களையும் கண்டு கோபமும் வெறுப்பும் கொண்டது.
- பின்பு வாலிப வயதில் இயலாதவர்களுக்கும், அநீதி இழைக்கப்பட்வர்களுக்கும் தானாக முன்வந்து உதவியது.
- ஒரு நாள், சண்டையில் ஈடுபட்ட இருவருக்கு மத்தியில் நீதிசெலுத்துவதற்காக ஒருவரை தாக்கியவேளை தாக்கப்பட்டவர் இறந்துவிட்டார்.
- இதனால் இவர் அவ்வூரை விட்டு வேறு ஊர் செல்ல முடிவு செய்தார்.
- தான் தவறுதலாகச் செய்த இக்குற்றத்திற்காக மனம் வருந்தி அல்லாஹ்விடம் மன்னிப்பைப் பெற்றுக் கொண்டார்.
- பின்பு மத்யன் சென்று அங்கு சுஐப் நபியின் மகளைத் திருமணம் செய்து வாழ்ந்தார்.
- 10 வருடங்களின் பின் மீண்டும் மிஸ்ர் நோக்கிவரும் வழியில் அல்லாஹ்விடமிருந்து வஹி அருளப்பெற்று நபியாகத் தெரிவானார்.
- தமது தூதை எத்திவைக்க சகோதரரான ஹாரூனையும் அழைத்துக் கொண்டு பிர்அவுனிடம் சென்றார்.
- பிர்அவுன் மூஸாவின் பிரச்சாரத்தை ஏற்க மறுத்ததோடு மூஸாவையும் அவரை ஏற்றுக்கொண்டவர்களையும் அழித்தொழிக்கத் துணிந்தான்.
- அல்லாஹ் அவர்களைப் பாதுகாத்து பிர்அவுனையும் அவனது படையையும் கடலில் மூழ்கடித்து அழித்துவிட்டான்.

**ஈஸாநபி**

- ''குன்'' என்ற அல்லாஹ்வின் வாக்கால் மர்யமின் வயிற்றில் உருவாகி தந்தையின்றிக் கன்னித் தாய்க்கு அற்புதமாகப் பிறந்தார்.
- அவரின் பிறப்பு அல்லாஹ்வின் ஆற்றலின் வெளிப்பாடாகவே அமைந்தது.
- அவருக்கு கலிமதுல்லாஹ் (அல்லாஹ்வின் வாக்கு) ரூஹுல் குத்ஸ் (பரிசுத்த ஆத்மா) என்ற சிறப்புப் பெயர்களை அல்லாஹ்வே வழங்கினான்.
- அவரின் பிறப்பு அனைவரினதும் கவனத்தை ஈர்க்கும் ஒரு விசித்திர நிகழ்வாகும்.
- தன் தாயாருடன் வாதிட்ட சமூகத்துக்கு கைக் குழந்தையாக இருந்துகொண்டு நிதானமாகவும் பொறுப்புடனும் பதில் கூறியமை மற்றுமொரு அதிசயமாகும்.
- ஆணவம் கொண்ட யூதர்களுக்கு மத்தியில் ஈஸா நபியவர்கள் மிகக் கொடிய சவால்களை எதிர்கொண்டார்கள்.
- ரிஸாலத்தைக் கொடுத்து அவர்களை அல்லாஹ் கண்ணியப்படுத்தினான். (அந்நிஸா :171,172)
- அவர்களுக்கு அல்லாஹ் பல அற்புதங்களை வழங்கி இருந்தான்.
- அல்குர்ஆன் ஈஸா நபியை அல்லாஹ்வின் அடியானாகத் தோன்றிய ஒரு நபியாகவும் ரஸுலாகவும் சிலாகித்துக் கூறியுள்ளது. (ஆலு இம்ரான் : 55)
- ஈஸா நபியை ஏற்று அவர்களின் பிரசாரப் பணிக்குப் பக்க பலமாக நின்றோர் **ஹவாரிய்யூன்** என அழைக்கப்பட்டனர்.
- ஈஸா நபியின் இறுதிநிலை பற்றி அல் குர்ஆன் பின்வருமாறு பிரஸ்தாபிக்கின்றது.
- ''ஈஸாவைத் தன்னளவில் அல்லாஹ் உயர்த்திக் கொண்டான். யூதர்கள் அவரைப் போன்ற ஒருவரையே சிலையில் அறைந்தனர்''.
- ஈஸா நபியவர்கள் மறுமைக்கு முன் மீண்டும் பூமிக்கு இறங்குவார்கள் என்பதை நபிகளாரின் ஹதீஸ்கள் உறுதிப்படுத்துகின்றன.
- இச் செய்திகள் யாவும் அவர்கள் அல்லாஹ்விடத்தில் உயிரோடு இருக்கிறார்கள் என்பதைநிருபிக்கின்றன.

படி - 02 :

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.

- மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

படி - 03 :

- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதேகுழுவுக்கும் பின்னர் குறைநிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.

பின்வரும் விடயங்களைமையப்படுத்திமாணவர்களுடன் பகிர்ந்துகொள்ளுங்கள்.

- மூஸா நபியின் பிறப்புக்கு முன்னிருந்து இறப்புவரைக்குமுள்ள பல விடயங்களை அல் குர்ஆன் எடுத்துக் கூறியுள்ளது.
- அல்லாஹ் ‘‘தூர்’’ மலையில் மூஸா நபிக்கு மிக அண்மையிலிருந்தே ரிஸாலத்தை வழங்கினான். (19:51,52)
- அவர்களின் வாழ்க்கையில் நிகழ்ந்த பல சம்பவங்களை, அல் குர்ஆன் பல அத்தியாயங்களில் பல்வேறு அமைப்புக்களில் மீட்டியுள்ளது.
- மூஸா நபியவர்களின் வாழ்க்கை நிகழ்வுகளைச் சிலபோது விரிவாகவும் சிலபோது சுருக்கமாகவும் அல் குர்ஆன் முன்வைத்துள்ளது.
- மூஸா நபியவர்கள் நாகரிக வளர்ச்சி கண்ட பனூ இஸ்ராயீல்களான மாபெரும் சமூகமொன்றையே எதிர்கொண்டார்கள்.
- மூஸா நபியை அவர்களது பிறப்பு முதலே எதிரிகளிடமிருந்து பாதுகாத்துப் பராமரிக்கும் பொறுப்பை அல்லாஹ்வே ஏற்றிருந்தான்.
- ஈஸா நபியின் பிறப்பும், குழந்தைப் பருவத்தில் அவர் பேசியதும் அவருக்கே உரியதாகும்.
- ஈஸா நபியின் ரிஸாலத்தை அம்மக்கள் ஏற்கச் செய்வதற்காக தனித்துவமான பல அற்புதங்களை அவர்கள் மூலம் அல்லாஹ் நிகழ்த்திக் காட்டினான்.
- ஈஸா நபி அவர்கள், அல்லாஹ்வின் பால் உயர்த்தப்பட்டுள்ளமையும் அவருக்கே உரிய சிறப்பும் தனித்துவமுமாகும்.
- நிதானம், கபடமின்மை, துணிவு, மனவலிமை, இரக்கசுபாவம் போன்றன இவரது ஆளுமைக்கு வலுவூட்டின.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளைஅடிப்படையாகக் கொண்டு மதிப்பட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் :**

குழு - 01 : நபி மூஸா (அலை) அவர்களின் பிறப்பு முதல் திருமணம் வரையிலான வாழ்க்கைக் கட்டங்களைத் தொகுத்து எழுதுங்கள்.

குழு - 02 : நபி ஈஸா (அலை) அவர்கள் அல்லாஹ்வின் தூதரும் அடியாருமாவார் என்பதை நிரூபித்துக் காட்டுங்கள்.

குழு - 03 : நபி மூஸா (அலை) அவர்கள் ஏகத்துவத்தை நிலைநாட்டுவதற்காக மேற்கொண்ட போராட்டங்கள் மூன்றினை விளக்குங்கள்.

குழு - 04 : நபி ஈஸா (அலை) அவர்களிடம் காணப்பட்ட தனித்துவப் பண்புகளைத் தொகுத்து எழுதுங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு**

பெற்றோரின் துணையுடன் நபி ஈஸா (அலை) அவர்களின் மீள் வருகைபற்றிக் கூறப்பட்டுள்ள ஹதீஸ்களைத் திரட்டி எழுதுங்கள்.

அல்லது

கிறிஸ்தவர்கள் ஈஸா நபியைப் பற்றிப் புரிந்துவைத்துள்ள பிழையான கொள்கையைத் தொகுத்து எழுதுக.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில்முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேரச்சி மட்டம் 6.1 : வீண் விரயத்தைத் தவிர்த்து சிக்கனத்தைக் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- சேமிப்பின் முக்கியத்துவம் குறித்து இஸ்லாமியப் போதனைகளை எடுத்துரைப்பார்.
- வீண்விரயம் செய்வதனால் ஏற்படும் இம்மை, மறுமைப் பாதிப்புக்களை விளக்குவார்.
- சேமிப்பின் மூலம் கிடைக்கும் நன்மைகளை எடுத்துரைப்பார்.
- வாழ்வில் சிக்கனம் பேணி வீண்விரயத்தைத் தவிர்த்துக் கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி - 01 :

- சேமிப்பின் முக்கியத்துவம் தொடர்பாக வினவி மாணவர்கள் கூறும் கருத்துக்களை எழுத்திக் கொண்டு பாடப் பிரவேசம் செய்யுங்கள்
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்
- இஸ்லாம் எளிமையை விரும்புகிறது.
- நபி (ஸல்) அவர்கள் எளிமையையே விரும்பினார்கள். அவர்களது வாழ்வு எளிமையாகவும், இயற்கையோடு இணைந்ததாகவும் அமைந்திருந்தது.
- கலீபா அபூ பக்ர் (றழி) அவர்கள் பொது திறைசேரியில் இருந்து மிகவும் சொற்பமான சம்பளத்தையே பெற்றார்கள். தமது வாழ்வை மிக எளிமையாக நடத்தினார்கள்
- சிக்கனமும் சேமிப்பும் வாழ்வின் வெற்றிக்கு அடிப்படையான பண்புகளாகும்.
- சிக்கனம் சேமிப்புக்கு இட்டுச் செல்லுகிறது. சேமிப்பு முதலீட்டுக்கு இட்டுச் செல்கிறது. முதலீடு நாட்டின் அபிவிருத்திக்கு இட்டுச் செல்கிறது.

படி - 02 :

- மாணவர்களை நான்க குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.

- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும், போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதேகுழுவுக்கும் பின்னர் குறைநிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.

படி - 03 : பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- உண்ணுங்கள் பருகுங்கள் வீண்விரயம் செய்யாதீர்கள். ஏனெனில் நிச்சயமாக அல்லாஹ் வீண் விரயம் செய்வோரை நேசிப்பதில்லை. (17: 31)
- அளவு கடந்து வீண் விரயம் செய்யாதிருப்பீராக. நிச்சமாக வீண் விரயம் செய்வோர் ஷைத்தானின் சகோதரராக இருக்கின்றனர். (17:26-27).
- நபி (ஸல்) அவர்கள் ஈச்சம் மரத்தின் ஓலையினால் செய்யப்பட்ட விரிப்பின் மீதே படுத்துறங்கினார்கள். இதனால் அவர்களது விலாப்புறங்களில் அதன் அடையாளம் பதிந்திருந்தது. இதனைக் கண்ணுற்ற தோழர்கள் உங்களுக்கு நாம் மெத்தை ஒன்றைத் தயார் செய்து தருகிறோம் என்று கூறினார்கள். அப்போது நபிகள் (ஸல்) அவர்கள் இவ்வுலகில் தனது நிலை பற்றி விளக்கினார்கள். பிரயாணி ஒருவன் மரநிழலில் தங்கி விட்டுச் செல்வது போன்றே இவ்வுலகில் தான் இருந்து விட்டுச் செல்ல விரும்புவதாகக் அவர்கள் கூறினார்கள்.
- அத்தியவசியத் தேவைக்கு அதிகமானவை ஆடம்பரமானவையாகும். ஆடம்பரம் சிக்கனத்திற்கும் சேமிப்புக்கும் எதிரானவை.
- சிக்கனத்தை எல்லா சந்தர்ப்பங்களிலும் கடைப்பிடிக்க வேண்டும் என்பது வலியுறுத்தப்பட்டுள்ளது. வணக்க வழிபாடுகளில் கூட சிக்கனத்தைக் கடைப்பிடிக்குமாறு அறிஞர்கள் போதித்துள்ளனர். உதாரணமாக உழுச் செய்யும் போது ஒவ்வோர் உறுப்பையும் மூன்று முறை கழுவுவது சுன்னத்தாகும். அதற்கு மேலதிகமாக விரயம் செய்வது மக்ரூஹ் என அறிஞர்கள் தீர்பளித்துள்ளமை சிக்கனத்தின் முக்கியத்துவத்தை உணர்த்துகிறது.
- அவ்வாறே மிகக் கருமியாக வாழ்வதையும் இஸ்லாம் விரும்பவில்லை. ஈயாது கருமியாகவோ எல்லாவற்றையும் அள்ளிக் கொடுத்துவிட்டு வறுமையில் உழல்பவராகவோ இருக்க வேண்டாம் என நபி (ஸல்) அவர்கள் அறிவுறுத்தினார்கள்.
- சிக்கனமும் சேமிப்பும் ஒவ்வொரு தனிநபருக்கும் இன்றியமையாதவை. தனது வருமானம் முழுவதையும் செலவழிப்பது திட்டமிடல் இல்லாத

வாழ்வின் அறிகுறியாகும். அவ்வாறே குடும்ப வாழ்விற்கும் சிறந்த திட்டமிடலுக்கான அடிப்படைகளில் ஒன்றாக சிக்கனமும் சேமிப்பும் கருதப்படுகிறது.

- நாட்டின் அபிவிருத்திக்குச் சிக்கனமும் சேமிப்பும் முக்கிய பங்காற்றுகிறது. சிக்கனம் சேமிப்பை ஊக்குவிக்கின்றது. சேமிப்புக்கள் முதலீடாக மாறுகின்றன. முதலீடுகள் அபிவிருத்தி நடவடிக்கைகளை ஊக்குவிக்கின்றன.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் :**

குழு - 01 : சிக்கனமாக வாழ வேண்டியதன் முக்கியத்துவத்தை விளக்குங்கள்.

குழு - 02 : நபி (ஸல்) அவர்களின் எளிமையான வாழ்வு தொடர்பான தகவல்களைத் திரட்டுங்கள்.

குழு - 03 : சிக்கனமும் சேமிப்பும் நாட்டின் அபிவிருத்திக்கு எவ்வாறு பங்காற்றுகிறது என்பதை விளக்குங்கள்.

குழு - 04 : தமது வாழ்வை எளிமையாக அமைத்துக் கொண்ட கலீபாக்களின் முன்மாதிரிகளை விளக்குங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு**

சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதன் மூலம் வாழ்வில் உயர்ந்த மனிதர்கள் பற்றிய தகவல்களைப் பெற்றோருடன் கலந்துரையாடித் தொகுப்பொன்றை முன்வைக்க வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 6.0 : பொருளீட்டல் தொடர்பாக இஸ்லாமிய போதனைகளையும் குடும்ப வாாழ்வு தொடர்பாக இஸ்லாமிய கருத்தையும் விளங்கி அவற்றை வாழ்வில் முறையாகக் கடைப்பிடித்து வருவார்.**

**தேரச்சி மட்டம் 6.2 : ஹலால் - ஹராம் தொடர்பாக அறிந்து அவற்றை வாழ்வில் கடைப்பிடிப்பார்.**

**பாடவேளைகள் : 2**

**கற்றல் பேறுகள் :**

- ஹலால், ஹராம் என்ற பதங்களின் விளக்கத்தை எடுத்துரைப்பார்.
- ஹலால், ஹராம் என்பவற்றின் பரப்பை அறிந்து விளக்குவார்.
- ஹலாலைப் பேணுவதன் மூலமும் ஹராத்தைத் தவிர்ப்பதன் மூலமும் கிடைக்கும் ஆன்மிக லௌகீகப் பயன்களைப் பட்டியற்படுத்துவார்.
- வாழ்வில் அனைத்து சந்தர்ப்பங்களிலும் ஹராத்தில் இருந்து தவிர்ந்து ஹலாலைப் பேணி ஒழுகுவார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி - 01 :

- ஹலாலானவை மற்றும் ஹராமானவை என்பவற்றை மாணவர்களிடம் கேட்டறிந்து அவற்றைப் பட்டியலபடுத்துங்கள். இவை ஏன் ஹலால், ஏன் ஹராம் என அடையாளப்படுத்தப்படுகின்றன என்பதை கலந்துரையாடுங்கள்.
- பின்வரும் அம்சங்களை மையப்படுத்திக் கலந்துரையாடுங்கள்
- ஹலால் என்பது அனுமதிக்கப்பட்டவற்றையும் ஹராம் என்பது அனுமதிக்கப்படாதவற்றையும் குறிக்கும்.
- அல்லாஹ் ஹலாலானவற்றையே அதிகமாக வைத்துள்ளான்.
- ஹலாலானவற்றைப் பேணி ஹராத்தை தவிர்க்கும்படி ஷரீஆ கட்டளையிட்டுள்ளது.
- உணவு, பானம், உடை, கொடுக்கல் வாங்கல், உறவுகள் என பல அம்சங்களிலும் ஹலால் ஹராம் பேண வேண்டும்.
- ஹராமானவை பௌதீக வாழ்வையும் ஆன்மீக வாழ்வையும் பாதிக்கும்.

படி - 02 :

- மாணவர்களை மூன்று குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.

- போஷிக்கத்தக்க கருத்துக்களை முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதேகுழுவுக்கும் பின்னர் குறைநிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.

  பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் பகிர்ந்து கொள்ளுங்கள்.

- ஒன்றை ஹலால் ஆக்குவதும் ஹராம் ஆக்குவதும் அல்லாஹ்வின் அதிகாரத்திற்கு உட்பட்டதாகும்.
- ஹலால் மிகத் தெளிவானது, ஹராமும் மிகத் தெளிவானது. இவை இரண்டுக்கும் இடையில் சந்தேகத்திற்கு இடமான பல அம்சங்கள் உண்டு அவற்றைத் தவிர்ந்து கொள்ள வேண்டும்.
- பொதுவாக அனைத்தும் ஹலாலானவையாகும். அடிப்படையில் இறைவன் அனைத்தையும் ஹலாலாக ஆக்கியுள்ளான். அவற்றிலிருந்து சிலவற்றைத் தெரிவு செய்து ஹராமாக்கியுள்ளான். எனவே, ஹராமாக்கப்பட்டவற்றை நாம் அட்டவனைப்படுத்த முடியும். அவை மிகக் குறைவானைவை.
- ஹலாலின் வட்டம் மிகவும் விசாலமானது. ஹராத்தின் வட்டம் குறுகியது. ஹலாலானவற்றை எண்ணி முடிக்க முடியாது. ஹராமானவற்றை எண்ணி முடிக்கலாம்.
- உணவு, பானம் என்ற எல்லைக்கு அப்பாலும் ஹலால், ஹராம் வரையறைகள் காணப்படுகின்றன. அவற்றைப் பேணி நடக்க வேண்டும்.
- ஹலால் - ஹராம் பேணாதவர்களுக்கு கிடைக்கும் மிகப் பெரிய தண்டனை அவர்களுடைய துஆக்கள் ஏற்றுக் கொள்ளப்படாமையாகும்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளைஅடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் :**

குழு - 01 : ஹலால், ஹராம் பற்றி விளக்கி உமது பிறமத நண்பனொருவனுக்கு கடிதம் ஒன்று வரையுங்கள்.

குழு - 02 : ஹலால், ஹராம் பற்றி விளக்கி வந்துள்ள ஐந்து ஹதீஸ்களைத் திரட்டி எழுதுங்கள்.

குழு - 03 : ஹலால் ஹராம் பேணி நடப்பதன் மூலம் கிடைக்கக்கூடிய நற்பயன்கள் யாவை என பட்டியல்படுத்துங்கள்.

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு**

ஹராத்தை தவிர்த்து நடப்பதன் அவசியத்தை உணர்த்தக்கூடிய வரலாற்று நிகழ்வொன்றைப் பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்.

**தர்ச்சி 7.0 : ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேரச்சி மட்டம் 7.1 : பிற சமயங்களை மதித்து அவற்றுக்குரிய கண்ணியத்தை வழங்குவார்.**

**பாடவேளைகள் : 4**

**கற்றல் பேறுகள் :**

- பிறசமயங்கள் பற்றிய இஸ்லாத்தின் போதனைகளைப் பட்டியல் படுத்துவார்
- பிறசமயங்களுக்கும் அவற்றைப் பின்பற்றுவோருக்கும் உரிய உரிமைகளை விளங்கிச் செயற்படுவார்.
- பிற சமயத்தின் கிரியைகளில் கலந்துகொள்வது தொடர்பான இஸ்லாமிய வழிகாட்டல்களைப் பின்பற்றுவார்.
- பிறசமயத்தவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளை இனங்கண்டு கூறுவார்.
- பிறசமயத்தவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்குப் பங்களிப்புச் செய்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

**படி - 01** :
- ஸூறதுல் காபிரூன் யை ஓதிக் காண்பித்து அதன் மொழி பெயர்ப்பை வாசித்துக் காண்பித்து அதன் கருத்துக்களை வினவுங்கள்.
- பின்வரும் அம்சங்களை முன்னிறுத்தி கலந்துரையாடுங்கள்.
- இன மத மொழி வேறுபாடு என்பது இறைநியதியாகும்.
- இஸ்லாம் ஒவ்வொரு மனிதனுக்கும் மத சுந்தந்திரத்தை வழங்கியுள்ளது. இதனை அங்கீகரித்து வாழ்வது முஸ்லிம்களின் பொறுப்பாகும்.
- இஸ்லாம் சம்பூரண வழிகாட்டல்களைக்கொண்ட வாழ்வியல் நன்னெறி. எனவே, பிற சமயங்கள் தொடர்பான இஸ்லாமிய போதனைகளும் எல்லாக்காலத்துக்கும் பொருந்தும் வகையில் அமைகின்றன.
- இஸ்லாம் தவிர்ந்த சிந்தனைகளும் அவற்றைப் பின்பற்றுகின்றவர்களும் உலகில் வாழ்கின்றனர் என்பதையும் இஸ்லாம் உறுதி செய்கின்றது.
- யூதர்கள், கிறிஸ்தவர்கள், இணைவைப்பவர்கள் குறித்து அல்குர்ஆன் அதிகமாகப் பேசுகின்றது
- சமய நல்லிணக்கம் சகவாழ்வு பற்றி இஸ்லாம் போதித்துள்ளது.

**படி - 02 :**

- மாணவர்களை நான்கு குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து விரிவுபடுத்த முதலில் அதேகுழுவுக்கும் பின்னர் குறைநிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.

**படி - 03 :** பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- ஒவ்வொருவருக்கும் தத்தமது மார்க்கத்தைப் பின்பற்றும் உரிமையும் சுதந்திரமும் இருப்பதை இஸ்லாம் அங்கீகரிக்கின்றது.
  ‘‘மார்க்கத்தில் நிர்ப்பந்தம் இல்லை’’ (அல்பகரா:256)

  ‘‘உங்களுக்கு உங்களுடைய மார்க்கம், எனக்கு என்னுடைய மார்க்கம்’’ (அல்காபிரூன் :6)

- இலங்கை பல்லின மக்கள் வாழ்கின்ற பல சமயங்கள் பின்பற்றப்படுகின்ற பன்மொழி பேசப்படுகின்ற ஒரு நாடாகும். எனவே இஸ்லாம் கூறுகின்ற சமயங்கள் தொடர்பான போதனைகளைப் பேணுவது கடமையாகும். நல்லிணக்கத்தை உருவாக்கும் பிரதான வழிகளுள் இதுவும் ஒன்றாகும்.
- முஸ்லிம்களாகிய நாம் எமது மார்க்கத்தை வாழ்வில் முழுமையாக பின்பற்றினாலும் அடுத்த சமயங்களைக் கட்டாயம் மதிக்க வேண்டும்.
- ஒருமுறை நபியவர்கள் யூதன் ஒருவனின் ஜனாஸா ஊர்வலம் கொண்டு செல்லப்படும்போது எழுந்து நின்றார்கள். ஸஹாபாக்கள் காரணம் கேட்ட போது அதுவும் ஓர் ஆன்மாவல்லவா? என்று பதில் சொன்னார்கள்.
- சமயச் சுதந்திரம் என்பது அடிப்படை மனித உரிமை என்பதை இஸ்லாம் அங்கீகரிக்கிறது.
- இஸ்லாம் ஆட்சி செய்த சமயத்தில் முஸ்லிமல்லாதவர்கள் கௌரவமாக வாழ்ந்துள்ளனர். இவர்கள் *திம்மிக்கள்* எனப்படுவர். இவர்களது உரிமைகளை கட்டிக்காப்பது இஸ்லாமிய அரசின் தலையாய பணியாக இருந்தது.
- அவர்களிடம் குறைவான வரியே அறவிடப்பட்டது. அவர்களது

மதஸ்தலங்களை, சமய நிறுவனங்களை முஸ்லிம் ஆட்சியாளர்கள் பாதுகாத்துள்ளனர். சமயக் கடமைகளைச் சுதந்திரமாக நிறைவேற்ற இடமளித்தனர்.

- முஸ்லிம்களாகிய நாம் எமது சமய உணர்வுகளைப் பேணியும், பிறரது உரிமைகளைக் கண்ணியப்படுத்தியும் நடக்க வேண்டும்.

- பிற சமய உணர்வுகளையும், கலாசாரங்களையும் மதித்து நடத்தல் என்ற பெயரில் எமது அகீதாவுக்கு பங்கம் ஏற்படாதவாறு பாதுகாத்துக் கொள்வது கட்டாயமாகும்.

- இலங்கை போன்ற பல் சமய நாடொன்றில் ஒவ்வொரு சமயத்தவரும் அடுத்த சமயத்தவர்கள் குறித்து நல்லெண்ணத்தையும், புரிந்துணர்வையும் கட்டியெழுப்ப வேண்டும். ஒருவரை ஒருவர் மதித்து, கௌரவித்து நடந்து கொள்ள வேண்டும்.

- ஒவ்வொரு சமயத்தவரும் பிற சமயத்தவரின் கலாசார அம்சங்களை தெரிந்து, மதித்து நடக்க வேண்டும். அடுத்தவர் கலாசாரத்தை, சமயத்தை பரிகசிப்பது, இழிவுபடுத்துவது, அவற்றுக்குப் பங்கம் இழைப்பது அனைத்தும் கட்டாயம் தவிர்க்கப்படல் வேண்டும்.

- சிலபோது எமக்கு அருகில் முஸ்லிமல்லாத சகோதரர்கள் வாழும்போது அல்லது நாம் கற்கின்ற, தொழில் செய்கின்ற இடங்களில் வாழும்போது அவர்களுக்குரிய பூரண மத சுதந்திரத்தை கட்டாயம் வழங்கி அவர்களது உணர்வுகளைப் புரிந்து உணர்ந்து செயற்படவேண்டும்.

- எமது மார்க்கம் அங்கீகரிக்காத அனைத்தும் நிராகரிக்கப்பட வேண்டியவையே. : (முஸ்லிம்)

- யார் இன்னொரு சமூகத்தை பின்பற்றுகிறாரோ அவர் அவர்களை சார்ந்தவரே (அபூதாவூத்)

- முஸ்லிம்களுக்கு மார்க்க கிரியைகள் உள்ளது போலவே முஸ்லிம் அல்லாதவர்களுக்கும் அவர்களது சமயத்தில் கட்டாயம் பின்பற்றவேண்டிய சடங்குகள் சம்பிரதாயங்கள் காணப்படுகின்றன. அவற்றைப் பின்பற்றுவதற்கு அவர்களுக்கு பூரண உரிமை உள்ளது.

- பிறசமயத்தவர்களின் கிரியைகளில் நாம் ஈடுபடுவது முற்றுமுழுதாக தவிர்க்கப்பட வேண்டும்.

- இஸ்லாம் போதிக்கின்ற உயர்ந்த விழுமியங்கள், பண்பாடுகள், பழக்கவழக்கங்கள் மூலமும் நாளாந்த நடவடிக்கைகள் வியாபார கொடுக்கல் வாங்கல் மூலமும் மிகச்சிறந்த அழகிய முன்மாதிரிகளைக் காட்டுவதன் மூலம் இன நல்லிணக்கத்தை வளர்க்க முடியும்.

- இனநல்லிணக்கம் சகவாழ்வு போன்றவற்றின் மூலம் ஐக்கியத்தையும்

ஒற்றுமையையும் கட்டிக்காக்க வேண்டும். ஆனால் கலந்து வாழ்கின்ற போது அவர்களது சமய விடயங்களில் ஈடுபட்டுக் கரைந்துபோவது ஆபத்தானது. அவர்களது சமயத்தை மதிப்பது என்பது ஒன்று, அவர்களது சமய கிரியைகளை பின்பற்றுவது இன்னொன்று என்பதை தெளிவாக விளங்க வேண்டும்.

- பௌத்தர்களின் தாய்மொழியான சிங்களத்தைக் கற்பது அதன் மூலம் அவர்களுடன் உரையாடுவது அவர்களது இன்ப துன்பங்களில் கலந்து கொள்வது போன்றன இன நல்லிணக்கத்தை உருவாக்கும்.

- பாரிய அனர்த்தங்கள் ஏற்படுகின்ற போது மனிதாபிமான உதவிகளை வழங்குவதற்காக விரைந்து செல்லல், அவசியம் ஏற்படுகின்ற பொழுது உதவிகளை வழங்குதல், கடன் கேட்டால் கொடுத்துதவுதல், தொந்தரவு செய்யாமல் இருத்தல், நோய் விசாரிக்க விரைந்து செல்லுதல், தேச முக்கியத்துவம் வாய்ந்த அம்சங்களில் ஏனைவர்களோடு ஒன்றித்து தாய் நாட்டின் நலன்காத்தல் போன்ற விடயங்களைக் செய்வதன்மூலம் இன நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்பலாம்.

**தரவிருத்தி உள்ளீடுகள்.**

பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப, பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் :**

குழு - 01 : பிறசமயங்கள் பற்றிய இஸ்லாத்தின் போதனைகளைப் பட்டியல்படுத்துங்கள்

குழு - 02 : பிறசமயங்களுக்கும் அவற்றைப் பின்பற்றுவோருக்கும் உரிய உரிமைகளை விளக்குங்கள்

குழு - 03 : பிறசமயத்தவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்கான வழிமுறைகளை இனங்கண்டு எழுதுங்கள்

குழு - 04 : பிறசமயத்தவர்களுடன் நல்லுறவைக் கட்டியெழுப்புவதற்குப் உங்களால் எவ்வாறு பங்களிப்புச் செய்ய முடியும் என்பதை விளக்குங்கள்

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு**

பிற சமயத்தரவர்களுடனான தொடர்புகளின் போது அவர்களுடன் கௌரவமாகவும் மரியாதையாகவும் பழகுவதற்கு தேவையான வழிகாட்டல்களை பெற்றோருடன் கலந்துரையாடித் திரட்ட வழிப்படுத்துங்கள்.

**தேர்ச்சி 7.0 : ஒவ்வோர் அம்சம் தொடர்பாகவும் இஸ்லாத்திற்கென தனியானதொரு பார்வை உண்டென்பதைப் புரிந்து அதனடிப்படையில் அனைத்தையும் நோக்கித் திறனாய்வார்.**

**தேரச்சி மட்டம் 7.2 : தேசப்பற்றை வெளிப்படுத்துவதோடு தேசத்திற்கான தமது கடமைகளை நிறைவேற்றுவார்.**

**பாடவேளை : 2**

**கற்றல் பேறுகள் :**

- தேசத்தின் மீது பற்றுக் கொள்வதன் முக்கியத்துவத்தை விளக்குவார்.
- தேசத்தின் மீது பற்றுக் கொள்வது தொடர்பாக இஸ்லாமிய வழிகாட்டல்களை விபரிப்பார்.
- தேசத்தின் மீதான தமது கடமைகள் என்ன என்பதைப் பட்டியற்படுத்துவார்.
- தேசதின் மீது பற்றுக் கொள்வதன் வெளிப்பாடுகளை இஸ்லாமிய வழிகாட்டல்களுக்கேற்ப அமைத்துக்கொள்வார்.

**பாடத்தைத் திட்டமிடுவதற்கான அறிவுறுத்தல்கள்:**

படி - 01 :

- தாய்மண்ணை நேசிப்பது மனிதனின் இயல்பான உணர்வாகும்.அது இறைநியதியும் தான்.இறைதூதர் முஹம்மத் (ஸல்) அவர்கள் தான் பிறந்த மக்காவை அதிகம் நேசித்தார்கள். மக்காவை விட்டும் ஹிஜ்ரத் செய்ய வேண்டிய இக்கட்டான நிலை ஏற்பட்டபோது கண்ணீர்மல்க கூறிய சோகம் நிறைந்த வலி தருகின்ற வார்த்தைகள் இவை. ''மக்காவே,நீ உலகிலேயே எனக்கு மிகவும் விருப்பமான பூமி அல்லாஹ்விடத்தில் கண்ணியமான தேசம். சமூகம் என்னை விரட்டியிருக்கவிட்டால் இம்மண்ணை விட்டும் நான் சென்றிருக்க மாட்டேன்''(முஸ்னத் அபூ ய.்.ளா)
- இஸ்லாமிய போதனைகளில் தேசப்பற்று என்பது 'ஹுப்புல் வதன்' முக்கிய அம்சம் ஒன்றாகும்.
- நபியவர்களிடம் தேசப்பற்றும் தேச உணர்வும் அதிகமாக இருந்தது.முதல் வஹி கிடைத்த போது ஏற்பட்ட அதிர்ச்சியைத் தணிக்கும் வகையில் ஆறுதல் கூறிய வரகா பின் நௌபல் 'எதிர்காலத்தில் நீங்கள் மக்காவை விட்டும் விரட்டப்படுவீர்கள்'என்று கூறிய உடனே அவர்கள் என்னை வெளியேற்றுவார்களா?என்று கவலையுடன் கேட்ட நிகழ்வு இதனை உறுதி செய்கிறது.
- ஸஹாபாக்களிடமும் தேச உணர்வு காணப்பட்டது. பிலால் (ரழி) அவர்கள் தேச உணர்வு குறித்து கவிதை படித்துள்ளார்கள்.
- மக்காவின் பள்ளத்தாக்கில் ஓர் இரவேனும் தூங்கும் நாள் எனக்கு வராதா?
- தேசப்பற்றும் தேசிய உணர்வும் இருப்பதாலே நாடுகள் வளம் பெறுகின்றன.(உமர் ரழி)

**படி - 02 :**

- மாணவர்களை 4 குழுக்களாகப் பிரித்து ஒவ்வொரு குழுவுக்கும் குழுத்தேடியாய்வுப் பத்திரத்தை வழங்குங்கள்.
- மாணவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் கருத்துக்களை வெளிப்படுத்த நெறிப்படுத்துங்கள்.
- மாணவர்களின் குழுச் செயற்பாட்டை அவதானித்து உறுதிப்படுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவையும் குழுச் செயற்பாட்டில் ஈடுபடுத்தி வழிகாட்டுங்கள்.
- குழு அறிக்கையை வகுப்பில் சமர்ப்பிக்க ஆயத்தமாகுமாறு அறிவுறுத்துங்கள்.
- ஒவ்வொரு குழுவுக்கும் தமது அறிக்கையைச் சமர்ப்பிக்கச் சந்தர்ப்பம் வழங்குங்கள்.
- மேலதிகமான விடயங்களையும் போஷிக்கத்தக்க கருத்துக்களையும் முன்வைத்து, விரிவுபடுத்த முதலில் அதேகுழுவுக்கும் பின்னர் குறைநிரப்புச் செய்ய ஏனைய குழுக்களுக்கும் இடமளியுங்கள்.

**படி - 03 :** பின்வரும் விடயங்களை மையப்படுத்தி மாணவர்களுடன் கலந்துரையாடுங்கள்.

- இஸ்லாம் இயற்கை மார்க்கம்.இயல்புகளை நேசிக்கும் மார்க்கம் எனவே தேசப்பற்றை அங்கீகரிக்கிறது. அதனைத் தூண்டுகிறது.
- தேசப்பற்று என்பது மனித இயல்பூக்கத்தை சார்ந்தது இதில் காபிர்கள் முஸ்லிம்கள் என்ற வேறுபாடுகளின்றி அனைவரும் உடன்படுகின்றனர் (கலாநிதி யூஸுஃப் அல்கர்ளாவி)
- தேசபக்தியை ஆதரிக்கும் வகையில் பாரிய குற்றங்களை இழைத்தோருக்கு இஸ்லாம் வழங்கும் கொடிய தண்டனையாக கொலை செய்வது அல்லது நாடுகடத்துவதைக் காணலாம். (அந்நிஸா:66)
- ஒரு நாட்டின் சுதந்திரத்துக்கும் விடுதலைக்கும் அயராது பாடுபடுவது மனிதாபிமானம் போலவே மார்க்கம் சார்ந்த கடமையுமாகும்.
- நாடு ஆபத்துக்கோ அந்நிய ஆக்கிரமிப்புக்கோ உட்படுகின்ற பொழுதோ அதனை எதிர்த்துக் களமிறங்கிப் போராடுவது முஸ்லிம்களின் கடமையாகிறது.
- தாய் நாட்டில் நாம் எமது தேசபக்தியை தேசப்பற்றை வெளிப்படுத்துவது கட்டாயமாகின்றது.
- நாட்டின் சகல சட்டங்களையும் மதிப்பது. தேசியகீதம், தேசிய கொடி போன்றவற்றுக்குக் செய்ய வேண்டிய கடமைகளை செய்வது அவசியமாகும்.
- தேசத்தின் அபிவிருத்திக்கும் எழுச்சிக்கும் பாடுபடுவது, தேச நலனில்

அக்கறை கொள்வது, நாட்டின் பொதுச் சொத்துக்களை பாதுகாப்பது அவசியமானது.

- நாட்டை விருப்புடன் நேசித்து அதனை வளப்படுத்தி சுபீட்சத்தின்பால் இட்டுசெல்வதில் துணைநிற்பது கட்டாயமானது.

- சமாதானம், சகவாழ்வு, சுபீட்சம், நல்லிணக்கம், புரிந்துணர்வு போன்றவற்றை மேலோங்கச் செய்தல்.

- பன்மைத்துவ ஒழுங்குகளை பேணுவதன்மூலம் நீதியையும் நியாயத்தையும் நிலைநாட்டி நாட்டின் சகல விவகாரங்களிலும் கவனம் செலுத்தி நாட்டுவாழ் மக்களுக்கு அமைதியான வாழ்வை உருவாக்குவதில் காத்திரமான பங்களிப்பு செய்தல்.

**தரவிருத்தி உள்ளீடுகள்**

- பொது அறிவுறுத்தல்களுக்கேற்ப பொருத்தமானவற்றைப் பயன்படுத்துங்கள்.

**கணிப்பீடு மதிப்பீட்டிற்கான அறிவுறுத்தல்கள் :**

- கற்றல் பேறுகளை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீட்டு நியமங்களை உருவாக்கிக் கொள்ளுங்கள்.

**குழுத்தேடியாய்வு அறிவுறுத்தல் பத்திரம் :**

குழு - 01 : தேசத்தின் மீது பற்றுக் கொள்வதன் அவசியத்தை வலியுறுத்துங்கள்.

குழு - 02 : தேசத்திற்காக நமது கடமைகள் எவை என்பதைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு - 03 : தேசத்தின் அபிமானத்திற்குப் பாதிப்புச் செய்யும் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துங்கள்.

குழு - 04 : தேசத்தின் மீது பற்றுக் கொள்ளச் செய்யும் செயற்பாடுகளைப் பட்டியற்படுத்துங்கள்

**வீட்டில் பின் தொடர் செயற்பாடு**

முக்கிய தேசிய தினங்களில் வீடுகளிலும் சுற்றாடலிலும் நடைபெறும் தேசிய நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனுபவங்கள் தொடர்பாக பெற்றோருடன் கலந்துரையாடி எழுதிவர வழிப்படுத்துங்கள்.